# காவல் சட்டம் 1861
# THE POLICE ACT V OF 1861

குற்றங்களைத் தடுப்பதற்கும் நடந்தகுற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கும் போலீஸ் நிர்வாகத்தை திறம்பட ஒழுங்குபடுத்துவதற்கும் ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும். இதில் ஒரு மாநில அரசின்கீழ் செயல்படும் காவல்துறை நிர்வாகமானது. ஒரே ஒரு நிர்வாகமாக இயங்குவது பற்றியும், காவல் அலுவலரின் பணிகள், அதிகாரங்கள் மற்றும் விதிமுறைகள் பற்றி மாநில அரசு அவ்வப்போது அமுலாக்குவதற்கு உதவிபுரிகிறது.

## பிரிவு - 2

ஒருமாநில அரசின்கீழ் நிர்வாகிக்கப்படும் காவல்துறை என்பது எல்லா வகைகளிலும் ஒரே நிர்வாகமாக செயல்படுகிறது. இதற்கு ஒரே வழிமுறையில் காவல் அதிகாரிகளையும், காவலர்களையும் உத்தியோகத்தில் அமர்த்துவதற்கு அதிகாரம் அளிக்கிறது.

இதற்காக காவலர்களின் ஊதியங்களையும் மற்றும் நிபந்தனைகளையும் மாநில அரசாங்கமே முடிவெடுக்கிறது.

## பிரிவு - 7

### வேலையில் அமர்த்துதல், வேலையைவிட்டு நீக்குதல் போன்றவை

இந்திய அரசியல் சட்டம் ஆர்டிக்கல் 311-படி மாநில அரசாங்கமானது அவ்வப்போது இந்தச் சட்டப்படி சட்டங்களை சீர்திருத்தவும், புதியதாக அமைக்கவும் காவல் துறையின், காவல் துறையில் தலைமை அதிகாரிகள், துணை தலைமை அதிகாரிகள், உதவி துணை அதிகாரிகள். மாவட்ட கண்காணிப்பாளர்கள், தங்கள்கீழ் பணிபுரியும் காவலர்களை எந்த சமயத்திலும் அவர்கள் தங்கள் கடமையிலிருந்து தவறும்போது, வேலை நிறுத்தம் செய்யவோ அல்லது தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கம் செய்யவோ அல்லது பதவி இறக்கம் செய்யவோ அதிகாரம் படைத்துள்ளனர் ;

கடமையில் அஜாக்கிரதையாக பணிபுரியும் தம்கீழ் வேலை செய்யும் காவலர்களை கீழே கண்ட தண்டனைகளில் எதையேனும் ஒன்றையோ அல்லது மேலுள்ள தண்டனைகளை கொடுக்கவோ அதிகாரம் படைத்துள்ளனர்.

அ. ஒரு மாத சம்பளத்திற்கு மிகாத அபராதம்.

ஆ. 15 நாட்களுக்கு மிகாதவாறு பாசறையில் அடைத்து வைத்தல், தண்டனை கவாத்துடனோ அல்லது இல்லாமலோ, கூடுதல் காவல் காத்தல் பணியோ, சிறிய பணியோ அல்லது வேறு எந்த வேலையோ கொடுத்தல்.

இ. நன்னடத்தைக்கான ஊதியத்தை நிறுத்தி வைத்தல்.

ஈ. பொறுப்புள்ள அலுவல்களில் இருந்து மாற்றுதல்.

## பிரிவு - 8

## காவலர்களுக்கு கொடுக்கப்படும் சான்றிதழ்

நான்காவது பிரிவில் சொல்லப்பட்டவரை தவிர (தலைமை அதிகாரிகள்) மற்ற எல்லா காவல் அலுவலர்களும் வேலையில் அமர்த்தும்போது அந்த மாவட்டத்தின் தலைமை அதிகாரியின் கையொப்பத்துடன் அவரது அலுவலக முத்திரை உடையதுமான ஒரு சான்றிதழ் கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு சான்றிதழ் பெறப்பட்ட ஒவ்வொருவரும் காவலர் அல்லது காவல் துறைக்கு கொடுக்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும், பணிகளையும், அனுகூலங்களையும் அடைந்தவராவார்.

ஒரு காவல் அலுவலர் எப்போது ஒரு காவல் அலுவலராக இல்லாமல் ஆகிறாரோ அப்போது முதல் மேற்கண்ட சான்றிதழ் பயனற்றதாகிவிடும். மேற்கண்ட காவலர் தனக்கு கொடுக்கப்பட்ட சான்றிதழைத் திருப்பி பெறுவதற்கு அதிகாரம் படைத்த காவல்துறை அதிகாரியிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

தற்காலிகமாக வேலை நிறுத்தம் செய்யப்படும் காவல் அலுவலர்கள் அதே காரணத்துக்காக காவல் அலுவலரல்ல என்று எடுத்துக்கொள்ள முடியாது. பணியில் இருந்து நிறுத்தி வைக்கப்படும் நாட்களில் ஒரு காவலருடைய அதிகாரங்கள், கடமைகள், அனுகூலங்கள் எல்லாம் நிறுத்திவைக்கப்படும். ஆனால் அவருடைய கடமைகள், ஒழுக்கங்கள், தண்டனைகள் அவர் அலுவலக வேலையில் இருக்கும்போது இருந்ததுபோல தொடரும்..

பிரிவு - 9

## காவல் அலுவலர் இரண்டுமாத காலத்திற்கு முன்னால் எழுத்து மூலமாக அனுமதிபெறாமல் ராஜினாமா செய்யக்கூடாது

எல்லா காவல் அலுவலரும் தான் செய்யும் காவல் பணியை அந்த மாவட்ட கண்காணிப்பாளரின் அல்லது அதற்காக அதிகாரம் உள்ள மற்ற ஒரு அதிகாரியின் உத்தரவு இல்லாமல் அல்லது மாவட்ட கண்காணிப்பாளரின் அனுமதி பெறாமல் தன்னுடைய பணியை ராஜினாமா செய்ய அதிகாரம் இல்லை. அதற்கு குறைந்த அளவு இரண்டுமாத காலத்திற்கு மேலாக உள்ள காலஅளவில் எழுத்து மூலமாக ஒப்புதல் பெற்றிருத்தல் வேண்டும்.

பிரிவு - 10

## காவல் அதிகாரிகள் வேறு பணிகள்செய்ய தடை

எந்த ஒரு காவல் அலுவலரும் தன்னுடைய முதல்நிலை தலைமை அதிகாரியின் ஒப்புதல் இல்லாமல் காவல் பணியை தவிர வேறு எந்தவிதமான பணிகளிலோ அல்லது அலுவலகங்களிலோ பணி செய்யக்கூடாது.

பிரிவு - 22

## காவலர் எப்பொழுதுமே பணியில் உள்ளதாகக் கருதப்படுவதுடன் மாவட்டத்தின் எந்த பகுதிக்கும் வேலை செய்ய கடமைப்பட்டவர்

எல்லா காவல் அலுவலரும் இந்த சட்டத்தில் கூறப்பட்டுள்ளவைகளுக்கு ஒப்பாக, எல்லா நேரத்திலும் பணியில் உள்ளதாக கருதப்படுவர் மற்றும் அந்த மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் பணிசெய்ய எந்த சமயத்திலும் அமர்த்தப்படுவர்.

பிரிவு - 23

### காவலர் கடமைகள்

ஒவ்வொரு காவல் அலுவலரும் சட்டபூர்வமாக, அதிகாரம் உள்ளவரிடமிருந்து பெறப்பட்ட எல்லாவிதமான பிடியாணைகளையும், ஆணைகளையும் ஒழுங்காக காலதாமதமின்றி நிறைவேற்ற கடமைப்பட்டவர் ஆவார். பொதுஜன அமைதிக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய தகவல்களை சேகரித்து அதற்குரிய காவல் அதிகாரியிடம் தொடர்புகொள்ள கடமைப்பட்டுள்ளனர். எந்தவிதமான குற்றங்களும், பொது தொல்லைகளும் நடவாமல் தடுப்பதற்கும், நடந்துவிட்ட குற்றங்களைக் கண்டுபிடித்து குற்றவாளிகளை நீதி மன்றத்திற்கு முன்னால் கொண்டு வருவதற்கும், சட்டப்படி தன்னால் கைது செய்வதற்கு தகுந்த ஆதாரம் இருக்கும்போது கைது செய்யப்பட வேண்டியவர்களை தாமதமின்றி கைது செய்வதற்கும், சட்டபூர்வமாக பிடியாணையின்றி மதுபானக்கடைகள். சூதாட்டக்கட்டிடங்கள், மற்றும் பொது ஜனங்கள் ஓய்வெடுக்கும் கட்டிடங்கள் ஆகியவைகளில் உள்ளே சென்று ஆய்வு நடத்தவும், அங்கே தகாதமுறையில் சட்டத்தை மீறி நடப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் கடமைப்பட்டுள்ளனர்.

## பிரிவு - 25

### காவலர் அனாதையாக கிடக்கும் பொருட்களை ஒப்புக் கொள்ளுதல்

உரிமையாளர் இல்லாத, அனாதையாக காணப்படும் சொத்துக்களை, அதை காணும் ஒவ்வொரு காவல் அலுவலரும் தன் பொறுப்பில் ஏற்று மேற்கண்ட பொருட்களின் பட்டியல் தயார் செய்து அந்த மாவட்ட நீதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேற்படி பெற்றுக்கொண்ட நீதிபதி விசாரணையின் பின்பு உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கு தகுந்த கட்டளை காவல் அலுவலர் மூலம் கொடுக்கப்பட வேண்டும்.

## பிரிவு - 28

### காவலர், காவலராக இல்லாத போது சான்றிதழ் கொடுக்க மறுத்தல்

காவலராக அமர்த்தப்பட்டவர்கள் காவலர் இல்லாமல் ஆகும் சந்தர்ப்பங்களில் இந்த சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி தன்னுடைய பணிக்காக கொடுக்கப்பட்ட சான்றிதழையோ, சீருடைகளையோ, இதர பொருட்களையோ, திருப்பி கொடுக்க மறுத்தால் நீதிபதியின் முன்னால் 200 ரூபாய் மிகாத அபராதமும் அல்லது ஆறு மாதத்திற்கு மிகாத வெறுங்காவலோ அல்லது கடுங்காவலோ அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

## பிரிவு - 29

### கடமையில் அஜாக்கிரதையாக இருந்தால் அதற்கு தண்டனை

ஒவ்வொரு காவல் அலுவலரும் தன்னடைய கடமையில் மீறி நடந்தாலோ, சட்டப்படியான உத்தரவுகளை அதனை ஏற்படுத்தும் அதிகாரம் படைத்தவர்கள் கொடுக்கின்ற உத்தரவுகளை வேண்டுமென்றே அஜாக்கிரதையாக நிறைவேற்றாமல் இருந்தாலோ, தனக்கு கொடுக்கப்பட்ட பணியிலிருந்து உத்தரவில்லாமல் தன்னை விலகிக்கொண்டாலோ அல்லது இரண்டு மாதம் முன்அறிவிப்பு இல்லாமல் வேலையில் இருந்து நின்றாலோ அல்லது தகுந்த காரணமில்லாமல் வேலையிலிருந்து விடுப்பு எதுவும் இல்லாமல் நின்றுவிட்டாலோ அல்லது விடுப்பு முடிந்தவுடன் வேலைக்கு வராமல் விட்டாலோ அல்லது தனக்குள்ள காவல் பணியைதவிர வேறு எதாவது வேலைகளில் ஈடுபட்டாலோ அல்லது கோழைத்தனமான செய்கையில் நடந்து கொண்டாலோ அல்லது தன்னுடைய காவல் பொறுப்பில் இருக்கும் நபர்மீது முன்விரோதம் காரணமாக துன்புறுத்துதல் செய்தாலோ ஒரு மாவட்ட நடுவர் முன்னால்

குற்றம் சாட்டப்படும் காவலருக்கு தன்னுடைய மூன்று மாதத்திற்குரிய சம்பளத்தொகை மிகாமல் அபராதமும் அல்லது மூன்று மாதத்திற்குமிகாத வெறுங்காவல் அல்லது கடுங்காவல் தண்டனையோ அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு - 30

## பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் ஒழுங்கு படுத்துதல், அவை சம்பந்தமான அனுமதி வழங்குதல்

சூழ்நிலைக்கு தகுந்தாற்போல ஒரு மாவட்ட கண்காணிப்பாளர் அல்லது உதவி மாவட்ட கண்காணிப்பாளர் பொது இடங்களில், பொது ரோடுகளில் நடத்தப்படும் பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆகியவற்றை ஒழுங்குப்படுத்துவதற்காக குறிப்பிடப்பட்ட வழிகளையும், குறிப்பிடப்பட்ட சமயங்களில் மாற்றியமைக்க ஆணை பிறப்பிக்கலாம்.

பொது இடங்களில், பொதுரோடுகளில், பொதுசாலைகளில் பொதுக்கூட்டம் போடுவதற்காக அல்லது ஊர்வலம் நடத்துவதற்காக கூடியிருக்கும் கும்பலானது, ஒரு மாவட்ட செயல்துறை நடுவர் அல்லது துணை மாவட்ட செயல்துறை நடுவரின் கருத்துப்படி, மேற்படி கும்பலானது கட்டுப்படுத்த முடியாத வேளையில் சட்ட ஒழுங்கிற்கு பங்கம் ஏற்படும் என்று நினைத்தாலோ, மேற்படி கூட்டத்தினர் பொதுக்கூட்டங்கள் அல்லது ஊர்வலங்கள் நடத்துவதற்கு முன்கூட்டியே அனுமதி பெறுதல்வேண்டும் என்று ஒரு அவசர அல்லது பொதுவான அல்லது சிறப்பான ஆணை பிறப்பிக்கலாம்.

மேற்கண்ட முறையில் அனுமதி கேட்கப்பட்டதன் பேரில் அந்த நடுவர் குறிப்பிட்ட விதிமுறைப்படி மனுதாரர் பெயர் விலாசத்துடன், குறிப்பிட்ட பொதுரோடு வழியாக கூட்டங்கள் அல்லது ஊர்வலங்கள் நடத்தப்பட நடத்திக்கொள்ள அனுமதி அளிக்கலாம். அதற்காக அந்த நபரிடமிருந்து மனு பெற்றுக்கொண்டதற்கோ அல்லது அனுமதி வழங்கப்பட்டதற்கோ எந்த விதமான கட்டணமும் வசூலிக்கக்கூடாது.

மேலும் திருவிழா, கொண்டாட்ட சமயங்களில் பொது இடங்களில், பொது ரோடுகளில் இசை பயன்படுத்த நிபந்தனைகள் விதித்து ஒழுங்குபடுத்தலாம்.

பிரிவு - 30 (அ)

## கூட்டங்கள், ஊர்வலங்கள் அனுமதிகளை மீறும்போது அதிகாரம்

இச்சட்டப்படி கொடுக்கப்பட்ட விதிமுறைகளை, அனுமதிகளை மீறும் கூட்டத்தினரை, ஊர்வலத்தினரை எந்த மாவட்ட நீதிபதியோ அல்லது மாவட்ட காவல் கண்காணிப்பாளரோ அல்லது உதவி-கண்காணிப்பாளரோ அல்லது ஆய்வாளரோ அல்லது ஒரு நிலைய பொறுப்பிலுள்ள அதிகாரியோ மேற்கண்ட ஊர்வலத்தை தடுத்து நிறுத்தி அவர்களைக் கலைந்துசெல்லுமாறு உத்தரவிடலாம்.

ஏதாவது ஊர்வலம் அல்லது கூட்டத்தினர் மேலேயுள்ள பிரிவில் உள்ளபடி கொடுக்கப்பட்ட உத்தரவை அவமதித்தாலோ அல்லது கலைந்துசெல்ல மறுத்தாலோ மேற்படி, ஊர்வலத்தினரை சட்டவிரோதமான கும்பல் என்று கொள்ளலாம்.

## பிரிவு - 31

## பொது இடங்களில் சட்ட ஒழுங்கை காவலர் நிலைநாட்டுதல்

பொதுரோடுகளில், பொதுதெருக்களில், பொதுயிடங்களில், பொதுசந்தைகளில், இறக்குமதி செய்யும் இடங்களில் மற்றும் எல்லாவிதமான பொதுஜன உரிமையுள்ள இடங்களில் நடத்தப்படும் கூட்டங்கள் ஊர்வலங்களுக்கு எந்தவிதமான தடங்கலும் ஏற்படாதவாறு கண்காணிப்பதுடன் தொழுகை நடக்கும் இடங்கள் பொதுஜன வழிபாடுகள் நடக்கும் இடங்களில் அருகில் முற்றுகையிட வரும் சமயம் எந்தவிதமான தடங்கலும் ஏற்படாதவாறு கண்காணிப்பது காவலரின் முக்கியமான பணியாகும்.

## பிரிவு - 34

## பொது இடங்களில் சில குற்றங்களுக்கு தண்டனை

யாராகிலும் பொதுரோட்டிலோ, பொதுயிடத்திலோ அல்லது பொதுஜன நடமாட்டம் உள்ள நகர எல்லைக்குள் மாநில அரசால் இந்த சட்டத்தை அமுல்படுத்திய பின்பு கீழ்க்கண்ட எவையேனும் குற்றங்களையோ, தடங்கல்களையோ தொந்தரவுகளையோ, கோபப்படுத்துதலையோ, ஆபத்துகளையோ, நஷ்டங்களையோ புரியும்போது ஒரு நடுவர் முன்னால் 50 ரூபாய் மிகாத அபராதமோ அல்லது எட்டு நாட்களுக்கு மிகாத வெறுங்காவல் தண்டனையோ அல்லது கடுங்காவல் தண்டனையோ விதிக்கப்படுவதுடன் கீழ்க்கண்ட குற்றங்களை தன்னுடைய முன்னிலையில் செய்யப்படும்போது காவல் அலுவலர் பிடியாணையின்றி கைதுசெய்யலாம்.

### *1. கால்நடைகளைக் கொல்லுதல், அதிவேகமாக ஓட்டுதல்:*

எவரேனும் கால்நடைகளைப் பொதுயிடங்களில் கொன்றாலோ அல்லது மிருக இறைச்சியை சுத்தம் செய்தாலோ அல்லது ஏதாவது கால்நடைகள் மீது முரட்டுத்தனமாக, ஆபத்தான முறையில் வண்டி ஓட்டினாலோ அல்லது குதிரை போன்ற மிருகங்களை பயிற்சிக்காக முரட்டுத்தனமாக பயன்படுத்தினாலோ.

### *2. மிருகங்களுக்கு துன்பம் விளைவித்தல்:*

எவரேனும் வேண்டுமென்றே கொடூரமாக, எந்த மிருகத்தையும் அடித்து துன்புறுத்தினாலோ அல்லது அளவுக்குமீறி உபயோகித்தாலோ.

### *3. பயணிகளை தடைசெய்தல்:*

எவரேனும் பொதுமக்களுக்கு தொல்லைத்தரும் வகையில் அல்லது ஆபத்து ஏற்படுத்தும் வகையில் ஏதாவது மிருகங்களை அல்லது ஏதாவது வாகனங்களை அளவுக்கு மீறிய பாரத்துடன் பொது இடங்களில் விட்டு வைத்தாலோ அல்லது பொது மக்கள் நடமாட்டத்திற்கு தடை ஏற்படுத்தினாலோ.

### *4. உணவுப்பொருட்களை விற்பனைக்காக வைத்தல்:*

விற்பனைக்காக திண்ணும் உணவு பண்டங்களை எவரேனும் தகுந்த சுகாதார வசதியில்லாமல் திறந்து வைத்திருந்தாலோ.

### *5. தெருக்களில் குப்பை கொட்டுதல்:*

எவரேனும் பொது இடங்களில், ரோடுகளில், சாலைகளில் குப்பைக் கூளங்களை கொட்டிவைத்தாலோ வீடு கட்டுவதற்காக உள்ள பொருட்கள், கல், மணல் போன்றவற்றை போட்டு வைத்தாலோ அல்லது எவரேனும் சாணங்களை கொட்டி வைப்பதற்காக ஏதேனும் பெட்டி போன்றவைகள் கட்டினாலோ அல்லது ஏதாவது அபாயகரமான மருந்துகள், பொருட்கள் ஏதாவது வீட்டில் இருந்தோ, தொழிற்சாலையிலிருந்தோ வெளியே அனுமதித்தாலோ.

***6. குடிபோதையில் சச்சரவு செய்தல்:***

எவரேனும் பொது இடங்களில் குடிபோதையின் காரணமாக சச்சரவு செய்தாலோ, தன்னை கண்காணித்துக் கொள்ளும் நிலை இழந்தாலோ.

***7. அசிங்கமாக தன் உடல் பாகத்தை வெளிபடுத்துதல்:***

எவரேனும் வேண்டுமென்றே அருவருப்பாக தன்னுடைய உடம்பின் ஏதாவது பாகத்தையோ அல்லது அங்ககீனத்தையோ அல்லது தன்னுடைய வியாதியை வெளிப்படுத்தினாலோ, அல்லது பொது ஜன தொல்லை தரும் வகையில் மல ஜலம் கழித்தாலோ, அல்லது குளிப்பதற்கு, துணிகள் துவைப்பதற்கு என்று குறிப்பிடப்படாத குளங்களில் அல்லது நீர் தேக்கத்தில் குளித்தாலோ அல்லது துணிகளை துவைத்தாலோ.

***8. ஆபத்தான இடங்களில் பாதுகாக்க தவறுதல்:***

எவரேனும் ஆபத்தாக உள்ள ஏதாவது கிணறு, குளம் அல்லது ஆபத்தான இடம் அல்லது கட்டிடம் போன்றவற்றை பாதுகாப்பதற்காக வேலி, கைப்பிடிச்சுவர்கள், அல்லது பாதுகாப்பான அரண் அல்லது செய்ய தவறினாலோ.

பிரிவு - 42

### நடவடிக்கைகளின் கால அளவு

இந்த சட்டப்படி எடுக்கும் நடவடிக்கைகள், நபர்கள் மீது போடப்படும் வழக்கின் குற்றப்பத்திரிக்கை நடவடிக்கைகள் அந்தச் சம்பவம் நடந்த தேதியிலிருந்து மூன்று மாத கால அளவுக்கு எடுக்கப்பட வேண்டும். அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணங்களைப்பற்றி குற்றவாளிக்கு அல்லது மாவட்ட கண்காணிப்பாளருக்கு அல்லது உதவி மாவட்ட கண்காணிப்பாளருக்கு ஒரு மாத காலத்திற்குள் தெரிவித்தல் வேண்டும்.

# மோட்டார் வாகனச் சட்டம் - 1939
# MOTOR VEHICLES ACT 1939

பிரிவு - 119

### போக்குவரத்து விதிகளுக்கு கட்டுப்பட வேண்டிய கடமை

ஒரு மோட்டார் வாகனத்தின் ஒவ்வொரு ஒட்டுனரும் அட்டவணை எண் 10-ல் கூறப்பட்டுள்ள எல்லாவித வாகன கட்டுப்பாட்டு முறைகளுக்கும், இந்திய அரசாங்கத்தால் இயற்றப்பட்ட போக்குவரத்து விதிகளுக்கும், பொது ரோட்டில் சீருடையிலுள்ள எல்லா போலீஸ் அதிகாரிகளின் கட்டளைக்கும் கட்டுப்பட வேண்டும்.

இந்த பிரிவில் போக்குவரத்து ஒழுங்கு முறைகள் என்று சொல்லப்படுவது அட்டவணை (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ளதாகும். அல்லது அதே படிவத்திலுள்ள எந்த போக்குவரத்து முறைகளையும் குறிக்கும்.

இதற்கு வட்ட வடிவமான ஒரு பலகை போன்றவற்றில் வார்த்தையாலோ, எண்ணாலோ எழுதப்பட்டு சிகப்பு மையால் அடிக்கோடிட்டோ, அல்லது வட்டமிட்டோ அல்லது சிகப்பு மையால் பொருத்தப்பட்ட ஒரு போக்குவரத்து நிலையைக் குறிக்கும்.

பிரிவு - 122

## ஆபத்தான நிலையில் வண்டியை விட்டுச் செல்லுதல்

ஏதேனும் நபர் ஒரு வாகனத்தின் பொறுப்பில் இருக்கும்போது அந்த வாகனத்தை தானாகவோ அல்லது மற்றவர்களின் உதவியினால் ஒரு பொது இடத்தில் நிறுத்தி வைக்கவோ, விட்டு வைக்கவோ அதனால் மற்ற போக்குவரத்துக்கு இடைஞ்சல் உண்டாகும் நிலையில் அல்லது இதர பாதை உபயோகிப்பவர்களுக்கு சங்கடம் ஏற்படும் வகையில் விட்டுச் செல்லக்கூடாது.

பிரிவு - 123

## ஓடும் வண்டியின் மேல் இருத்தல்

வாகனத்தை ஒட்டுகின்ற எந்த நபரும் அல்லது அந்த வாகனத்தின் பொறுப்பிலுள்ளவர் வாகனத்தை ஓட்டும்போது எந்த நபரையும் வண்டியின் மேல் பகுதியில் நடமாடவோ, இருக்கவோ அனுமதி தரக்கூடாது. அதாவது வண்டி ஓடும்போது அனைவரும் வண்டியின் உட்பகுதியீல் மட்டுமே இருக்கவேண்டும்.

பிரிவு - 125

## ஓட்டுனருக்கு குந்தகம் (இடைஞ்சல்) விளைவித்தல்
## Obstruction of Driver

எந்த ஒரு நபரும் ஓட்டுனர் வண்டியை ஓட்டும்போது அவர் வண்டியை கட்டுப்படுத்த முடியாத வகையில் நிற்பது, உட்காருவது அல்லது அது போன்று அவருக்கு இடைஞ்சல் உண்டாக்கும் எந்த செயலிலும் ஈடுபடக் கூடாது.

பிரிவு - 126

ஓட்டுனரோ அல்லது வண்டியின் பொறுப்பாளரோ ஒரு பொது இடத்தில் வண்டியை (எஞ்சினை நிறுத்தி பிரேக்குகளை போடாமல்) எஞ்சின் ஓடிக்கொண்டு இருக்கும் நிலையில் விட்டு விட்டு இறங்கி செல்லக் கூடாது. அப்படிப்பட்ட நிலையில் ஓட்டுனர் லைசென்ஸ் பெற்ற நபர் வண்டியை கட்டுப்படுத்தும் நிலையில் தயாராக வண்டியில் அமரச் செய்ய வேண்டும். ஆனால் வண்டியில் ஏதேனும் இயந்திர கோளாறு ஏற்பட்டாலோ, பிரேக் கட்டைகளைப் போட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலோ அல்லது வாகனம் தானே ஓட்டுனரின்றி திடீரென்று ஓடாத வகையில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலோ இந்த விதி சம்பந்தப்பட்டவரை கட்டுப்படுத்தாது.

பிரிவு - 128 (1)

## வண்டியின் பின்னால் அமர்ந்து செல்லுதல்

இரு சக்கர மோட்டார் வாகனத்தில் ஓட்டுனருடன் இன்னொருவர் மட்டுமே அதுவும் அந்த வண்டியில் இரண்டாவது நபர் வசதியாக அமர தக்க பாதுகாப்பான ஏற்பாடுகள் இருந்தால் மட்டுமே ஓட்டுனருக்குப் பின்னால் அமர்ந்து செல்லலாம்.

பிரிவு - 130 (1)

## ஓட்டுநர் உரிமத்தையும் பதிவு சான்றிதழ்களையும் காட்ட வேண்டிய கடமை

1. ஒரு போலீஸ் அதிகாரி சீருடையுடன் பொது இடத்தில் வண்டி ஓட்டுனரின் உரிமம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றைக் கேட்டால் கண்டிப்பாக பரிசோதனைக்காக காட்ட வேண்டும்.

ஆனால் ஓட்டுனர் தன்னிடமிருந்து ஓட்டுநர் உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் வேறு எந்த அதிகாரியிடமோ, வேறு காரணங்களுக்காக கொடுத்திருந்து அதற்கான அத்தாட்சி வைத்திருந்தால் அதிகாரி தன்னைக் கேட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள் இந்தியாவிலுள்ள எந்த காவல் நிலையத்திலும் காட்டலாம். ஆனால் அதற்கான அனுமதியை முதலிலேயே தன்னைப் பிடித்த போலீஸ் அதிகாரியிடம் கூறி பெற வேண்டும்.

2. வண்டியை நடத்துபவர் எந்த ஒரு பொது இடத்திலும் சீருடையுடன் உள்ள எந்த ஒரு போலீஸ் அதிகாரி கேட்டாலும் தன்னுடைய ஓட்டுநர் உரிமத்தை பரிசோதனைக்காக காட்ட வேண்டும்.

பிரிவு - 132

## குறிப்பிட்ட சில சமயங்களில் வண்டியை நிறுத்த வேண்டியது ஓட்டுனரின் கடமை
## Duty of Driver to Stop in Certain Case

1. ஓட்டுனர் தான் ஓட்டும் வண்டியை கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் நியாயமாக தேவைப்படும்போது தேவைப்படும் நேரம் வரை நிறுத்த வேண்டும்.

(a) சீருடையில் உள்ள போலீஸ் அதிகாரி நிறுத்து என்று சொல்லும்போது.

(b) வாகனப் போக்குவரத்தால் அப்பகுதியிலுள்ள மிருகங்கள் கட்டுக்கடங்காமல் போனாலும் அல்லது அந்த மிருகங்களின் பொறுப்பிலுள்ளவர் தன்னால் கட்டுப்படுத்த முடியாது என்ற சூழ்நிலை ஏற்படும்போதும்.

(c) அந்த வாகனம் ஒரு மனிதருக்கோ, மிருகத்திற்கோ அல்லது வேறு ஒரு வாகனத்திற்கோ அல்லது வேறு ஏதேனும் பொருட்களுக்கோ கேடு விளைவித்தாலும் அல்லது ஓட்டுனருக்கோ அல்லது வண்டிக்கோ ஏதாவது கேடு விளைவித்திருந்தாலும் அந்த வாகனத்தை அந்த இடத்திலேயே நிறுத்திவிட வேண்டும்.

2. பாதிப்புக்குள்ளான நபர்கள் கேட்கும் போது ஓட்டுனர்கள் தன்னுடைய பெயர், விலாசம் போன்றவற்றை கொடுக்க வேண்டும்.

பிரிவு - 133

## வண்டியின் உரிமையாளர் தேவையான விவரங்களை கொடுக்கும் கடமை
## Duty of Owner of Motor Vehicles to give Information

ஒரு வாகனத்தின் சொந்தக்காரரோ அல்லது அந்த வாகனத்தின் ஓட்டுனரோ அல்லது நடத்துனரோ அந்த வாகனம் ஏதேனும் ஒரு குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று கருதப்பட்டு மாநில அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரியோ அல்லது எந்த காவல் அலுவலரோ கேட்கும் போது தன்னுடைய வண்டியை பொறுத்தமட்டில் அதற்குண்டான ஓட்டுநர் உரிமம், அனுமதி முதலானவைகளை கொடுக்க வேண்டும். தன்னுடைய பெயர், விலாசத்தையும் காவல் அதிகாரியிடம் தருவதற்கு கடமைப்பட்டிருக்கிறார்.

பிரிவு - 134

## விபத்தினால் ஒரு மனிதனுக்கு காயம் ஏற்படும் பட்சத்தில் ஓட்டுனரின் கடமைகள்
## Duty of driver in case of accident and injury to a person

ஒரு மோட்டார் வண்டியினால் ஏற்படும் விபத்தின் காரணமாக ஒரு மனிதனுக்கோ அல்லது இன்னொருவரின் சொத்துக்களுக்கோ தீமை, கேடு, துன்பம் விளைந்திருந்தால்,-

(a) அடிப்பட்ட மனிதருக்கு உடனடி மருத்துவ சிகிச்சைகளுக்கான ஏற்பாடுகளை செய்தல், அருகிலுள்ள மருத்துவமனைக்கு அவரை எடுத்துச் செல்லுதல் போன்றவற்றை செய்தல் வேண்டும். ஆனால் விபத்து நடந்த இடத்தில் கூட்டத்தின் காரணமாக ஓட்டுனருக்கு தகுந்த பாதுகாப்பு இல்லாத நேரத்தில் மேற்கண்டவற்றை செய்ய வேண்டியது இல்லை.

(b) விபத்து சம்மந்தமாக போலீஸ் அதிகாரி கேட்கும்போது தேவையான எல்லாவித விளக்கங்களும், சம்பவம் நடந்தது பற்றி, அடிப்பட்டவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்தது பற்றி அருகிலுள்ள காவல் நிலையத்தில் தகவலை கொடுத்த விவரங்கள் பற்றி தெரிவிக்கவேண்டும். விபத்து பற்றிய தகவலை கூடுமான வரையில் 24-மணி நேரத்திற்,குள் அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு தெரிவித்தல் வேண்டும்.

பிரிவு - 177

## குற்றத்திற்கு பொதுவான தண்டனைகள்
## General Provision for Punishment of Offences

மோட்டார் வாகன சட்ட விதிகளை மீறுபவர்களுக்கு அதற்கு தகுந்த தண்டனை எதுவும் குறிப்பிடப்படாமல் இருந்தால் அதிகபட்சம் 100 ரூபாய் அபராதமாக விதிக்கலாம். அந்த நபர் இதற்கு முன்பே வேறு ஏதேனும் குற்றத்திற்காக இதே சட்டப்பிரிவில் தண்டிக்கப்பட்டிருந்தால் அதிகபட்சமாக 300 ரூபாய் வரை அபராதமாக விதிக்கலாம்.

பிரிவு - 179

## கட்டளைக்கு கீழ்படியாமை, போக்குவரத்துக்கு குந்தகம் விளைவித்தல் மற்றும் தகவல் தர மறுத்தல்
## Disobidient of Orders, Traffic Obstruction and Refusal of Information

இந்த சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு அதிகாரி வேண்டுமென்றே கீழ்படியாத எந்த ஒருவருக்கும் தமது வேலையில் ஈடுபட்டிருக்கும் அதிகாரியை அந்த வேலையை செய்ய விடாமல்

தடங்கல் செய்யும் நபருக்கு (வேறு எந்த குற்ற தண்டனையும் சொல்லப்படாவிடில்) 500 ரூபாய் வரை தண்டனையாக விதிக்கலாம்.

இந்த சட்டத்தின்கீழ் சரியான தகவல் கொடுக்க கடமைப்பட்ட நபர் வேண்டுமென்றே அப்படி தகவல் தெரிவிக்காமல் இருந்தாலோ அல்லது கொடுத்த தகவல் பொய்யானதாக இருந்தாலோ (இந்த குற்றத்திற்கு வேறு தண்டனை கொடுக்கப்படாவிடில்) தண்டனையாக ஒரு மாதம் சிறைக் காவல் அல்லது 500 ரூபாய் வரை அபராதம் இரண்டும் தண்டனையாக விதிக்கப்படலாம்.

பிரிவு - 183

## அதிகவேகமாக வண்டிகளை ஓட்டுதல்

## Driving at Excessive Speed

இந்தச் சட்டத்தின் 112-வது பிரிவில் சொல்லியபடி அல்லது அதற்கு மாறாக வாகனத்தை அதிக அளவு வேகமாக ஓட்டி முதல் முறையாக இருந்தால் அதிகபட்ச தண்டனையாக 400 ரூபாய் விதிக்கப்படலாம். அவர் இதற்கு முன்னர் இது போன்ற குற்றத்திற்கு தண்டனை பெற்றவராயின் அவருக்கு 1000 ரூபாய்வரை அபராதமாக விதிக்கலாம்.

சட்ட விதி 112-ஐ மீறும் எந்த ஒரு நபரையும் எஜமானரோ அல்லது அவரை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டியவரோ முதலாவது தான் செய்த தவறுக்காக 300 ரூபாய் வரை அபராதம் செலுத்த வேண்டும். இதே விதியின்கீழ் இதற்கு முன்னர் தண்டிக்கப்பட்டிருந்தால் இரண்டாவது தவணையாக 500 ரூபாய் வரை அபராதம் செலுத்த வேண்டும்.

சம்பவத்தை நேரே பார்த்த நபர் அவருடைய சாட்சியை மட்டும் வைத்து தண்டனை அளிக்கக் கூடாது. அவர் வேகமாக வண்டியை ஓட்டியதற்கான ஒரு இயந்திர அத்தாட்சி இல்லாத நிலையில் இந்த விதியின் கீழ் யாருக்கும் தண்டனை விதிக்கக் கூடாது.

பிரிவு - 124

## பஸ்களில் டிக்கெட் அல்லது பாஸ் இல்லாமல் பயணம் செய்ய தடை

## Prohibition Against Travelling Without Pass or Ticket

எந்த நபரும் ஏதேனும் பஸ்களிலோ அல்லது கட்டணம் வசூலிக்கும் வாகனத்திலோ தன்னிடம் குறிப்பிட்ட பயணத்திற்கான பயணச்சீட்டு அல்லது பாஸ் இல்லாமல் வாகனங்ககளில் ஏறி அமர்ந்து பயணம் செய்யக்கூடாது. பயணம் செய்யும் வண்டிகளில் டிக்கெட் கொடுப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தால், பயணம் செல்ல விரும்பும் பயணிகள் வாகனத்தில் ஏறியவுடன் அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் வாகனத்தை நடத்துனரிடம் பணம் கொடுத்து தன் பயணத்திற்கான சீட்டை வாங்கிக்கொள்ள வேண்டும்.

(1) பாஸ் என்பது ஒரு நபரை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஏற்றி செல்வதற்காகமுன்கூட்டியே பணம் கட்டி ஒரு கால வரம்புக்கு செல்ல அதிகாரம் தரக்கூடிய ஒரு அத்தாட்சி ஆகும்.

(2) டிக்கெட் என்பது ஒரு டிக்கெட்டையோ அல்லது ஒரு பயணத்தின் திரும்ப வருவதற்கான அதிகாரம் உள்ள ஒரு டிக்கெட்டையோ அல்லது சீசன் டிக்கெட்டையோ குறிக்கும்.

பிரிவு - 127

## பொது இடத்தில் அனாதையாக விடப்பட்ட வாகனங்களை கைப்பற்றுதல்
## Removal of Motor Vehicles Abandoned or Left Unattended on a Public Place

ஒரு பொது இடத்தில் அல்லது ரோடுகளில் ஏதேனும் வாகனங்கள் கேட்பாரன்றி அல்லது கவனிப்பாரின்றி 10 மணி நேரத்திற்கும் மேலாக விட்டு வைக்கப்பட்டிருந்தால், ஒரு காவல் நிலைய சரகத்தில் அதன் பொறுப்பு அதிகாரி, மேற்படி வாகனத்தை வேறு வாகனம் மூலம் இழுத்துச் சென்று வாகன இடைஞ்சலைத் தவிர்க்கலாம்.

அவ்வாறு அனாதையாக விடப்பட்ட வாகனம் அல்லது கேட்பாரின்றி விடப்பட்ட வாகனம், அல்லது உடைந்த நிலையில் கிடக்கும் வாகனம், அல்லது எரியப்பட்ட வாகனம் அல்லது பகுதி பாகங்கள் நீக்கப்பட்ட வாகனம் ஏதேனும் ஒரு நெடுஞ்சாலையில் போக்குவரத்துக்கு இடைஞ்சல் உண்டாக்கும் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தால் அல்லது அவற்றின் நிலை போக்குவரத்திற்கு இடைஞ்சல் உண்டாக்கும் என்று தெரிந்தால் ஒரு காவல் நிலைய எல்லையில் அதன் பொறுப்புள்ள அதிகாரி வேறு வாகனத்தின் உதவியுடன் மேற்கண்ட வாகனங்களை கட்டியிழுத்து அப்புறப்படுத்த கடமைப்பட்டிருக்கிறார்.

அவ்வாறு மேற்கண்ட நிலையில் தடங்கல் உண்டாக்கும் நிலையில் உள்ள வாகனங்களை ஒரு போலீஸ் அதிகாரி வேறு ஒரு வாகனத்தின் உதவியுடன் மாற்றம் செய்ய ஏற்படும் செலவை அந்த வாகனத்தின் சொந்தக்காரர் ஏற்கவேண்டும். கூடுதலாக அந்த குற்றத்திற்கான தண்டனையும் பெறவேண்டும்.

பிரிவு - 184

## ஆபத்தான முறையில் வண்டி ஓட்டுதல்
## Driving Dangerously

அதி வேகமாக வண்டியை ஓட்டும் யாராக இருந்தாலும் அல்லது ஆபத்தான நிலையில் பொது இடத்தில் மற்றவர்களுக்கும், வாகனங்களுக்கும் ஆபத்து ஏற்படும் வகையில் வாகனத்தை ஓட்டினாலோ அல்லது போக்குவரத்து இடைஞ்சலாக வாகனத்தை ஓட்டினாலோ அந்த குற்றம் முதல் முறையாக இருந்தால் தண்டனையாக 6 மாத சிறைத் தண்டனையோ அல்லது 1000 ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும். இதற்கு முன்னால் மூன்று ஆண்டுகளுக்குள் இப்படிப்பட்ட தண்டனைக்கு உட்பட்டவராக இருந்தால் அதிகபட்ச தண்டனையாக 2 வருட சிறைக் காவல் தண்டனையோ அல்லது 2000 ரூபாய் அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு - 185

## குடிபோதையிலோ அல்லது போதை மருந்துக்கு அடிமைப்பட்ட நிலையிலோ

### வாகனத்தை ஓட்டிச் செல்லுதல்

## Driving by a Drunken Person or by a Person under the Influence of Drugs

எந்த ஒரு நபரும் மது அருந்திய நிலையில் வண்டி ஓட்டினாலோ அல்லது ஓட்ட முற்பட்டாலோ அல்லது வேறு ஏதேனும் போதை மருந்துக்கு உட்பட்ட நிலையில் வண்டி ஓட்டினாலோ அல்லது ஓட்ட முயற்சி செய்தாலோ (மது என்பது ரத்தத்தில் மிகக் குறைந்த அளவில் இருந்தாலும் கூட) அல்லது அதனால் வாகனத்தை அவரது கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடியாத சூழ்நிலையில், அது அவருக்கு முதல் தடவையாக இருப்பின் தண்டனையாக 6 மாத சிறைக் காவலோ அல்லது 2000 ரூபாய் அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ கொடுக்கப்படும். இதே குற்றத்தை முதலில் தண்டனை அடைந்த மூன்று வருடத்திற்குள் இரண்டாவதாக அல்லது அதற்கும் மேலாக செய்தால் அதற்கு 2 வருட சிறை தண்டனையோ அல்லது 3000 ரூபாய் அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கப்படும்.

பிரிவு - 186

### மனதளவிலோ அல்லது உடல்நிலையிலோ கோளாறு ஏற்பட்டு தகுதி இல்லாமல் இருக்கும்பொது வாகனங்களை ஓட்டுதல்.

## Driving when Mentally or Physically Unfit to Drive

ஒருவர் தனக்கு மனநிலையோ அல்லது உடல்நிலையோ சரியில்லாமல் இருந்து பொது இடத்தில் வாகனத்தை ஓட்டி தனக்கும் மற்றவர்களுக்கும் ஆபத்து விளைவிக்கும் செயலை தெரிந்தே செய்தால், முதல் தடவை குற்றமாக இருப்பின் 200 ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டாவது முறையோ அல்லது அதற்கும் மேற்பட்ட முறைகளிலோ தண்டனையாக 500 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

பிரிவு - 187

### விபத்து சம்பந்தமான குற்றங்களுக்கு உண்டான தண்டனை

## Punishment for Offences Relating to Accident

மோட்டார் வாகன விதி 132 (1)C, 133 மற்றும் 134 ஆகிய பிரிவுகளில் கூறப்பட்டுள்ள விதிகளை மீறும் நபர் யாராக இருந்தாலும் அது அவருக்கு முதல் தடவையாக இருந்தால் தண்டனையாக மூன்,று மாத சிறைத் தண்டனையோ அல்லது 500 ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். மேற்படி நபர் அதே குற்றத்தை அதற்கு முன்பு செய்திருந்தால் தண்டனையாக 6 மாத சிறைக்காவல் அல்லது 1000 ரூபாய் அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

பிரிவு - 194

### அனுமதிக்கப்பட்ட எடையைவிட அதிகப்படியான எடையுடன் வண்டி ஓட்டுதல்

## Driving Vehicle Exceeding Permissible Weight

மோட்டார் வாகன விதி 113, 115-களில் குறிப்பிட்டுள்ள கட்டுப்பாட்டை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் அல்லது அவரை மீறச் சொன்னவரும் இவ்விதிக்குப் புறம்பாக நடந்து கொண்டதற்காகவும் முதல் தடவையான குற்றத்திற்கு 2000 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டாவதற்கு கூடுதலாக அதிகபட்சம் 5000 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

பிரிவு - 202

## வாரண்ட் இல்லாமல் கைது செய்யும் அதிகாரம்
## Power to Arrest Without Warrant

1. மோட்டார்வாகன விதி 184, 185 அல்லது 197 இவைகளில் ஏதேனும் ஒரு விதியை மீறும் ஒரு நபரை சீருடையில் இருக்கும் ஒரு போலீஸ் அதிகாரி எந்தவித வாரண்டும் இல்லாமல் கைது செய்யலாம். ஆனால் கைது செய்யப்பட்டவரை கைது செய்த நேரத்திலிருந்து 2 மணி நேரத்திற்குள் ஒரு பதிவு பெற்ற மருத்துவரிடம் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அப்படி செய்ய இயலவில்லை என்றால் கைது செய்யப்பட்ட நபரை விடுவித்துவிட வேண்டும்.

2. (a) மேற்கண்ட விதிகளின்படி தன் பெயர், விலாசம் போன்ற விவரங்களை தர மறுக்கும் எந்த நபரையும் அல்லது அவர் கொடுக்கும் தகவல்கள் பொய்யாக இருக்கும் என்று சந்தேகிக்கும் சூழ்நிலையிலோ சீருடையில் இருக்கும் போலீஸ் அதிகாரி எந்தவித வாரண்டும் இல்லாமல் அந்த நபரை கைது செய்யலாம்.

(b) இவ்விதிகளின்படி குற்றம் விளைவித்த எந்த நபரையும் அல்லது குற்றம் செய்ததாக கருதப்படும் எந்த நபரையும், அவரை வெளியே விட்டால் தலைமறைவாகி விடுவார் என்று அந்த போலீஸ் அதிகாரி நினைத்தாலோ, அல்லது சம்மன் வாங்க புறக்கணிப்பார் என்று நினைத்தாலோ, அவரை வாரண்டு இல்லாமல் கைது செய்யலாம்.

3. ஒரு போலீஸ் அதிகாரி ஒரு வாகனத்தின் ஓட்டுனரை கைது செய்த போது அந்த வாகனத்தை தற்காலிகமாக அந்த சூழ்நிலைக்கு ஏற்ப தேவை என்று நினைத்தால் மேற்படி வாகனத்தை வேறு இடத்திலோ அல்லது காவல் நிலையத்திலோ தன் உத்தரவுபடி விட்டு வைக்கலாம்.

பிரிவு - 209

## வாகன விதிப்படி தண்டனைக்கு சில கட்டுப்பாடுகள்
## Restriction on Conviction

(a) எந்த நபரையும் வாகன சட்டப்பிரிவு 183 அல்லது 184-ன் கீழ் ஒரு தவறை செய்த சமயத்தில், அந்த நபரை முதலாக எச்சரிக்கை செய்யாமல் அல்லது.

(b) குற்றம் செய்ததாக கருதப்படும் நாளிலிருந்து 14 நாட்களுக்குள் அவருக்கு, அவர் செய்ததாக கருதப்படும் குற்றம், குற்றம் விளைந்த இடம், நேரம் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட நபருக்கும் வண்டியின் உரிமையாளருக்கும் நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ, தாக்கீது அனுப்பாத நிலையில், அல்லது .

(c) சம்பவம் நடந்ததாக கருதப்படும் நாளிலிருந்து 28 நாட்களுக்குள் சம்பந்தப்பட்டவருக்கு சம்மன் அனுப்பாவிட்டாலும், அவரை தண்டனைக்கு உள்ளாக்குதல் கூடாது .

(d) ஆனால் மேற்கண்ட காலதாமதம் சம்பந்தப்பட்ட நபரின் அல்லது உரிமையாளரின் விலாசம் சரியாக கொடுக்கப்படவில்லை என்று இந்த வழக்கை விசாரிக்கும் நீதிமன்றம் திருப்தி அடைந்தால் தண்டனை வழங்க அதிகாரம் உண்டு .

(e) இப்படிப்பட்ட தாமதத்திற்கு குற்றம் சாட்டப்பட்டவரே பொறுப்பாளர் ஆவார், என்றால் தண்டனை உண்டு.

# இந்திய இருப்புப்பாதைச் சட்டம், 1890
# THE INDIAN RAILWAYS ACT, 1890

பிரிவு - 120

இரயில் தண்டவாளம் மீது குடிபோதையால் காணப்படுபவர்களையும் அல்லது இரயில் பெட்டிகளில் குடித்துவிட்டு இருப்பவர்களையும்.

பிரிவு - 126

சிக்னல் லைட் விஷயத்தில் தலையிடுவது தகர்ப்பது, நகர்த்துவது, தவறான சிக்னல் கொடுப்பவர்களையும்.

பிரிவு - 127

இரயில் வண்டியின்மேல் கற்கள் அல்லது வேறு பொருட்களை வீசுகிறவர்கள், மேலும்

பிரிவு - 128

ஒரு நபர் வேண்டுமென்றே ஒரு செயல் செய்தாலும் அல்லது செய்யக்கூடாத செயலை செய்தாலும் அந்த செயலால் இரயிலில் பயணம் செய்யும் நபருக்கு தீங்கு நேரிட்டால் குற்றமாகும்.

பிரிவு - 129

இரயில் பிரயாணிகளுக்கு அபாயத்தை விளைவிக்கும் சட்ட விரோதமான காரியத்தை செய்வது.

பிரிவு - 131

இந்த சட்டப்படி இரயில்வே போலீஸாருக்கு ஒரு சில வழக்குகளில் மட்டுமே வாரண்டு இல்லாமல் கைது செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது..

# கால்நடை அத்துமீறல் சட்டம், 1871
# THE CATTLE TRESPASS ACT, 1871

விலங்குகள் அத்துமீறி பயிர்களை அழித்தல், நஷ்டம் உண்டாக்குதல், பொது சாலைகளில், வாய்க்கால்களில், ஏரி, குளங்களில் சேதப்படுத்தும் விலங்குகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

விலங்குகள் என்பது யானை, ஒட்டகம், எருமை, குதிரை, கோவேரி கழுதை, பன்றி, ஆடு, மாடுகள், செம்மறி ஆடுகள் இவைகளின் குட்டிகள் இதில் அடங்கும். பட்டி என்று சொல்லப்படுவது உள்ளாட்சித் துறை அதிகாரிகளால் நியமிக்கப்பட்டதும், விலங்குகளை அடைப்பதற்கும் உள்ளதுமாகும்.

பிரிவு - 10

## நிலத்தை சேதப்படுத்தும் விலங்குகள்

நிலத்தை பயிரிடுபவர், நிலத்தின் சொந்தக்காரர், ஒரு நிலத்தில் பயிர் செய்ய செலவு செய்திருப்பவர், நிலத்தை வாடகைக்கோ அல்லது அடமானம் எடுத்து பயிர் செய்திருப்பவர் அந்த நிலத்தில் விலங்குகள் அத்துமீறி நுழைந்து பயிர்களை நாசம் செய்தாலோ, உற்பத்திப் பொருட்களுக்கு சேதம் விளைவித்தாலோ அந்த நிலத்தின் சொந்தக்காரர், அடமானம் எடுத்தவர் அந்த விலங்குகள் பற்றி 24 மணி நேரத்திற்குள் உள்ளாட்சி துறை அதிகாரிகளால் நியமிக்கப்பட்டுள்ள பட்டிகளுக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

எந்த போலீஸ் அலுவலரும் விலங்குகள் சேதப்படுத்தும் இடத்திலிருந்து கைப்பற்றுவதற்கு அல்லது கைப்பற்றும் நபரை ஆபத்திலிருந்தும், எதிர்ப்பவர்களிடமிருந்தும் காப்பாற்றுவதற்கு கடமைப்பட்டவர்.

பிரிவு - 11

## பொது சாலைகள். வாய்க்கால்கள், ஏரி, குளங்கள் ஆகியவற்றை சேதப்படுத்தும் விலங்குகள்

பொது சாலைகள், விளையாட்டு அரங்கங்கள், காய்கறித் தோட்டங்கள், வாய்க்கால், அணைக்கட்டுகள் இன்னும் இது போன்றவைகளில் அதிகாரிகளாக அல்லது பொறுப்பாளராக இருப்பவர்கள் அல்லது போலீஸ் அலுவலர் மேலே சொன்னபடி ரோடுகளையோ, விளையாட்டு அரங்கங்களையோ, காய்கறித் தோட்டங்களையோ, சேதம் விளைவிக்கும் எந்த விலங்குகளையும் பிடித்து 24 மணி நேரத்திற்குள் உள்ளாட்சி துறை அதிகாரிகளால் நியமிக்கப்பட்டுள்ள பட்டிகளுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பிரிவு - 24

விலங்குகளை கைப்பற்றும் போது யார் ஒருவராகிலும் பலாத்காரமாக எதிர்த்து விலங்குகளை விடுதலை செய்பவர்களிடம் மீண்டும் கைப்பற்றி பட்டிக்கு அனுப்பி வைக்கலாம்.

யார் ஒருவரும் அவ்வாறு விலங்குகளை கைப்பற்றும்போது அல்லது கைப்பற்றிய பிறகு பட்டியிலிருந்தோ அல்லது பட்டிக்கு கொண்டு செல்லும்போதோ அருகில் இருக்கும் நபர் இந்த சட்டத்தின் கீழ் செயல்படுபவராக இருப்பாராயின் இந்த சட்டப்படி குற்றவியல் நடுவர் மூலம் ஆஜர் செய்து 6 மாதம் வரை நீடிக்க கூடிய சிறை தண்டனை அல்லது ரூபாய் 500 அபராதமும் அல்லது இரண்டும் தண்டனையாக வழங்கப்படும்.

# ஆயுதச் சட்டம், 1959
# THE ARMS ACT, 1959

துப்பாக்கிகள், ஆயுதங்கள், வெடிமருந்துகள், தோட்டாக்கள் ஆகியவற்றை சட்ட விரோதமான நடவடிக்கைகளில் உபயோகப்படுத்துவதிலிருந்து கட்டுப்படுத்த லைசன்ஸ் மூலம், உபயோகிக்க அல்லது தயார் செய்ய அல்லது ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்ல அல்லது தன்வசம் வைத்திருக்க 1959-ஆம் ஆண்டு சட்டமாக இயற்றப்பட்டது. இந்த சட்டமானது 1959-ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வந்தது.

பிரிவு - 2 (1) **(b)**

## வெடி மருந்து

## Ammunition

(1) வெடிமருந்து என்பது துப்பாக்கிகளில் உபயோகிக்கும் தோட்டாக்களை குறிக்கும். அது மட்டுமில்லாமல் வெடிகுண்டு, கையால் எரியும் வெடிகுண்டு, கண்ணீர் புகை மற்றும் தீங்கு இழைக்க கூடிய வெடி குண்டுகள் போன்றவைகள்.

(2) தண்ணீருக்குள் உபயோகப்படுத்தும் வெடிகுண்டுகள், நீர் மூழ்கி கப்பல்களில் கடற்படையினால் உபயோகிக்கப்படும் வெடிகுண்டுகள்.

(3) வெடிமருந்து அடங்கியதும், அபாயகரமானதும், இரசாயன செயற்கையால் தீங்கு விளைவிப்பதும், விஷம் கலந்த திரவம் ஆகியவைகள், துப்பாக்கிகளில் அல்லது போர் கருவிகளில் உபயோகிக்கக் கூடிய எல்லா விதமான பொருட்களும் (Ammunition) என்று சொல்லப்படும்.

(4) வெடியைப் பற்ற வைக்கும் திரி அல்லது எதிர்ப்பு தன்மையுள்ள எல்லாவித வெடிமருந்தும் கலந்த பொருட்கள் (மத்திய அரசாங்கம் Gazette மூலம் அறிவிக்கப்பட்ட சம்மந்தப்பட்ட வெடிமருந்துப் பொருட்கள்) இதில் அடங்கும்.

### பிரிவு - 2 (1) (c)

### ஆயுதங்கள்

## Arms

ஆயுதம் என்பது ஒருவரை தாக்குவதற்காகவோ அல்லது தற்காப்புக்காகவோ தயார் செய்யப்பட்ட எல்லா விதமான ஆயுதங்களையும் குறிக்கும். மேலும் ஆயுதம் என்பது எல்லாவிதமான துப்பாக்கிகள், கூர்மையானதும், ஆபத்தானதுமான ஆயுதங்கள் (கத்தி, அரிவாள், போன்றவை) அதனுடைய பாகங்கள் அல்லது அவைகளை தயார் செய்ய பயன்படுத்தும் தளவாட பொருட்கள் ஆகியவை அடங்கும். ஆனால், வீட்டு உபயோகத்திற்காக அல்லது விவசாயத்திற்காக பயன்படுத்தப்படும் பொருட்கள் இதில் அடங்காது. லத்தி நடப்பதற்கு உபயோகப்படுத்தக் கூடிய தடிகள் அல்லது விளையாட்டுப் பொருட்கள் இதில் அடங்காது.

### பிரிவு - 2 (1) (e)

## Fire Arms

துப்பாக்கிகளை வெடிக்கும்போது அதிலிருந்து குண்டுகள், வாயு அல்லது தீப்பிழம்புகள் வெளியாக்கும் எல்லாவிதமான துப்பாக்கிகளையும் குறிக்கும்.

(i) யுத்தங்களில் பயன்படுத்தும் துப்பாக்கிகள், கை வெடிகள், கலவரத்தை அடக்கும் கைத்துப்பாக்கிகள் அல்லது விஷத்தன்மையுடைய வாயு, திரவம் போன்றவற்றை வெளிப்படுத்தக்கூடிய எல்லா கருவிகளும்.

(ii) துப்பாக்கிகளின் எல்லாவித பாகங்களும் அல்லது துப்பாக்கிகளின் சத்தத்தை குறைக்கக்கூடிய உபகரணங்கள் அல்லது வெளிச்சத்தை உண்டு பண்ணக்கூடிய பொருட்கள்.

(iii) துப்பாக்கிகளை உற்பத்தி செய்ய பயன்படுத்தும் எந்திரங்கள் அல்லது அதன் பாகங்கள்.

(iv) அல்லது ஆயுதங்களை ஏற்றி செல்ல அல்லது வைத்திருக்க உபயோகப்படுத்தும் வாகனங்கள் ஆகியவற்றைக் குறிக்கும்

பிரிவு - **2** (1) **(f)**

**அனுமதி வழங்க அதிகாரம் உடையவர்**

## Licencing Authority

அனுமதி வழங்க அதிகாரம் உடையவர் (Licencing Authority) என்பவர் ஆயுத சட்டப்படி அரசாங்கத்தால் ஆயுதங்களை வைப்பதற்கு அனுமதி கொடுப்பதும் அல்லது புதுப்பிக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டவர்.

பிரிவு - **2(1)(h)**

**தடை செய்யப்பட்ட ஆயுதங்கள்**

தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் என்பது மத்திய அரசால் Gazette-ல் விளம்பரப்படுத்தப்பட்டதும், விஷ வாயு, விஷ திரவம் அடங்கிய ராக்கெட்டுகள், வெடிகள் (Bomb), Gremades. shells யுத்தத்திற்கு உபயோகப்படுத்தும் அல்லது நீர் மூழ்கி கப்பல்களில் உபயோகப்படுத்தும் வெடி குண்டுகள், வெடி மருந்துகள் ஆகியவை தடைசெய்யப்பட்ட ammunition என்று சொல்லப்படும்.

**பிரிவு - 2 (1) (i)**

**தடை செய்யப்படட ஆயுதம்**

## Prohibited Arms

துப்பாக்கிகளில் உள்ள Trigger-யை அழுத்தும் போது அதிலிருந்து குண்டுகள் வெளிப்படும் அளவுக்கு உள்ள ஆயுதங்கள் அல்லது துப்பாக்கியின் Magazine-களில் உள்ள குண்டுகளை தானாக ஒரே சமயத்தில் வெளியாக்கும்சக்தி கொண்ட ஆயுதங்களைக் குறிக்கும்.

அல்லது விஷ வாயு, விஷ திரவம் போன்றவற்றை உபயோகிக்கும் ஆயுதத்தில் இருந்து வெளிப்படுத்தும் தன்மையுள்ள, தரைப்படை, விமானப்படை, கடற்படை, டாங்குகள் ஆகியவைகளில் யுத்தத்திற்காக உபயோகப்படுத்தக்கூடியவை மற்றும் மத்திய அரசாங்கத்தால் Gazette-ல் வெளியிடப்பட்ட எல்லா விதமான தடை செய்யப்பட்ட ஆயுதங்களைக் குறிக்கும்.

பிரிவு - 2 **(1)(I)**

## Public Servant

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 21-ல் கூறப்பட்டவை இதில் அடங்கும்.

பிரிவு - 3

**ஆயுதங்கள், வெடி மருந்துகள் இவைகளை கைவசம் வைப்பதற்கும் உபயோகிப்பதற்கும் உரிமம்**

## Licence for Acquisition and Possession of Fire Arms and Ammunitions

எந்த நபராகிலும் இந்த சட்டத்தின்படி அரசாங்கத்தால் இதற்காக அதிகாரியால் கொடுக்கப்படும் லைசன்ஸ் இல்லாமல், எந்த விதமான துப்பாக்கியையோ, வெடி மருந்தையோ தன்வசம் வைத்திருந்தாலோ

அல்லது எடுத்து செல்லவோ கூடாது. இந்த சட்டத்தின்படி லைசன்ஸ் கிடைக்கப்பெற்றவர், நடுவரின் அனுமதி அல்லது கைப்பட எழுதிய உத்தரவு இல்லாமல் லைசன்ஸ் இல்லாத ஒருவர் அவருடைய ஆயுதங்களை எடுத்து செல்லவோ அல்லது உபயோகிக்கவோ அல்லது புதுப்பிக்கப்படுவதற்காக எடுத்துச் செல்லவோ கூடாது.

பிரிவு - 4

## துப்பாக்கிகள், வெடி மருந்துகள் வைப்பதற்கு வேண்டிய அனுமதி இல்லாமை

மத்திய அரசாங்கம் தனக்கு கிடைத்த தகவலின்படி பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்காமல் இருப்பதற்கு குறிப்பிட்ட பொதுமக்களுக்கு துப்பாக்கி, வெடி மருந்து வைத்திருப்பதில் ஒழுங்கு முறைகள் வேண்டுமென்று கருதினால் அந்த குறிப்பிட்ட ஊர்களில், பொதுமக்களுக்கு குறிப்பிட்ட வகுப்பினருக்கு எந்தவிதமான அல்லது குறிப்பிடப்பட்ட அடையாளங்கள் உள்ள ஆயுதங்களை தவிர வேறு எந்தவிதமான ஆயுதங்களோ தன் கைவசம் வைத்திருக்கக் கூடாது என்று ஆணை பிறப்பிக்கலாம்.

பிரிவு - 19

## லைசென்ஸ் ஆஜர் செய்ய கேட்கும்போது காண்பிப்பது
## Power to Demand Production of Licence etc.

1. எந்த காவல் அலுவலரும் அல்லது மத்திய அரசால் நியமிக்கப்பட்ட அல்லது மாநில அரசால் அதிகாரம் கொடுக்கப்பட்ட இந்த சட்டத்தின்கீழ் பணியாற்றும் எந்த அதிகாரியும் இந்த சட்டத்தின்படி அனுமதி வாங்கியுள்ள எந்த நபரும் சோதனைக்காக அனுமதியைக் காண்பிக்கும்படி கேட்டால் உடனே அனுமதியைக் காட்ட வேண்டியது அவர்களுடைய கடமையாகும்.

2. காவல் அதிகாரிக்கோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அதிகாரிக்கோ அவ்வாறு கேட்கும்போது அனுமதியை (Licence) காண்பிக்க மறுத்தாலோ அல்லது காண்பிக்கத் தவறினாலோ அந்த போலீஸ் அதிகாரி அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரி அவருடைய பெயர், விலாசம் கேட்டு தெரிந்துகொண்டு எழுதிக்கொள்ளுதல் வேண்டும். மேலும் தேவை என்று கருதினால் அந்த நபர் எடுத்து சென்ற ஆயுதம், வெடி மருந்து ஆகியவற்றை கைப்பற்றவும் செய்யலாம்.

3. மேற்கண்ட நபர் தன்னுடைய பெயர், விலாசம் கொடுக்க மறுத்தாலோ அல்லது அவர் கொடுக்கும் பெயர், விலாசம் பொய்யாக இருக்கும் ஏ்னறு கருதினாலோ அல்லது சந்தேகம் எழுந்தாலோ அல்லது மேற்படி நபர் பொய் விலாசம் கொடுத்துவிட்டு ஓடிப்போக நினைக்கிறார் ஏ்னறு தெரிந்தாலோ அந்த போலீஸ் அதிகாரி அல்லது அதிகாரம் பெற்ற மற்ற அதிகாரி அந்த நபரை நீதிமன்றத்தின பிடியாணையில்லாமல் கைது செய்யலாம்.

பிரிவு - 20

## சந்தேகச் சூழ்நிலையில் ஆயுதம் வைத்திருப்போரை கைது செய்தல்
## Arrest of Persons Conveying Arms etc. Under Suspicious Circumstances

ஏதாவது ஒரு நபர் தன்கைவசம் வைத்திருக்கும் அல்லது எடுத்து செல்லும் ஆயுதம் அவை அனுமதி சீட்டுடன் இருந்தாலும் கூட, தவறான காரியத்திற்கு பயன்படுத்தப்படும் என சந்தேகம் ஏற்படும் சூழ்நிலையில் ஒரு குற்றவியல் நடுவரோ அல்லது காவல் துறை அதிகாரியோ அல்லது எந்த பொது ஊழியரோ அல்லது ரயில்வே, விமானம், கப்பல் ஆகியவைகளில் வேலை செய்யும் அல்லது வேறு

எந்த வாகனத்திலாவது நடத்தி செல்லும் ஊழியர்கள் யாராகிலும் அந்த சூழ்நிலையில் ஆயுதங்களை எடுத்து செல்லும் நபர்களையும் பிடியாணையுல்லாமல் கைது செய்யும் சந்தேகப்பட்ட ஆயுதங்களை கைப்பற்றவும் அதிகாரம் உண்டு.

பிரிவு - 25

## சில குற்றங்களுக்கு தண்டனை
## Punishment for Certain Offences

எவராகிலும் ஒருவர் சட்டப் பிரிவு 3-ல் கூறியபடி இல்லாமல் எந்தவிதமான ஆயுதங்களையோ, துப்பாக்கிகளையோ, வெடிமருந்துகளையோ வைத்திருப்பதோ அல்லது எடுத்துச் செல்வதோ அல்லது இன்னொருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளவோ கூடாது.

இந்த சட்டத்தின்படி பிரிவு 4-ல் சொல்லிய சட்டத்திற்கு புறம்பாக வெளிப்படுத்தப்பட்ட அல்லது மத்திய அரசால் Gazette மூலம் அறிவிக்கப்பட்ட எந்த விதமான குறிப்பிட்ட ஆயுதமோ, துப்பாக்கியோ அல்லது வெடி மருந்தோ தன்கைவசம் வைத்திருந்தாலோ அல்லது எடுத்துச் சென்றாலோ குற்றமாகும்.

மேற்கண்ட குற்றங்களுக்கு 3 வருட சிறைக்காவல் தண்டனையோ, அபராதமோ அல்லது இரண்டு தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு - 27

## ஆயுதங்கள், துப்பாக்கி வெடிமருந்து வைத்திருந்து அவற்றை சட்ட விரோதமான செயல்களில் ஈடுபடுத்த முற்படும் போது தண்டனை
## Punishment for Possessing Arms etc., with Intent to use them for Unlawful Purpose

எவராகிலும் ஒருவர் தன் கைவசம் எந்த விதமான ஆயுதங்களையோ, துப்பாக்கிகளையோ அல்லது வெடிமருந்துப் பொருட்களையோ தன் கைவசம் வைத்திருந்து அவற்றை ஏதாவது சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்துடனோ அல்லது வேறு யாருக்காவது சட்டவிரோதமான செயல்களில் செயல்படுத்த உதவி செய்தாலும், அந்த காரியம் நடந்தாலும் அல்லது நடக்காவிட்டாலும் 7 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு - 28

## சில சமயங்களில் ஆயுதங்களோ, துப்பாக்கிகளோ, வெடிமருந்தோ உபயோகிக்கும் போது அல்லது பொய் துப்பாக்கிகளை உபயோகிக்கும் போது தண்டனை

எவராகிலும் சட்டபூர்வமாக கைது செய்யப்படும்போது அல்லது மற்றோருவரை கைது செய்யும்போது உதவியாக கைது செய்யப்படுவதிலிருந்து தண்டனையோ அல்லது மற்றவரை விடுவிக்க அல்லது தடுக்க நினைத்து யாராவது துப்பாக்கியோ அல்லது துப்பாக்கி போல் உள்ள பொய் துப்பாக்கியோ உபயோகப்படுத்தினாலோ அல்லது உபயோகப்படுத்த முயற்சி செய்தாலோ 7 வருடம் சிறைக்காவல் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு - 29

## லைசன்ஸ் இல்லாதவரிடமிருந்து தெரிந்தும் ஆயுதம் வாங்குதல், லைசன்ஸ் இல்லாதவருக்கு ஆயுதம் விற்றல்

## Punishment for Knowingly Purchasing Arms, etc., from Uinlicensed Person or to Person not Entitled to Possess the Same

எவராகிலும் வேறு ஒருவரிடமிருந்து ஆயுதங்களை விற்பதற்கு அவரிடம் அனுமதிச் சீட்டு (Licence) இல்லை என்று தெரிந்தும் அவரிடமிருந்து ஆயுதங்களையோ, துப்பாக்கிகளையோ அல்லது வெடிமருந்துகளோ விலைக்கு வாங்கினாலும், அல்லது

இந்த சட்டப்படி ஒருவருக்கு லைசன்ஸ் இருக்கிறதா அல்லது இல்லையா என்று தெரிந்து கொள்ளாமல், அல்லது இந்த சட்டப்படி ஆயுதம் வைப்பதற்கு தடை செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிந்து கொள்ளாமல் லைசன்ஸ் இல்லாத ஒருவருக்கு யாராவது ஆயுதங்களையோ, துப்பாக்கிகளையோ அல்லது வெடி மருந்துகளையோ விற்பனை செய்தாலும் 6 மாதம் வரை நீடிக்கக்கூடிய சிறைக்காவல் தண்டனையும் அல்லது 500 ரூபாய் வரை அபராதமும் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

# வெடிமருந்துச் சட்டம், 1884

# THE INDIAN EXPLOSIVES ACT, 1884

பிரிவு - 1

1. இது வெடிமருந்துச் சட்டம், 1884 என்று அழைக்கப்படும்.
2. இந்த சட்டம் இந்தியா முழுமைக்கும் செல்லுபடியாகும்..

பிரிவு - 4

## Definition

Explosive- வெடிமருந்து என்பது -(1) Gun Powder (2) Nitro glycerine (3) Nitro glycol (4) Gun cotton (5) Di-nitro-toluene (6)Tri-nitro-toluene (7) Picric acid (8) Di-nitro phrnol (9) Tri-nitro-resorcinol (10) Cyclo tri-methlene trinitramine (11) Penta-erythritol tetranitrate, (12) Totryl (13) Nitro-garnidine (14) Lead azide (15) Lead styphynate (16) Fulminate of Mercury or any other metal diazo di-nitro phenol (17) Coloured fires or any other substance whether a single chemical compound or a mixture of substances, whether solid or liquid or gaseous used or manufacture with a view to produce a practical effect by explosion or Pyrotechnic effect and includes fog-signals fire works fuses, rackets Percussion caps, detonators cartridges ammunition of all description and every adaptation of preparation of an explosive.

பிரிவு - 5

வெடிமருந்துகள் தயார் செய்ய கைவசம் வைத்திருக்க உபயோகிக்க, விலைக்கு கொடுக்க, எடுத்துச் செல்ல, ஏற்றுமதி, இறக்குமதி செய்ய சட்டம் வகுத்தல்.

பிரிவு - 6

அபாயகரமான வெடிமருந்துகளைத் தயாரிக்க கைவசம் வைத்திருக்க ஏற்றுமதி, இறக்குமதி செய்வதை தடை செய்ய மத்திய அரசுக்கு அதிகாரம்.

பிரிவு - 9 (b)

## குறிப்பிட்ட குற்றங்களுக்கு தண்டனை
## Punishment for Certain Offences

1. 1. எவரேனும் வெடிமருந்து சட்ட பிரிவு (Explosive Act) 5-ல் குறிப்பிட்டுள்ளபடி அனுமதி பெறாமல்.

    (a) வெடிமருந்தை தயாரித்தாலோ, ஏற்றுமதியோ அல்லது இறக்குமதியோ செய்பவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனையும் அல்லது 5,000 ரூபாய்க்கு மேற்படாத அபராதமும் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

    (b) வெடிமருந்தை வைத்திருந்தாலும், உபயோகப்படுத்தினாலும், விற்பனை செய்தாலும், எடுத்துச் சென்றாலும் 2 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது 3,000 ரூபாய்க்கு மேற்படாத அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

    (c) மற்ற எந்தவித வழக்குகளிலும் வெடிமருந்து சட்டப்படி 1,000 ரூபாய்க்கு மேற்படாத அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்.

2. எவரேனும் இந்த சட்டப்பிரிவு 6-ல் கூறியுள்ளபடி அறிவிப்பு செய்யாமல் அபாயகரமான வெடிமருந்து உற்பத்தி செய்வதும், வெடிமருந்து வைத்திருப்பதும், இறக்குமதி செய்வதும் அல்லது ஏற்றுமதி செய்வதும் குற்றமாகும். இதற்கு 2 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனையோ அல்லது 5000 ரூபாய்க்கு மேற்படாத அபராதமோ அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். கடல் மூலமாக வெடிமருந்தை கடத்துபவருக்கு படகு, கப்பல் அதன் உரிமையாளரோ அல்லது அதன் தலைவரோ அல்லது ஆகாய மார்க்கமாக கடத்துபவருக்கு அதன் உரிமையாளரோ அல்லது அதன் தலைவரோ கடத்துவது அல்லது எடுத்து செல்வது ஒத்துக் கொள்ள கூடியதாக இல்லாத போது மேற்படி குற்றத்திற்கு 5000 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

3. (a) வெடிமருந்து சட்டப்பிரிவு 6(A)-ன் படி தடை செய்யப்பட்டு இருக்கும் போது வெடி மருந்தை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், வினியோகம் செய்தல், எடுத்து செல்லுதல், இறக்குமதி செய்தல் அல்லது வைத்திருத்தல் கூடாது.

    (b) இந்த சட்டப்பிரிவு 6 (B)-ன் படி வெடிமருந்தை விற்பனை விநியோகம், அல்லது அனுப்புதல் போன்ற செயல்களை செய்யக்கூடாது, என்று தடை விதித்திருக்கும்போது, மேற்படி குற்றங்களை புரிகின்றவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத தண்டனையும் அல்லது அபராதமும் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

    (c) இந்த சட்டப்பிரிவு 8-ல் கூறியுள்ளபடி வெடிவிபத்து ஏற்பட்டால் அதனை தெரிவிக்காமல் இருப்பவர்களுக்கு.

        (i) ரூ. 500க்கு மேற்படாத அபராதம் விதிக்கப்படும்.

(ii) அப்படி நிகழ்ந்த விபத்தில் மனித உயிருக்கு சேதம் விளைந்திருந்தால் அந்த தகவலை தெரிவிக்காமல் இருந்தால் 3 மாதத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு - 13

### அபாயமான குற்றங்களை புரிபவர்களை வாரண்டு இல்லாமல் கைது செய்வதற்கு அதிகாரம்

### Power to Arrest Without Warrant Persons Committing Dangerous Offences

அபாயகரமான குற்றங்களை செய்ய வெடிமருந்து சம்பந்தமான இந்த சட்டபிரிவுகள்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களையும் அல்லது அவர்களின் செயலால் அபாயமான வெடி விபத்து தீ விபத்து ஏற்படுத்துவோரையும் அல்லது அபாயகரமான வெடிமருந்துகளை தயார் செய்வோரையும் சேமித்து கிடங்குகளில் பதுக்கி வைப்போரையும் அல்லது இரயில் நிலையங்களில் உள்ள கிடங்குகளில், அல்லது விமானங்களில் அல்லது கப்பல்களில் வைப்போரையும் ஒரு போலீஸ் அதிகாரி, அல்லது அந்த கிடங்குகளின் சொந்தக்காரர், ஏஜெண்டுகள் அல்லது வேலையாள் அல்லது கிடங்குகளில் எஜமானரால் அதிகாரம் கொடுக்கப்பட்டவர் அல்லது இரயில்வே நிர்வாகத்தால் அதிகாரம் பெற்றவர் அல்லது கப்பல் துறைமுக அதிகாரி அல்லது விமானத்தின் மூத்த அதிகாரி, ஒரு குற்றவியல் நடுவரின் பிடியாணை இல்லாமல் கைது செய்து, அந்த இடத்தில் இருந்து அவரை கொண்டு சென்று காலதாமதம் இல்லாமல் அந்த குற்றவியல் நடுவர் முன்பு ஆஜர் செய்யலாம்.

# வெடி மருந்து பொருள் சட்டம் 1908

# THE EXPLOSIVES SUBSTANCES ACT, 1908

பிரிவு - 1

இந்த சட்டம் வெடிமருந்து பொருட்கள் சட்டம், 1908 என்று அழைக்கப்படும். இந்த சட்டம் இந்தியா முழுமைக்கும் இந்தியாவின் வெளியோ தங்கியிருக்கும் இந்திய குடிமக்களுக்கும் பொருந்தும்.

பிரிவு - 3

### வெடி விபத்துகளினால் மனித உயிருக்கு சேதம் விளைவித்தல் அல்லது சொத்துக்களுக்கு நஷ்டம் விளைவித்தலுக்கான தண்டனை

### Punishment for Causing Explosion Likely to Endanger Life or Property

எவரேனும் சட்டவிரோதமாக குற்றம் செய்யும் நோக்கத்துடன் வெடிமருந்து பொருட்களினால் விபத்து ஏற்பட செய்து அதனால் மனித உயிருக்கு நஷ்டமோ அல்லது பெரிய அளவிலான காயங்களோ அல்லது சொத்துக்களுக்கு நஷ்டமோ ஏற்பட செய்தால் ஆயுள் தண்டனையோ அல்லது 10 ஆண்டு சிறைக்காவல் தண்டனையோ அபராதத்துடன் சேர்த்து விதிக்கப்படும்..

பிரிவு - 4

### வெடிமருந்து பொருட்களினால் விபத்து உண்டு பண்ண முயற்சித்தல் அல்லது மனித உயிருக்கோ அல்லது பொருட்களுக்கோ ஆபத்து விளைவிக்கும் எண்ணத்துடன் வெடிமருந்து பொருட்களை தயார் செய்தல் ; வைத்திருத்தலுக்கு தண்டனை

### Punishment for Attempt to Cause Explosion or for Making or Keeping Explosive with Intent to Endanger Life or Property

எவரேனும் சட்ட விரோதமாக குற்றம் செய்யும் கருத்துடன் வெடிமருந்து பொருட்களின் மூலம் அல்லது வெடிமருந்து பொருட்களை வெடிப்பதற்காக சதித்திட்டம் தீட்டினாலோ அல்லது மனித உயிருக்கோ அல்லது சொத்துகளுக்கோ நஷ்டம் ஏற்படும் வகையில் ஏதேனும் ஒரு காரியத்தைசெய்ய முற்பட்டாலோ அல்லது;

மேற்கண்டவைகளுக்கு வெடிமருந்து பொருட்களை செய்தாலோ அல்லது வைத்திருந்தாலோ அல்லது மனித உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையில் அல்லது சொத்துகளுக்கு நஷ்டம் ஏற்படும் வகையில் அல்லது மற்றோருவரால் ஆபத்து ஏற்படுத்தும் வகையில் தன்வசம் வைத்திருந்தாலோ, வெடி விபத்து நடந்தாலும், நடக்காவிட்டாலும் அல்லது மனித உயிருக்கு அல்லது சொத்துகளுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் அல்லது ஏற்படாவிட்டாலும் 20 வருடம் வரை சிறைக்காவல் தண்டனையுடன் அபராதமும் சேர்த்து விதிக்கப்படும் அல்லது 7 வருட சிறைக்காவலுடன் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு - 5

### சந்தேகமான சூழ்நிலைகளில் வெடிமருந்துப் பொருட்களை செய்வது அல்லது கைவசம் வைத்திருத்தலுக்கான தண்டனை

### Punishment for Making or Possessing Explosives Under Suspicious Circumstances

எவரேனும் சந்தேகமான சூழ்நிலைகளில் அவற்றை உபயோகிப்பதற்காக வெடிமருந்து பொருட்களை தன்வசம் வைத்திருந்தாலோ அல்லது தெரிந்தும் உபயோகப் படுத்துவதற்கு செய்தாலோ வைத்திருந்தாலோ, அல்லது அவ்வாறு வைத்திருக்கக் கூடிய நிலை சட்டவிரோதமான செயல்களில் செய்ய எத்தனிக்கும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தாலோ, சட்டப்படி உபயோகிக்கப்பட போவதில்லை என்று தெரிந்தாலோ 14 வருடம் சிறைக்காவல் தண்டனையுடன் அபராதமும் அல்லது 5 வருட கடுங்காவலும், அபராதமும் சேர்த்து விதிக்கப்படும்.

# போதை பொருள் தடுப்புச் சட்டம், 1985

# THE NARCOTIC DRUGS AND PSYCHOTROPIC SUBSTANCES ACT, 1985

இந்த சட்டம் 1985 முதல் அமுலில் உள்ளது. இந்தியா முழுவதிலும் அமுலில் உள்ளது.

பிரிவு - 2

**விதிகள்**

1. ***போதை பொருட்களின் அடிமை:*** போதை பொருட்களை இடைவிடாது உபயோகிப்பவன் போதை பொருட்களின் அடிமை ஆவான்

2. மத்திய, ஸ்தாபன வருமான சட்டம், 1963-ன் 54-வது பிரிவின்படி Central Excise Department (மத்திய ஆயத்தீர்வை) மற்றும் சுங்கவரி ஸ்தாபனம் ஆகும்.

3. ***Canabis அல்லது hemp plant என்பது –***

(a) கனாபீஸ் செடியிலிருந்து வடிக்கப்பட்ட சுத்தமானஅல்லது கச்சா திரவம் ஆகும். அதில் அடர்த்தி அதிகமான கஞ்சா லஹரி வஸ்தும் ஆகும்.

(b) கஞ்சா என்பது கனாபீஸ் செடியின் விதை மற்றும் பாகங்கள் இவைகள் தவிர உள்ள கஞ்சா செடியின் பூக்கள், கனிகள், கனிகளின் தசைகள் எந்த பெயரால் வழங்கப்படுகிறதோ அல்லது சொல்லப்படுகிறதோ ஆகும்.

(c) கஞ்சா கலவை என்பது இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ Canabis செடியிலிருந்து செய்யப்பட்ட பொருளோ அல்லது குடிப்பதற்கு ஏற்ற திரவமோ ஆகும்.

4. எந்த ஒரு தாவரமோ Canabis என்ற தாவர வகுப்பைச் சேர்ந்ததாயின் அது Canabis தாவரமாகும்.

5. ***கொக்கோ என்பது -***

(a) கொக்கோ செடியின் இலையிலிருந்து நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ வடித்தெடுக்கப்பட்ட கச்சா அல்லது சுத்தமான கொக்கெய்ன் என்ற திரவமாகும்.

(b) கொக்கெய்ன் என்பது A Cocaine என்பது கொக்கெயினிலிருந்து பெறப்பட்டதாகும்.

(c) கொக்கெய்ன் என்பது Bensoyl, A Coconine, Methyl, Ether ஆகும்.

(d) 0.1% அதற்கு மேல் அடர்த்தி உள்ளவை எல்லாம் கொக்கெய்ன் பொருட்களாகும்.

6. ***கோக்கோ இலை என்பது, -***

(a) A Cocaine, Coaine மற்றும் A Coconine அடங்கிய கொக்கோ இலை ஆகும்.

(b) அந்த வகையான இயற்கையாகவே அல்லது செயற்கையாகவோ செய்யப்பட்ட கலவை ஆகும். இதில் கொக்கெய்னின் அளவு 0.1% க்கு குறைவாக இருக்க வேண்டும்.

7. எந்த ஒரு தாவரம் (Erythoxine) என்ற தாவர குடும்பத்தைச் சேர்ந்ததோ அது கொக்கோ தாவரமாகும்.

8. போதை பொருட்களை ஆகாயம், கப்பல் அல்லது தரை மார்க்கமாக எடுத்துச் செல்வது குற்றம் ஆகும்.

9. போதை பொருட்களை உற்பத்தி செய்தல் என்பது-

(i) போதை பொருள் உற்பத்தி செய்வதைத் தவிர மற்ற எல்லாவிதமான செய்கைகளும் ஆகும்.

(ii) இது போன்ற பொருட்களை சுத்தம் செய்வது.

(iii) இது போன்ற பொருட்களை உருமாற்றம் செய்வது.

(iv) இது போன்ற பொருட்களை மருந்தகங்கள் தவிர மற்ற தனிநபர்கள் செய்வது ஆகும்.

*10. அபீன் என்பது.-*

(a) உறைய வைத்த அபினிக் கசகசாவின் சாராகும்.

(b) இயற்கையான மற்றும் செயற்கையான கலவை அதாவது 0.2% அளவுக்கு அதிகமான Morphine கொண்ட கலவையாகும்.

11. போதை பொருள் உற்பத்தி செய்வது என்பது அபீன், கொக்கோ, கொக்கோ இலே அல்லது கெனாபீஸ் இலையை அதன் செடியிலிருந்து பிரித்து எடுத்து செய்யப்படும் கலவை ஆகும்.

12. போதை பொருள் என்பது இயற்கையாக அல்லது செயற்கையாக பெறும் பொருளோ அல்லது திரவ வடிவமாக அல்லது திட வடிவமாக அல்லது உப்பு வடிவமாக அல்லது வேறு ஏதாவது செயற்கை முறையில் தயார் செய்யப்பட்ட பொருளைக் குறிக்கும்.

13. (a) Opium Poppy என்பது papaver – Somniferum என்ற தாவரப் பிரிவை சார்ந்தது ஆகும்.

(b) இந்த தாவர வகையை சேர்ந்த Papaver என்ற செடியிலிருந்து மத்திய அரசாங்கம் Gazette வெளியீட்டின் பிறகு அதிலிருந்து Opium Poppy என்ற போதைப்பொருள் தயார் செய்ய, வடிகட்டி எடுக்க உரிமை வழங்கப்பட்டது.

14. Poppy straw என்பது Opium Poppy செடியின் விதைகளைத் தவிர, அறுவடைக்குப் பின்பு அதன் முழு உருவத்திலோ அல்லது வெட்டிய துண்டுகளோ அல்லது அரைக்கப்பட்ட மாவு பொருளாகவோ, அல்லது அதிலிருந்து சாறு எடுக்கப்பட்டதோ அல்லது எடுக்கப்படாததையோ குறிக்கும்.

15. Psychotrophic Substance என்பது இயற்கையாக அல்லது செயற்கையான முறையில் அல்லது உப்பு வடிவத்தில் தயாரிக்கப்பட்டதும் இந்த சட்டத்தில் குறிப்பிட்டுள்ள அட்டவணை-படி தயார் செய்யப்பட்ட வஸ்துக்களைக் குறிக்கும்.

## பிரிவு - 8

## சில செயல்களுக்கு தடை

## Prohibition of Certain Offences

**எந்த நபராகிலும் எக்காரணத்தை முன்னிட்டும் :-**

(a) கொக்கோ செடிகளை விவசாயம் செய்யவோ, பயிரிடவோ அல்லது கொக்கோ செடியின் ஏதாவது பாகங்களை சேகரித்து வைக்கவோ கூடாது.

(b) Opium Poppy அல்லது எந்த வகையான Canabis செடிகளையும் பயிரிடுதல் கூடாது.

(c) இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதும், தடை செய்யப்பட்டதும் ஆன போதை பொருட்களையோ தயார் செய்தல், கைவசம் வைத்திருத்தல் விற்றல், வாங்குதல், எடுத்துச் செல்லுதல், கிடங்குகளில் அடைத்து வைத்தல், உபயோகித்தல், உட்கொள்ளுதல், ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு எடுத்துச் செல்லுதல், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல் (கடல், தரை, விமானம்) குற்றமாகும். ஆனால் மருத்துவத்துறை சம்பந்தமாக அல்லது ஆராய்ச்சி செய்வதற்காக அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட அளவு லைசன்ஸ் அல்லது பெர்மிட் எடுத்துச் செல்லலாம்.

## பிரிவு - 9

## மத்திய அரசால் கட்டுப்படுத்தும் அதிகாரங்கள்
## Central Goverrnment to permit, control and regulate

பிரிவு 8-ன் படி மத்திய அரசால் இயற்றப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு.

(a) (i) கொக்கோ செடிகளை அல்லது அதன் இலைகளை அல்லது அதிலிருந்து தயார் செய்யப்படும் போதை பொருட்களை விவசாயம் செய்வதற்கோ அல்லது சேகரித்து வைப்பதற்கோ பெர்மிட் அல்லது அதிகாரம் கொடுக்கும்.

(ii) இதுபோல Opium Poppy செடிகளை பயிர் செய்வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், முறைப்படுத்துவதற்கும் அனுமதி வழங்கும்.

(iii) Opium அதன் போதைப்பொருட்கள் Poppy Straw ஆகியவற்றை தயார் செய்வதற்கும்.

(iv) அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளிலிருந்து Opium அல்லது அதன் பாகங்களை மாநில அரசுக்கு மருத்துவ ரீதியாக பயன்படுத்தும் வகையில் விற்பனை செய்யலாம்.

(v) போதை பொருட்களை தயார் செய்யவோ, தன் கைவசம் வைத்திருக்கவோ, எடுத்துச் செல்லவோ மாநில அளவில் பரிமாற்றம் செய்யவோ விற்பதற்கோ, வாங்குவதற்கோ அல்லது உட்கொள்வதற்கோ விதிமுறைகள் அமைக்கலாம்.

(vi) இந்தியாவின் உள்ளிருந்தும், இந்தியாவிற்கு வெளியேயும் ஏற்றுமதி இறக்குமதி செய்ய விதிமுறைகள் வகுக்கலாம்.

## பிரிவு - 10

## மாநில அரசின் அதிகாரங்கள்
## Power of State Government to Permit Control and Regulate

இந்த பிரிவின்படி மாநில அரசால் போதை பொருட்களை குறிப்பிட்ட நபர்கள் வைத்துக்கொள்வதற்கும், உற்பத்தி செய்வதற்கும், ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கும் கட்டுப்பாடுகளை விதித்து அனுமதி வழங்கலாம்.

பிரிவு - 11

### போதை பொருட்களை கைப்பற்றுதல் சம்பந்தமாக

## Narcotic drugs and psychotrophic substances etc., not liable to distress or attachment

எந்தவிதமான போதை பொருட்களையும் அல்லது கொக்கோ செடி, Opium Poppy அல்லது canabis செடி ஆகியவைகளை எந்த நீதிமன்றமும் கைப்பற்றுவதற்காக அல்லது பணத்திற்கு பதிலாக கைப்பற்றுதலை செய்யக்கூடாது.

பிரிவு - 12

### போதை பொருட்களை கையாளுதல் பற்றி தடைகள்

## Restriction Over External Dealings in Narcotic Drugs and Psychotrophic Substances

எந்த நபரேனும் போதை பொருட்கள் சம்பந்தமாக வியபாரம் செய்தாலோ, ஏற்றுமதி, இறக்குமதி செய்தாலோ அல்லது அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

பிரிவு - 13

### போதை பொருட்களான கொக்கோ செடி அல்லது கொக்கோ இலைகளை வாசனைப் பொருட்களாக பயன்படுத்துவதற்கு தடை

## Special Provision Relating to Coco Plant, Leaves for use in the Preparation of Flavouring Agent

இந்த பிரிவில் கண்டுள்ளபடி தவிர மத்திய அரசு நிபந்தனையுடன் அல்லது நிபந்தனையின்றி குறிப்பிட்ட போதை வஸ்துகளை வாசனை பொருட்களாக உபயோகிப்பதற்கு நிபந்தனைகள் விதிக்கலாம். கொக்கோ செடிகளை அரசாங்கத்திற்காக பயிரிடுவதற்கோ, உற்பத்தி செய்வதற்கோ, வைத்திருப்பதற்கோ, வாங்குவதற்கோ, எடுத்துச்செல்வதற்கோ, இறக்குமதி,, ஏற்றுமதி செய்வதற்கோ மற்றும் பொருட்களின் வாசனையை அதிகரிக்க பயன்படுத்துவதற்கோ அதிகாரம் வழங்குகிறது.

பிரிவு - 14.

### Canabis பயிரிடுவதற்கு தடை

அரசாங்கத்தால் தொழிற்சாலைகளுக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிறுவனங்களுக்கு பிரிவு-8-ல் கூறியபடி சட்டவிதிகளுக்கு உட்பட்டு Canabis செடிகளை பயிரிடுவதற்கு விலக்கு அளிக்கிறது.

பிரிவு - 15

### பாப்பி ஸ்ட்ரா பயிரிடுவதற்கு தண்டனை

## Punishment for Contravention in Relation to Poppy Straw

எவரேனும் பாப்பி செடியின் வைக்கோல் அல்லது அதன் பாகங்களை, இந்த சட்டத்தின் மூலம் அரசாங்கத்தால் இயற்றப்பட்ட நிபந்தனையின் பேரில் அல்லாமல் உற்பத்தி செய்தாலோ, வைத்திருந்தாலோ, எடுத்துச் செல்லுதலோ, விற்பதோ, ஏற்றுமதி செய்வதோ அல்லது இறக்குமதி செய்வதோ அல்லது வாங்குவதோ குற்றமாகும். அப்படி செய்பவர்களுக்கு 10-ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும் அதோடு 1 லட்சம் முதல் 2 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு - 16

## Coco Plant பயிரிடுவதற்கு தண்டனை

## Punishment for Contravention in Relation to Coco Plant and Coco Leaves

இந்த சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு மாறாக எவரேனும் அரசாங்க அனுமதி இல்லாமல் கொக்கோ செடிகளையோ அல்லது இலைகளையோ உற்பத்தி செய்வதோ, வாங்குவதோ, விற்பதோ, பயிரிடுவதோ, எடுத்துச் செல்லுதலோ, ஏற்றுமதி, இறக்குமதி செய்தாலோ அல்லது வைத்திருப்பதோ குற்றமாகும். இந்த குற்றத்திற்கு 10 முதல் 20 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும் 1 முதல் 2 லட்சம் வரை அபராதமும் சேர்த்து விதிக்கப்படும்.

பிரிவு - 17

## செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட ஓப்பியம் அதற்கான தண்டனை

## Punishment for Contravention in Relation to Prepared Opium

இந்த சட்டத்தின் மூலம் அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் ஓப்பியம் என்ற போதை பொருளை உற்பத்தி செய்தாலோ, வைத்திருந்தாலோ, விற்றாலோ, வாங்கினாலோ, ஏற்றுமதி, இறக்குமதி செய்தாலோ குற்றமாகும். இந்த குற்றத்திற்கு 10 ஆண்டுகளுக்கு குறையாமல் 20 ஆண்டுகளுக்கு கூடாமலும் கடுங்காவல் தண்டனையும் 1 லட்சம் முதல் 2 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு - 18

## ஓப்பியம் பாப்பி அல்லது ஓப்பியம் வைத்திருந்தால் தண்டனை

## Punishment for Contravention in Relation to Opium Poppy and Opium

இந்த சட்டத்தின மூலம் அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் இந்த சட்டத்திற்கு முரணாக ஓப்பியம் பாப்பி செடிகளை பயிரிட்டாலோ அல்லது ஓப்பியம் தயார் செய்தாலோ, வைத்திருந்தாலோ, விற்றாலோ, வாங்கினாலோ ஏற்றுமதி, இறக்குமதி செய்தாலோ குற்றமாகும். இந்த குற்றத்திற்கு 10 ஆண்டுகளுக்கு குறையாத 20 ஆண்டுகளுக்கு மிகாத கடுங்காவல் தண்டனையும் 1 லட்சத்திற்கு குறையாத 2 லட்சத்திற்கு மேற்படாத அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு - 19

## சட்டத்தை மீறி ஓப்பியம் பயிரிடுபவர் செய்யும் குற்றத்திற்கான தண்டனை

இந்த சட்டத்தின் மூலம், அரசாங்கத்தால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஒப்பியம், கசகசா, அபீன் தயார் செய்யும் செடிகளை பயிடுபவர்கள் சட்டத்திற்கு விரோதமாக அதிகமாக பயிரிட்டாலோ அல்லது வைத்திருந்தாலோ அல்லது வேறு எந்த முறையிலாவது விற்பனை செய்தாலோ குற்றமாகும். இந்த குற்றத்திற்கு 10 ஆண்டுகளுக்கு குறையாத 20 ஆண்டுகளுக்கு மிகாத கடுங்காவல் தண்டனையும் அபராதமாக 1 லட்சம் ரூபாய்க்கு குறையாத 2 லட்சம் ரூபாய்க்கு மிகாத அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு - 20

## சட்டத்திற்கு புறம்பாக கனாபீஸ் செடிகளை பயிரிடுதலுக்கு தண்டனை

இந்த சட்டத்தின் மூலம் அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் அல்லது அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட லைசன்ஸ்க்கு புறம்பாக,-

(a) கனாபீஸ் செடிகளை பயிரிடுதல் அல்லது.

(b) கனாபீஸ் செடிகளை வைத்திருப்பதோ, வாங்குவதோ எடுத்துச் செல்வதோ, உள்நாட்டில் இறக்குமதி செய்வதோ அல்லது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதோ குற்றமாகும்.

(i) கனாபீஸ் செடி பயிரிடுவதற்கு அல்லது கஞ்சா செடி பயிரிடுபவர்களுக்கு 5 வருடம் வரை கடுங்காவல் தண்டனையும் 5000 ரூபாய் வரை அபராதமும் சேர்த்து விதிக்கப்படும்.

(ii) உட்பிரிவு (b)-ன் படி கஞ்சா செடிகளை தவிர கனாபீஸ் அல்லது வேறு எந்தவிதமான போதை செடிகளை உற்பத்தி செய்பவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு குறையாத 20 ஆண்டுகளுக்கு மிகாத கடுங்காவல் தண்டனையும் 1 லட்சம் ரூபாய்க்கு குறையாத 2 லட்சம் ரூபாய்க்கு மிகாத அபராதமும் சேர்த்து விதிக்கப்படும்.

பிரிவு - 22

## போதை மருந்துகள் சட்டத்திற்கு புறம்பாக செய்பவர்களுக்கு தண்டனை

இந்த சட்டத்திற்கு விரோதமாக எவரேனும் அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் போதை மருந்துகளை உற்பத்தி செய்வதோ, வைத்திருப்பதோ, வாங்குவதோ, எடுத்துச்செல்வதோ, ஏற்றுமதி, இறக்குமதி செய்வதோ உபயோகம் செய்வதோ குற்றம் ஆகும். இந்த குற்றத்திற்கு 10 ஆண்டுகளுக்கு குறையாத 20 ஆண்டுகளுக்கு மிகாத கடுங்காவல் தண்டனையும் 1 லட்சம் ரூபாய்க்கு குறையாத 2 லட்சம் ரூபாய்க்கு மிகாத அபராதமும் சேர்த்து விதிக்கப்படும்.

பிரிவு - 25

## இடத்திற்கு சொந்தக்காரர் இந்த சட்டத்தின் பிரிவுகளின் சம்பந்தப்பட்ட குற்றங்களை செய்ய அனுமதிக்கும் போது தண்டனை

## Punsihment for Allowing Premises etc., to be used for Commission of any Offences

எந்த நபரேனும் தனக்கு சொந்தமான அல்லது தன்னுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற அல்லது தன்னுடைய உபயோகத்தில் இருக்கின்ற தன்னுடைய வீட்டையோ, வீட்டின் ஏதாவது அறையையோ, ஏதாவது இடத்தையோ அல்லது ஏதாவது மிருகங்களையோ அல்லது வாகனங்களையோ தெரிந்தும் இந்த

குற்றங்கள் நடப்பதற்கு உடந்தையாக இருந்தால் 10 ஆண்டுக்கு குறையாத 20 ஆண்டுக்கு மிகாத கடுங்காவல் தண்டனையும், 1 லட்சம் ரூபாய்க்கு குறையாத 2 லட்சம் ரூபாய்க்கு மிகாத அபராதமும் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

பிரிவு - 27

## சிறிய அளவில் போதை பொருட்களை சட்ட விரோதமாக தன்வசம் வைத்திருத்தலும் அல்லது உபயோகிப்பதற்குமான தண்டனை

எவரேனும் இந்த சட்டத்திற்கு விரோதமாக மிக குறைந்த அளவில் போதை பொருட்களை தன்னுடைய உபயோகத்திற்காக அல்லது வியாபாரத்திற்காக வைத்திருந்தாலோ அல்லது உபயோகித்தாலோ குற்றமாகும்.

(a) எவரேனும் cocaine, morphine போன்ற போதை மருந்துகளை தன்வசம் வைத்திருந்தாலோ, உபயோகித்தாலோ, செய்தாலோ ஒரு வருடம் சிறைக்காவல் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

(b) இந்த சட்டத்தில் சொல்லப்படாத வேறு போதை பொருட்களை வைத்திருந்தாலோ அல்லது உபயோகப்படுத்திருந்தாலோ 6 மாதம் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

சிறிதளவு என்பது மத்திய அரசாங்கத்தால் வரையறுக்கப்படும்.

பிரிவு - 43

## போதைப் பொருட்களை கைப்பற்றுவதற்கும் பொது இடங்களில் கைது செய்வதற்கும் அதிகாரங்கள்

## Power of Seizure and Arrest in Public Places

42-வது பிரிவில் கூறியபடி அனுமதிக்கப்பட்ட Central Excise, Narcotic Wing, Customs, Revenue, Intelligence அல்லது மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட Border Security Force-ல் பணிபுரியும் கடைநிலை ஊழியர் முதல் எல்லா மேலதிகாரிகளும் அல்லது காவல் துறையின் எல்லா அதிகாரிகளும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் மூலம் இந்த சட்டத்தில் கூறப்பட்ட குற்றங்கள் புரிபவர்களை கைது செய்வதற்கும் அல்லது பொருட்களை, விலங்குகளை அல்லது வாகனங்களை மற்றும் சாட்சிக்கு உதவக்கூடிய பொருட்களை அந்த அதிகாரிக்கு குற்றம் என்று தோன்றினால் எல்லாவற்றையும் பறிமுதல் செய்வதற்கு அதிகாரம் அளிக்கிறது.

யாரையாகிலும் சந்தேக சூழ்நிலைகளில் சோதனையிடுவதற்கோ அல்லது நிறுத்தி வைப்பதற்கோ இந்த சட்டம் அனுமதி அளிக்கிறது. பொது இடம் என்பது ஒரு பொதுவான ரோடு, பொதுவான வாகனங்கள், ஓட்டல், விடுதிகள், கடைகள் அல்லது பொது ஜனங்கள் உபயோகப்படுத்துகிற எல்லா இடங்களையும் குறிக்கும்.

பிரிவு - 42

### ஓரிடத்தில் நுழைந்து சோதனை செய்து பொருட்களை கைப்பற்றி குற்றவாளிகளைக் கைது செய்ய அதிகாரம்

### Power of Entry, Search, Seizure and Arrest Without Warrant

இந்த பிரிவின்படி 43-வது பிரிவில் சொல்லப்பட்ட அதிகாரிகள் போதைப்பொருட்கள் இருப்பதாக அல்லது வைத்திருப்பதாக கிடைக்கும் தகவல் பேரில் எந்த இடத்திலும் நுழைந்து சோதனை செய்து அந்த பொருட்களை கைப்பற்றி குற்றவாளிகளை கைது செய்யலாம். அந்த செயலை செய்யும்போது எதிர்ப்பு இருந்தால், கதவை உடைத்து தடயங்களை அகற்றியும் உள்ளே நுழைந்து பொருட்களை கைப்பற்றலாம். குற்றவாளிகளை கைது செய்து நீதிமன்றத்திற்கு கொண்டு வரவேண்டும்.

# இலஞ்ச ஒழிப்பு தடுப்புச் சட்டம், 1947

# THE PREVENTION OF CORRUPTION ACT, 1947

இந்த சட்டம் 1947-ஆம் ஆண்டு மார்ச் 11-ஆம் தேதி இந்திய பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டது. இதன் நோக்கம் இலஞ்ச ஊழலைத் தடுப்பது ஆகும். இதில் மொத்தம் 8 பிரிவுகள் உள்ளன.

### பிரிவு - 3

**இந்த சட்டப்பிரிவின்படி எவரேனும் லஞ்சம் வாங்குவதற்கு உடந்தையாக இருந்தாலும் இந்திய தண்டனைச் சட்டம் 165 A-ன் படி அது பிடிக்கக்கூடிய குற்றமாக கொள்ளப்படுகிறது.**

### பிரிவு - 4

### Presumption where Public Servant Accepts Gratification other than Legal Remuneration

ஒரு பொது ஊழியர் தன்னுடைய சம்பளத்தைவிட கூடுதலாக லஞ்சம் வாங்குகிறார் என்று யூகித்தல்.

இந்திய தண்டனைச் சட்டம் 161, 165 பிரிவுகளின் கீழ் தண்டிக்கக்கூடிய குற்றம் செய்த ஒரு அரசு ஊழியர் தனக்கு சட்டபூர்வமாக அளிக்கப்பட்ட ஊதியம் போதுமானதாக இல்லை என்ற கருத்துடன், தானே அல்லது தனக்காக வேறு ஒருவர் மூலமாக வெகுமதி பெறுவது குற்றமாகும். தான் பெற்ற வெகுமதியை ஒரு பொது ஊழியர் நியாயமானது என்று கருதினாலும் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

### பிரிவு - 5

### தன்னுடைய வேலையை செய்யும்போது குற்ற நடத்தை

### Criminal Misconduct in Discharge of Official Duty

இந்த சட்டப் பிரிவில் இந்திய தண்டனைச் சட்டம் 161-ன் கீழ் ஒரு பொது ஊழியர் எவரிடமும், அத்தகைய பொது ஊழியர் என்ற முறையில் உத்தியோக பூர்வமான பணிகளை செய்ய அல்லது செய்யாமல் விட அல்லது அனுகூலம் செய்ய அல்லது பிரதி உபகாரம் காட்ட அல்லது காட்டாமல் விட எவருக்கேனும் உபகாரம் அல்லது உபகாரம் செய்வதற்கு செய்ய முயல்வதோடு தூண்டுகோலாக சன்மானமாக தனக்கோ அல்லது வேறு யாருக்காவது சட்டப்படியான ஊதியம் அல்லாத கைக்கூலி (இலஞ்சம்) எவரிடமிருந்தும் ஏற்பது அல்லது ஏற்க முயற்சி செய்வது அல்லது ஏற்க ஒப்புக்கொள்வது குற்றமாகும். இந்த குற்றத்திற்கு 3 ஆண்டுகள் தண்டனையும் அல்லது அபராதமும் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

# மக்கள் குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், 1955
# The Protection of Civil Rights Act, 1955

பிரிவு - 1

இது மக்கள் குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் என்று அழைக்கப்படும்.

பிரிவு - 2

## விளக்கம்
## Definition

(a) குடியுரிமை (Civil Rights) என்பது எந்த ஒரு தனி நபருக்கும் அவருடைய அடிப்படை உரிமைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் இவற்றில் எவருக்கும் தனி பாகுபாடு தீண்டாமையின் காரணமாக செய்யக்கூடாது.

தீண்டாமையை காரணம் காட்டி எந்த ஒரு நபரிடமும் எவரும் எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது என்பதை இந்திய அரசியல் சாசனக் சட்டம் பிரிவு 17-ல் வலியுறுத்தி உள்ளது.

(i) Hotel என்பது உணவு விடுதி,, சாப்பிடும் இடம், தங்கும் இடம், காப்பகம் தேநீர் விடுதி போன்றவை Hotel என்று பொருள்படும்.

(ii) Place என்பது வீடு, குடிசை, கட்டிடம் மற்றும் பல்வேறு வகையான குடியிருப்புகள், கூடாரம், வாகனம், கப்பல் எல்லாவற்றையும் குறிக்கும்

(iii) Place of public entertainment (பொதுவான பொழுதுபோக்கு இடங்கள்) என்பது பொது மக்கள் பொழுதுபோக்குவதற்காக உள்ள இடம். இதில் பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்துவதற்கு உள்ளவைகள் ஆகும். பொழுதுபோக்கு என்பது கண்காட்சி, விளையாட்டு அரங்கங்கள், திரை அரங்குகள், கலை அரங்குகள் மற்றும் வேடிக்கைக்காக அமர்த்தப்பட்ட இடங்கள்

(iv) (1) Place of public worship (வழிபாடு செய்யும் இடம்) என்பது தெய்வ வழிபாடு செய்யுமிடமாகும். எந்த ஒரு நபரும் அவரவர் விருப்பப்படி தன் மத கோட்பாட்டின்படி வணங்கவும், வழிபாடு செய்யவும், தொழில் செய்யவும் உரிமைப் பெற்றவர் ஆவார்.

(2) Scheduled Caste என்பது இந்திய அரசியல் சாசனச் சட்டம் article 366 clause 24–ன் படி அமைக்கப்பட்ட அட்டவணை ஆகும். அதில் தாழ்த்தப்பட்ட மக்களின் அட்டவணை இடம் பெற்றுள்ளது.

(3) Shop (கடை) என்பது சில்லரையாகவோ அல்லது மொத்த விற்பனைக்காகவோ பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட இடம். அதில் தள்ளுவண்டி, வாகனங்கள் ஆகியவைகள் அடங்கும். சலவை நிலையம், முடி திருத்தும் நிலையம் மற்றும் பொதுமக்களுக்கு கடமை செய்யும் எல்லாவிதமான இடங்களையும் குறிக்கும்.

## மத சம்பந்தமாக தடைகள் விதிப்பதற்குதண்டனை
## Punishment for Enforcing in Religious Disabilities

எவரேனும் ஒருவர் தீண்டாமை என்ற சொல்லின்படி யாரையேனும் -

(a) மத வழிபாடு செய்யும் எந்த இடத்திலும் உள்ளே பிரவேசிக்கக் கூடாது என்று தடுத்தாலோ

(b) அவ்வாறு வழிபாடு செய்யும் கோயில்களில் பிரார்த்தனை செய்வதையோ அல்லது கோயில் குளங்களில் குளிப்பதையோ அல்லது அங்குள்ள தண்ணீரை உபயோகப்படுத்துவதையோ அல்லது கோயிலில் உள்ள கிணறு, ஊற்று அல்லது பொதுவாக உள்ள ஆறு, ஏரி அல்லது குளத்தில் அமைக்கப்பட்டிருக்கும் குளியல் அறைகள் மற்ற இனத்தவர்கள் அனுபவிப்பது போல் ஒரே மதத்தைச் சார்ந்த பொது ஜனங்களை அனுபவிக்க விடாமல் தடுப்பது குற்றமாகும். இந்த குற்றத்திற்கு ஒரு மாத காலத்திற்கு குறையாத ஆறு மாதத்திற்கு மிகாத சிறை தண்டனையும் நூறு ரூபாயக்கு குறையாத ஐந்நூறு ரூபாய்க்கு மிகாத அபராதம் சேர்த்து விதிக்கப்படும்.

பிரிவு - 4

## சமுதாய உரிமைகளை தடுப்பதற்கு தண்டனை
## Punishment for Enforcing Social Disabilities

எவரேனும் ஒருவர் தீண்டாமை அடிப்படையில் யாரையாவது,-

1. ஒரு கடைக்கு போவதையோ அல்லது பொது விடுதிகளில் தங்குவதையோ அல்லது ஓட்டல் அல்லது பொதுவான பொழுதுபோக்கு இடங்களுக்கு செல்வதையோ;

2. பொது விடுதிகளில், ஓட்டல்களில், தர்மசாலை ஆகிய இடங்களில் எல்லோரும் உபயோகப்படுத்தும் பாத்திரங்களை அல்லது அங்கேயுள்ள மற்ற பொருட்களை உபயோகிப்பதற்கு தடை செய்தாலோ;

3. எந்த தொழிலையும் அல்லது வேலையையும் அல்லது வியாபாரத்தையும் செய்ய மறுத்தாலோ;

4. பொதுவுடமையான ஆறு, வாய்க்கால், ஊற்று, கிணறு, குளம், தண்ணீர் குழாய் ஆகியவைகளை உபயோகம் செய்ய தடுத்தாலோ அல்லது பொது குளியல் அறைகள், அடக்கம் செய்யும் இடங்கள், தகனம் செய்யும் இடங்கள் அல்லது சுகாதார இடங்கள், பொது ரோடுகள், பொது பாதை மற்றும் பொது

ஜனங்களுக்காக உள்ள எல்லா வசதிகளையும் மற்ற ஜாதிக்காரர்கள் உபயோகப்படுத்துவது போல ஜாதியின் அடிப்படையில் அனுபவிக்க தடுப்பது;

5. அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற அல்லது அரசாங்கத் துணையுடன் நடத்தப்படுகின்ற தர்மசாலைகள் அல்லது பொது இடங்கள் ஆகியவைகளை மற்ற பொது மக்கள் அனுபவிப்பது போல் அனுபவிக்க விடாமல் தடுப்பது;

6. தனி நபர்களால் அல்லது ஏதாவது ஒரு கூட்டமைப்பு மூலமாக நடத்தப்பட்டு வரும் ஒரு தர்மசாலை போன்றவற்றை அனுபவிக்க விடாமல் தடுப்பது;

7. பொது வாகனங்களில் பயணம் செய்வதை தடுப்பது ;

8. எந்த பகுதியிலும் நிலம் வாங்குவதையோ, வீடு கட்டுவதையோ, நில ஆர்ஜிதம் செய்யப்படுவதையோ தடுப்பது;

9. பொது மக்களுக்கு என்று ஏற்படுத்தப்பட்ட சத்திரங்கள், சாவடிகள் மடங்கள் ஆகியவற்றை மற்ற பொது ஜனங்கள் உபயோகிப்பது போல் உபயோகிக்க விடாமல் தடுப்பது;

10. தன்னுடைய மத சம்பந்தமான சமுதாயத்தில் பாரம்பரியப்படி உள்ள மத சடங்குகள் அல்லது சமுதாய நடப்புகள் ஆகியவற்றை நடத்துவதை கலந்து கொள்வதை தடுத்தல் ;

11. குறிப்பிட்ட ஆபரணங்களை அல்லது உடைகளை உபயோகிப்பதை தடுப்பது குற்றமாகும், இந்த குற்றத்திறகு ஒரு மாதத்திற்கு குறையாத 6 மாதத்திற்கு மிகாத சிறைக்காவல் தண்டனையும், 100 ரூபாய்க்கு குறையாத 500 ரூபாய்க்கு மிகாத அபராதமும் சேர்த்து விதிக்கப்படும் ;

பிரிவு - 5

## மருத்துவமனையில் அனுமதிப்பதை தடுத்தால் தண்டனை

## Punishment for Refusing to Admit Persons to Hospital etc.

***எவரேனும் தீண்டாமையின் அடிப்படையில்,*** -

மருத்துவமனைகளில் நோய்வாய்பட்டவர்களை அனுமதிக்க தடுத்தாலோ அல்லது மறுத்தாலோ அல்லது கல்வி நிலையங்களில் அல்லது மாணவர் விடுதிகளில் சேர்க்கப்படுவதை மறுத்தாலோ அல்லது தடுத்தாலோ;

அல்லது அவ்வாறு அனுமதிக்கப்பட்ட பின்பு தீண்டாமையின் காரணமாக பாகுபாடு படுத்தினாலோ குற்றமாகும். இந்த குற்றத்திற்கு 1 மாதத்திற்கு குறையாத 6 மாதத்திற்கு மிகாத சிறைக்காவல் தண்டனையும் 100 ரூபாய்க்கு குறையாத 500 ரூபாய்க்கு மிகாத அபராதமும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும் ;

பிரிவு - 6

## பொருட்களை விற்பதற்கும் சேவைகள் செய்வதற்கும் மறுத்தால் தண்டனை

## Punishment for Refusing to Sell Goods or Render Services

எவரேனும் தீண்டாமையின் அடிப்படையில் யாருக்காவது வியாபாரத்தின் போது பொருட்களை விற்க மறுத்தாலோ அல்லது வழக்கமாக மற்ற ஜாதியினருக்கு செய்யக்கூடிய சேவைகளை செய்யாமல் விட்டாலோ அல்லது செய்ய மறுத்தாலோ குற்றமாகும். இந்த குற்றத்திற்கு 1 மாதம் குறையாமல் 6 மாதத்திற்கு மிகாமல் உள்ள சிறைத் தண்டனையும் 100 ரூபாய்க்கு குறையாத 500 ரூபாய்க்கு மிகாத அபராதமும் சேர்த்து விதிக்கப்படும்.

பிரிவு - 7

## தீண்டாமையின் பேரில் செய்யப்படும் மற்ற குற்றங்களுக்கு தண்டனை

## Punishment for Other Offences Arising Out of Untouchability

1. எவரேனும் மற்றவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகள், சலுகைகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிடைக்காமல் செய்வது குற்றமாகும். அரசியல் சாசன சட்டம் article 17-ன்படி

2. தீண்டாமை என்ற பெயரில் யாரையாவது மானபங்கம் படுத்தினாலோ, காயம் உண்டு பண்ணினாலோ அல்லது கோபப்பட்டாலோ அல்லது செய்யும் தொழிலை தடுத்தாலோ, தடுக்க முயற்சி செய்தாலோ அல்லது ஒதுக்கி வைத்தாலோ, அல்லது தன்னுடைய உரிமையை உபயோகப்படுத்துவதை தடுத்தாலோ குற்றமாகும்.

3. தீண்டாமையின் அடிப்படையில் வார்த்தைகளால், வாய்மொழியாக அல்லது எழுத்து மூலமாக அல்லது ஜாடைகள் மூலமாக மற்றொருவரை தூண்டிவிட்டு அல்லது தானே தாழ்த்தப்பட்டவர்களை அவமானப்படுத்துவது குற்றமாகும்

4. தீண்டாமையின் அடிப்படையில் அட்டவணை இனத்தவரை அல்லது அவர்களின் சொந்தக்காரர்களை அவமதித்தல் அல்லது அவமதிக்க முயற்சி செய்தல் குற்றமாகும். இந்த குற்றத்திற்கு 1 மாதத்திற்கு குறையாத 6 மாதத்திற்கு மிகாத சிறைக்காவல் தண்டனையும் 100 ரூபாய்க்கு குறையாத 500 ரூபாய்க்கு மிகாத அபராதமும் சேர்த்து விதிக்கப்படும்.

பிரிவு - 10

## குற்றம் செய்ய தூண்டுதல்

## Abetment of Offence

இந்த சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களை புரிபவர்களுக்கு புரிவதற்கு யாரேனும் தூண்டினால் அந்தந்த குற்றத்திற்கு உள்ள தண்டனை கொடுக்கப்படும்.

பிரிவு - 13

## உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு

## Limitation of Jurisdiction of Civil Court

எந்த ஒரு உரிமையியல் நீதி மன்றமும் இந்த சட்டத்தின்படி எந்தவிதமான நடவடிக்கையோ அல்லது கட்டளையோ அல்லது உத்தரவோ நிறைவேற்றும்படி அல்லது இந்த சட்டம் முழுவதுமாகவோ அல்லது இந்த சட்டத்தின் ஒரு பகுதியையோ அல்லது ஏதேனும் உத்தரவையோ கட்டளையிட முடியாது.

தீண்டாமையை காரணம் காட்டி ஒரு நபரின் பழக்க வழக்கம் அல்லது ஒரு சமுதாய அமைப்பிற்கு எதிராக ஒரு கட்டளையோ அல்லது விசாரணையோ எந்த ஒரு உரிமையியல் நீதி மன்றமும் நிறைவேற்ற முடியாது.

# அத்தியாவசியப் பண்டங்களைப் பற்றிய சட்டம், 1955

# THE ESSENTIAL COMMODITIES ACT, 1955

பிரிவு - 2

அத்தியாவசியப் பண்டங்கள் அல்லது பொருட்கள் என்பது,-

1. மாட்டுத்தீவனம், புண்ணாக்குகள்
2. நிலக்கரி
3. மோட்டர் வாகன உதிரிப் பாகங்கள்
4. பருத்தி மற்றும் கம்பளி ஆடைகள்
5. மருந்துகள் (Sec.3 of Drugs and Cosmatics Act, 1940)
6. இரும்பு மற்றும் எஃகு பொருட்கள்
7. காகிதம் மற்றும் அதனைச் சேர்ந்த பத்திரிக்கைகள் மற்றும் பேப்பர் போர்டு
8. பெட்ரோலியம் அதன் சார்பு பொருட்களும்
9. பதப்படுத்தப்படாத பஞ்சு, பருத்தி விதைகள்
10. சணல் வகைகள்
11. மத்திய அரசாங்கத்தால் அப்போதைக்கப்போது அரசிதழ் மூலம் அறிவிக்கப்படும் எல்லா பொருட்களும்.

பிரிவு - 3

### அத்தியாவசிய பண்டங்களை உற்பத்தி செய்தல், விநியோகித்தல் சம்பந்தமாக கட்டுப்படுத்த அதிகாரங்கள்

## Power to Control Production Supply and Distribution of Essential Commodities

1. மத்திய அரசு தேவை என்று கருதும்போது, அத்தியாவசிய பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் அல்லது விநியோகம் செய்வதை நியாய விலை கடைகளின் மூலமாக அதிகரிக்க

வேண்டும் அல்லது ஒவ்வொருவருக்கும் சமமாக பங்கிடுதல் வேண்டும். அல்லது முப்படையைச் சேர்ந்த ராணுவத்திற்கு சமமாக கொடுக்கப்பட வேண்டும் என்று எண்ணும்போது அது சம்பந்தமாக விநியோகம் பண்ணுவதை அல்லது உற்பத்தி பண்ணுவதை நேர்மைப் படுத்தலாம்.

2. மத்திய அரசாங்கம் கிளைக்கூறு (1)-ல் சொல்லியபடி:-

(a) லைசன்ஸ் வழங்குவதில் ஒழுங்குமுறை செய்யவோ அல்லது அத்தியாவசிய பொருட்களை உற்பத்தி செய்வதில் ஒழுங்கு முறை ஏற்படுத்தலாம்.

(b) விவசாயம் நடக்காத தரிசு நிலங்களை அத்தியாவசிய பண்டங்கள் உற்பத்தி செய்ய அனுமதி அளிக்கலாம்.

(c)அத்தியாவசியப் பண்டங்களின் வாங்கும் விலையையோ, விற்கும் விலையையோ நிர்ணயிக்கலாம்.

(d)அத்தியாவசிய பண்டங்களை சேமித்து வைத்தல், விநியோகித்தல், கைப்பற்றுதல் ஆகியவற்றுக்கான ஒழுங்கு முறைகளை லைசன்ஸ் மூலம் நிர்ணயிக்கலாம்.

(e) பொதுவாக கடைகளில் விற்கப்படும் அத்தியாவசிய பண்டங்களை விற்பனை தடை செய்யவோ அல்லது நிறுத்தி வைக்கவோ செய்யலாம்.

(f) அவ்வாறு லைசன்ஸ் மூலம் அத்தியாவசிய பண்டங்களை உற்பத்தி செய்யவோ, விற்பதற்கோ அதிகாரம் பெற்றவர்களுக்கு.

(i) அத்தியாவசிய பண்டங்களை முழுவதுமாக அல்லது அதன் பகுதியை விற்பதிலிருந்து நிறுத்தி வைக்க சொல்லலாம்.

(ii) அத்தியாவசிய பண்டங்களின் உற்பத்தி குறையும்போது விலைக்கு கொடுப்பது விலைக்கு வாங்குவது பற்றிய தடைகள் விதிக்கலாம்.

பிரிவு - 7

## தண்டனைகள்

## Penalties

1. அத்தியாவசிய பண்டங்கள் தடுப்பு சட்டம் பிரிவு 3-ல் கூறியுள்ளபடி யாரேனும் ஒருவர் விதிகளை மீறினால் :-

(அ) பிரிவு 2-ல் கிளைப் பிரிவு-1ல் அதன்படி மீறி செயல்படுபவர்களுக்கு ஒரு வருடம் வரை சிறைக்காவல் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

(ஆ) அத்தியாவசிய பண்டங்கள் தடுப்பு சட்டத்தில் கூறியுள்ள வேறு எந்தவிதமான கட்டளைகளை அல்லது நிபந்தனைகளை மீறினால் குறைந்த பட்சம் 3 மாதத்திற்கு குறையாத சிறைத்

தண்டனையும் 7 வருடத்திற்கு மிகாத சிறைத்தண்டனையுடன் அபராதமும் சேர்த்து விதிக்கப்படும். அது சம்பந்தப்பட்ட அத்தியாவசிய பண்டங்களையும் அரசாங்கம் பறிமுதல் செய்யும்.

(இ) மேற்படி அத்தியாவசிய பண்டங்களை எடுத்துச் செல்வதற்காக உபயோகப்படுத்தும் மிருகங்கள், வாகனங்கள், கப்பல்கள் அல்லது வேறு எந்த முறையிலும் எடுத்துச்செல்ல உபயோகப்படுத்தும் பொருட்களை அரசாங்கத்திற்கு கைப்பற்றிக் கொள்ள அதிகாரம் உண்டு.

2. பிரிவு-3 கிளைப் பிரிவு 4-ல் சொல்லிய கட்டளைகளை மீறுபவர்களுக்கு 3 மாதம் குறையாத சிறைக்காவல் தண்டனையும் 7 வருடத்திற்கு மிகாத சிறைக்காவலும் தண்டனையாக விதிப்பதுடன் அபராமும் சேர்த்து விதிக்கப்படும்.

இந்த சட்டப்படி பிரிவு-7 கிளைப் பிரிவு-2 ல் கூறியுள்ள குற்றத்தை புரிந்து ஒருவர் இரண்டாவது தடவையாக புரிந்திருந்தால், இரண்டாவது தடவையாக புரியும் குற்றத்திற்கு அல்லது அதற்கு பின்பும் செய்யும் குற்றங்களுக்குக் குறையாத சிறைக்காவல் தண்டனையும் 7 வருடத்திற்கு மிகாத சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்து விதிக்கப்படும்.

3. இந்த சட்டப்படி தண்டனை அடைந்த நபர் இரண்டாவது முறையாக தண்டனை அடையும்போது கொடுக்கப்பட வேண்டிய தண்டனைக்கு கூடுதலாக குறைந்தபட்சம் 6 மாதத்திற்கு குறையாத கால அளவிற்கு அத்தியாவசிய பண்டங்களை விற்கவோ வினியோகம் செய்யவோ அல்லது உற்பத்தி செய்யவோ கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிடலாம்.

பிரிவு - 10

### நிறுவனங்களால் செய்யப்படும் குற்றங்கள்
### Offences by Companies

அத்தியாவசிய பண்டங்கள் தடுப்பு சட்டத்தின்படி அதை மீறி செயல்படும் நபர் ஏதாவது ஒரு நிர்வாகமாக இருந்தால், அந்த சமயத்தில் அதில் சம்மந்தப்பட்டிருக்கும் அனைவரும், அந்த நிர்வாகத்தின் அதிகாரி, அதன் பொறுப்பாளர்,அந்த நிர்வாகத்தின் வியாபாரத்தை கவனிக்கும் அதிகாரி எல்லோரும் மேற்கண்ட குற்றத்தை செய்ததாக கருதப்படுவர்.

ஒரு குற்றத்தை ஒரு நிர்வாகத்தில் பணிபுரியும் யாரேனும் ஒரு நபர் புரிந்தாலும் அந்த நிர்வாகம் தெரிந்து செய்ததாக கொள்ளப்படும். அந்த குற்றத்திற்கேற்ற தண்டனையை அவர்கள் பெற வேண்டும்.

# தந்திக்கம்பி (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) தடுப்புச் சட்டம், 1950

# THE TELEGRAPH WIRES (UNLAWFUL POSSESSION ) ACT, 1950

இந்த சட்டம் 1950 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு இந்தியாவின் அனைத்து பகுதிகளுக்கும் அமுலாக்கப்பட்டுள்ளது.

தந்திக்கம்பி என்றால் மின்விசை கொண்டு செய்தி அனுப்பும் கம்பி ஆகும். இந்தக் கம்பி தாமிரத்தால் (Copper) ஆனது.

பிரிவு - 4 **(A)**

## தந்திக் கம்பிகளை வாங்கவோ அல்லது விற்கவோ தடை
## Prohibition of Sale or Purchase of Telegraph Wires

இந்த சட்டம் அமுலில் வந்தபிறகு தந்தி கம்பிகளை யார் ஒருவரும் வாங்கவோ அல்லது விற்பனை செய்யவோ கூடாது. தந்தி கம்பிகளை தகுதி பெற்ற அதிகாரிகளின் அனுமதியின்றி வைத்திருப்பதும் கூடாது.

### பிரிவு - 5 (A)

## தந்திக் கம்பிகளை வைத்திருப்பதற்கு தண்டனை
## Penalty for Unlawful Possession of Telegraph Wires

எவரேனும் தன்வசம் எந்த அளவிலேனும் தந்திக் கம்பியை வைத்து இருந்தாலோ அல்லது வைத்திருப்பது நிரூபிக்கப்பட்டாலோ முதல் தடவையாக செய்த குற்றமாக இருந்தால் ஒன்று முதல் 5 வருடம் வரை சிறைத் தண்டனையும் 1000 ரூபாய்க்கு மேல் அபராதமும் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படலாம்.

இரண்டாவது முறையாக அல்லது அதற்கு கூடுதல் முறையாக இந்த குற்றம் நிரூபிக்கப்பட்டால் 2 வருடத்திலிருந்து 5 வருடம் வரை தண்டனையும் 2000 ரூபாய் வரை அபராதமும் இரண்டும் சேர்த்து விதிக்கப்படலாம்.

### பிரிவு - 6 (A)

## பிரிவு-3 மற்றும் 4 ஆகியவற்றை மீறும் போது தண்டனை
## Penalty for Contravention of Prohibition of Sections 3 & 4

எவரேனும் பிரிவு 3 அல்லது 4 ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு 6 மாதம் சிறைக்காவல் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படலாம்.

காவல் துறையில் பணிபுரியும் உதவி ஆய்வாளர் அல்லது அதற்கு மேற்பட்ட போலீஸ் அதிகாரிகள் சந்தேகப்பட்ட இடத்தை சோதனை செய்து தந்திக் கம்பிகளை கைப்பற்றுவதற்கும் அதற்காக உபயோகப்படுத்தப்பட்ட வாகனங்கள் அல்லது மிருகங்கள் ஆகியவற்றை கைப்பற்றுவதற்கு அதிகாரம் உண்டு.

### பிரிவு - 6 (B)

## தந்திக் கம்பிகளையும் வாகனங்களையும் பறிமுதல் செய்தல்
## Confiscation of Telegraph Wires Conveyance, etc.

இந்த சட்டப்படி யாரேனும் ஒருவர் தண்டனை அடைந்த பின் அவர் வசம் வைத்திருந்த தந்தி கம்பியையும் ஏற்றி செல்ல உபயோகித்த வாகனங்களையும் பறிமுதல் செய்ய கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.

# இரயில்வே சொத்துக்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) தடைச் சட்டம், 1966

# THE RAILWAY PROPERTY (UNLAWFUL POSSESSION) ACT, 1966

பிரிவு - 3

## சட்ட விரோதமாக இரயில்வே சொத்தை வைத்திருப்பதற்கு தண்டனை
## Penalty for Unlawful Possession of Railway Properrty

எவரேனும் ஒருவர் இரயில்வே சொத்தை திருடி வைத்திருந்தாலோ அல்லது சட்ட விரோதமாக பெற்றிருந்தாலோ இந்த சட்டப்படி குற்றமாகும்.

இந்த குற்றத்தை முதல் முறையாக செய்திருந்தால் 5 வருடம் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

இரண்டாவது தடவையாக அல்லது அதற்கும் மேலாக இந்த குற்றம் புரியப்பட்டிருப்பது நிரூபிக்கப்பட்டால் 2 வருடத்திற்கு குறையாத 5 வருடத்திற்கு மிகாத சிறைக்காவல் தண்டனையும் 2000 ரூபாய்க்கு குறையாத அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு - 12

## அதிகாரிகளின் வேண்டுகோளின்படி உதவி புரிதல்
## Officers required to assist

அரசாங்கத்தில் வேலை செய்யும் எல்லா அதிகாரிகளும், கிராம அதிகாரிகளும், இரயில்வே, உயர் அதிகாரிகளுக்கும் சிப்பந்திகளுக்கும் தங்களால் இயன்ற உதவியை செய்ய கடமைப்பட்டவர் ஆவார்.

# வனச் சட்டம், 1927
# THE FOREST ACT, 1927

பிரிவு-64

## பிடியாணையின்றி கைது செய்வதற்கான அதிகாரம்
## Power to Arrest Without Warrant

எவரேனும் வனத்துறையில் ஒரு மாதமோ அல்லது அதற்கு மேலும் தண்டனை பெறக்கூடிய குற்றத்தைப் புரிந்து .இருக்கிறார் என்று நியாயமான சந்தேகம் ஏற்படும்போது ஒரு குற்றவியல் நடுவரின் ஆணையோ அல்லது வாரண்ட் இல்லாமல் அந்த நபரை கைது செய்ய காட்டு இலாக்கா அதிகாரிகளுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் அதிகாரம் உண்டு.

அவ்வாறு கைது செய்யப்பட்ட நபரை தேவையில்லாத கால தாமதமின்றி அருகில் உள்ள ஒரு குற்றவியல் நடுவரிடமோ அல்லது அருகில் உள்ள காவல் நிலையத்திலோ ஒப்படைக்க வேண்டும்.

பிரிவு - 70

## கால்நடை அத்துமீறல் சட்டம், 1871

## The Cattle Trespass Act, 1871

ஒரு ஒதுக்கப்பட்ட அல்லது பாதுகாக்கப்பட்ட அல்லது சட்டப்படி எந்த ஒரு கால்நடையும் மேயக்கூடாது என்று தடுக்கப்பட்ட வனத்தில் அத்துமீறி நுழைந்தால் வனத்தைச் சேதப்படுத்தியதாக கருதப்படும். கால்நடை அத்துமீறல் சட்டம் 1871, பிரிவு 11-ன் படி கால்நடையைப் பட்டியில் அடைக்க காவல் துறை அதிகாரிக்கோ அல்லது வனத்துறை அதிகாரிக்கோ அதிகாரம் உண்டு.

# விபச்சார தடுப்புச் சட்டம், 1956

# THE IMMORAL TRAFFIC (PREVENTION) ACT, 1956 (ACT No. 104 of 1956)

இச்சட்டம் பாராளுமன்றத்தில் 7-வது குடியரசு ஆண்டில் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் இந்தியா முழுவதும் செல்லுபடியாகும்.

பிரிவு - 2

### விதிகள்

### Definitions

“விபச்சார விடுதி” என்பது எந்த ஒரு வீடு, அறை அல்லது வீட்டின் ஒரு பாகம் அல்லது அந்த இடம், இருவரோ அல்லது அதற்கு மேற்பட்ட நபருக்காக, மற்றவர்களுக்காக பால் புணர்ச்சியில், விபச்சாரியோடு ஈடுபடும் இடம் ஆகும்.

குழந்தையென்பது 16 வயது நிரம்பாத வயதுடையோர்கள் ஆவார்கள்.

(அ) **“வயது வந்தவர்”** (மேஜர்) என்பது 18 வயதுக்கு மேற்பட்டவராவர்.

(ஆ) **“வயது வராதவர்”** (மைனர்) என்பது 18 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட பருவ வயதை உடையவர் ஆவார்.

(இ) **“விபச்சாரம்”** என்பது பால் புணர்ச்சி அல்லது மனிதனை அவமானப்படுத்தும் (விபச்சார) செயலில் வியாபார நோக்கத்தோடு விபச்சாரியைப் பயன்படுத்துவதேயாகும்.

பிரிவு - 3

### விபச்சார இல்லம் நடத்துபவர் அல்லது அதற்கு இடம் கொடுத்து உதவுவதற்கான தண்டனை

### Punishment for keeping a brothel or allowing premises to be used as a brothel

1. எந்த ஒரு நபர் விபச்சார இல்லம் வைத்து இருக்கிறாறோ அல்லது நிர்வாகம் செய்கின்றாறோ அல்லது அத்தொழிலில் ஈடுபடுகின்றாறோ அல்லது அச்செயலுக்கு வியாபார நோக்கத்தோடு

துணைபுரிகின்றாறோ அவருக்கு முதல் முறையாயின் 1 ஆண்டு முதல் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் அல்லது ரூபாய் 1,000 அபராதமும் இரண்டாவது முறை அந்தத் தவறை செய்தால் அல்லது அதற்கு மேற்படின் 2 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும் ரூபாய் 2,000 வரை நீட்டிக்கக் கூடிய அபராதமும் விதிக்கப்படும்.

### *2.* எந்த ஒரு நபர்:

குத்தகைதாரரோ, குத்தகை விடுபவரோ, வைத்திருப்பவரோ அல்லது சொந்தக்காரரோ அல்லது இடத்தை உபயோகம் செய்பவரோ அல்லது தெரிந்தும் மற்றொரு நபருக்கு விபச்சாரத் தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பவர், அல்லது

இடத்திற்குச் சொந்தக்காரரோ, குத்தகை விடுபவரோ அல்லது வியாபாரம் செய்பவரோ அல்லது அவருக்கு தெரிந்து அல்லது அவரின் விருப்பத்திற்கு இணங்கி ஒரு இடத்தை விபச்சாரத் தொழிலுக்கு உதவுபவர், முதல் முறையாயின் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்சுடிய சிறை வாசம் மற்றும் ரூபாய் 2000 வரை நீட்டிக்கக் கூடிய அபராதமோ விதிக்கப்படும். அதுவே இரண்டாவது முறை அதற்கு மேற்படின் 5 ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய கடுங்காவல் தண்டனையும் அபராதமும் பெறுவர்.

பிரிவு - 4

## Punishment for living on the earnings of prostitution

எந்த ஒரு நபர் 18 வயதிற்கு மேற்பட்டு தெரிந்து முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ, விபச்சார தொழிலை வாழ்க்கையாக கொண்டிருந்தால் அவருக்கு இரண்டு ஆண்டு வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனையோ அல்லது ரூ 1000 வரை நீடிக்கக்கூடிய அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு - 5

## விபச்சாரத்திற்கு உதவி புரிதல் மற்றும் தூண்டுதல் அல்லது அந்த நபரை விபச்சாரத்திற்கு எடுத்துக் கொள்வதற்கான தண்டனை

## procuring, inducing or taking woman or girl for the sake of prostitution

1. உதவி புரிதல் அல்லது உதவி புரிய முயற்சித்தல் ஒருவருடைய அனுமதியின்றியோ அல்லது அனுமதியுடனோ விபச்சாரத்திற்கு ஈடுபடுத்துதல்.

2. ஒருவனை விபச்சாரம் செய்ய தூண்டினாலோ அல்லது விபச்சார விடுதியில் இருக்கச் செய்தாலோ.

3. ஒருவனை ஓர் இடத்திலிருந்து விபச்சாரத்திற்காக எடுத்துக்கொண்டாலோ அல்லது எடுத்துக் கொள்ள முயற்சித்தாலோ.

4. ஒரு பெண்ணை விபச்சாரததில் ஈடுபடுத்தினாலோ அல்லது தூண்டினாலோ அவர்களுக்கு 3 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய கடுங்காவல் தண்டனை மற்றும் ரூபாய் 2,000 வரை நீட்டிக்கக் கூடிய அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு - 6

## ஒரு நபரை விபசாரம் நடத்தும் இடத்தில் நிறுத்தி வைத்தல்
## Detaining a woman or girl in premises where prostitution is carried on

1. எந்த நபர் ஒரு பெண்ணை, அவளது விருப்பத்திற்கு இணங்கவோ அல்லது அவளது விருப்பத்தோடோ ஓர் இடத்தில் தங்க வைத்தல்.-

(அ) விபச்சார விடுதி : அல்லது

(ஆ) அந்த இடத்தின் ஊடோ அல்லது அந்த இடத்தின் அருகாமையிலோ ஒரு பெண் சட்டப்படியான தனது கணவருடன் அல்லாமல் வேறு ஒருவருடன் உடலுறவு கொண்டால் அது முதல் முறையாயின் அந்த குற்றத்திற்கு 1 ஆண்டுக்கு குறையாத 2 ஆண்டு மிகாத கடுங்காவல் தண்டனையும், ரூபாய் 2000-மும் அபராதமாக விதிக்கப்படும்.

2. அதே குற்றத்திற்காக, இந்த சட்டப்படி இரண்டாவது முறையாயின் 2 வருடத்திற்கு குறையாத, 5 ஆண்டுகளுக்கு மிகாத சிறைத் தண்டனையும், 2000 ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும்.

3. ஒரு நபர் ஒரு பெண்ணை அல்லது சிறுமியை விபச்சாரத் தொழிலுக்காக விபச்சாரம் நடக்கும் இடத்தில் அல்லது அந்த இடத்திற்கு அருகாமையில் அடைத்து வைத்து சட்டப்படி அவளுடைய கணவன் அல்லாத ஒருவருடன் உடலுறவு கொள்ள செய்தல்.

(அ) அவளுடைய உடைகள், அணிகலன்கள், பணம் அல்லது எந்தச் சொந்தப் பொருளையோ, அல்லது.

(ஆ) அவள் அணிகலன்கள், உடைகள், பணம் அல்லது எந்தப் பொருளையோ எடுத்துக் கொண்டாள் என்று பொய்யாகவோ அல்லது நிஜமாகலோ அதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதாகக் கூறி மிரட்டி அவளை ஒப்புக்கொள்ள செய்வது குற்றமாகும்.

பிரிவு - 7

## பொது இடங்களில் பார்வையில் விபச்சாரம் நடத்துதல்
## Prostitution in or in the vicinity of public place

1. எந்த ஒரு நபரும் ஒரு இடத்தில் விபச்சாரம் நடத்த அல்லது நடத்த நடக்கும்படி செய்ய இருக்கிறாறோ அந்த இடம்.-

(அ) பொது இடம் என்று போலீஸ் அதிகாரி அல்லது நீதிபதியாலோ குறிக்கப்பட்ட இடம், அல்லது.

(ஆ) மத சம்பந்தப்பட்ட இடம், ஓட்டல், மருத்துவமனை போன்ற பொதுமக்கள் புழங்கும் இடத்திலிருந்து 200 மீட்டருக்குள் விபச்சாரம் செய்தால் அதற்கு மூன்,றுமாதம் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனை வழங்கப்படும்.

2. எந்த நபர்,-

(அ) பொது இடத்தை வைத்திருந்து அந்த இடத்தைத் தெரிந்து விபச்சாரத் தொழிலுக்கு அனுமதித்தல், அல்லது.

(ஆ) குத்தகைக்குக் குடியிருப்பவர், குத்தகையிருப்பவர் அல்லது நிலச்சுவான்தார் அந்த ஒரு இடத்தை உப்பிரிவு (1)-ல் கண்டுள்ளபடி தெரிந்து விபச்சாரத்திற்கு உட்படுத்தினால், அல்லது.

(இ) ஒரு இடத்திற்குச் சொந்தக்காரர், வாடகை அல்லது குத்தகை விடுபவர் அல்லது நிலச்சுவான்தார் அவருக்குத் தெரிந்து எந்த ஒரு இடத்தை விபச்சாரத்துக்காக வாடகைக்கு விட்டாலோ அல்லது விபச்சாரம் நடத்துபவரிடம் ஒப்படைத்தாலோ:

முதல் முறையாயின் 3 மாதம் வரை சிறைத் தண்டனையும் ரூபாய் 200 வரை நீடிக்கக்கூடிய அபராதம் அல்லது இரண்டுமோ அதுவே இரண்டாம் முறை அல்லது அதற்கு மேற்படின் அபராதத்துடன் 6 மாதம் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனை விதிக்கப்படுவர். அவ்விடம் பொது இடமோ அல்லது ஓட்டலாகவோ, உரிமம் பெற்று நடத்தும் இடமாகவோ இருந்தால் மூன்று மாதம் முதல் 1 ஆண்டு வரை அந்த உரிமம் நிறுத்தி வைக்கப்படலாம்.

## பிரிவு - 8

## விபச்சாரத்திற்குத் தூண்டுவதோ அல்லது வேண்டுவதோ

## Seducing or soliciting for purpose of prostitution

எந்த ஒரு நபர் பொது இடம் அல்லது அதைச் சார்ந்த இடத்தில் விபச்சாரம் பார்வைக்கு அல்லது கேள்விக்கு கவனம் படும்படியான கட்டிடம் அல்லது வீடு அல்லது எந்த இடமாயினும்.

(அ) வார்த்தை நோக்கம், அவளின் விருப்பத்தோடு தன் உடையை விலக்கிக் காட்டும் இடம், ஜன்னல் அல்லது ஒரு கட்டிடத்தில் அல்லது வீட்டின் பால்கனி ஒருவனை விபச்சாரத்திற்கு ஈடுபடும்படி தூண்டச் செய்தாலோ, வசீகரித்தாலோ அல்லது அவனுடைய எண்ணத்தைத் திசை திருப்பினாலோ,

(ஆ) ஒருவனை விபச்சாரத்திற்கு ஈடுபடும்படி தூண்டச் செய்தாலோ, இடையூறு செய்தாலோ, தங்கச் செய்தாலோ அல்லது அச்செயலை செய்யச் செய்தாலோ அதன் மூலம் அதற்கு அருகாமையில் வசிப்பவர்கள் அல்லது அந்த வழியே போவோர்கள் அல்லது பொது மக்கள் ஆகியோருக்கு தொந்தரவு அல்லது அவர்களுடைய வாழ்க்கையை பாதிக்க விபச்சாரத் தொழில் செய்து மக்கள் அல்லது இடத்திற்கு விபச்சாரத் தொழிலால் பங்கம் ஏற்படுத்தினால் அதுவே முதல் முறையாயின் அவர்கள் 6 மாதம் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனை அல்லது 500 ரூபாய் வரை நீடிக்கக் கூடிய அபராதமோ அல்லது இரண்டுமோ அதுவே இரண்டாவது முறை அல்லது அதற்கு மிகுந்தால் ஒரு ஆண்டுவரை நீடிக்கக்கூடிய தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

## பிரிவு-10 (A)

## விபச்சாரிகளைப் பெண்கள் பாதுகாப்பு இல்லத்தில் அடைத்தல்

## Detention in a corrective institution

1. எந்த ஒரு பெண்ணும் விபச்சாரம் செய்வது பிரிவு 7 அல்லது 8-ன் படி செய்தல் மற்றும்.

2. அவளுடைய நடத்தை, உடல்நிலை, மனோநிலை மற்றும் அச்செயலைச் செய்வதற்கான சூழ்நிலையைப் பொறுத்து அவளைக் கோர்ட்டு உத்தரவின் பேரில் பாதுகாப்பு இல்லத்தில் அடைக்கலாம்.

## பிரிவு - 14

## விபச்சாரம் பிடிக்கக்கூடிய குற்றமாவது

## Offences to be cognizable

**குற்ற விசாரணை முறைச்சட்டத்தின் ஷரத்துகளில் உள்ள,-**

இதற்கென்று அமைக்கப்பட்ட போலீஸ் அதிகாரியோ அல்லது அவரது உத்தரவின் பேரிலோ, அவரது வழி நடத்தையின் பேரிலோ அல்லது அவரது முன் அனுமதியின் பேரிலோ வாரண்ட் இல்லாமல் விபச்சாரம் செய்பவரைக் கைது செய்யலாம்.

அப்படி கைது செய்யும் பட்சத்தில் அந்த கைது செய்யும் அதிகாரி இன்ன காரணத்திற்குக் கைது செய்கின்றோம் என்று அந்த நபருக்குச் சொல்லவோ அல்லது அந்த உத்தரவைக் காட்டவோ செய்ய வேண்டும்.

எந்தக் காவல் அதிகாரி (உதவி ஆய்வாளருக்கு) அதற்கென்று அதிகாரம் வழங்கப்பட்ட பதவிக்குக் குறையாமல் அவர் நம்பத்தகுந்த அளவுக்கு விபச்சாரத்தில் ஈடுபடுபவரை அவர் (குற்றவாளி) அக்குற்றத்தை மறைக்கவோ, அழிக்கவோ ஒரு நபர் குற்றம் புரிந்தார் அல்லது குற்றம் புரிய முற்பட்டார் என்பதிலிருந்து தப்பிக்க முற்படும் போதோ குற்றவாளியின் விலாசம் ஆகியவற்றை மறைத்து விடுவார் என்று தோன்றும் போதோ தகுந்த வாரண்ட் இல்லாமல் அந்த நபரைக் கைது செய்யலாம். அப்படி கைது செய்தால் அதற்கு முறையாக ஒரு ரிப்போர்ட்டை சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அனுப்ப வேண்டும்.

பிரிவு - 15

## வாரண்ட் இல்லாமல் சோதனை செய்வது

## Search without warrant

1. எந்த ஒரு சிறப்பு போலீஸ் அதிகாரியோ அல்லது விபச்சாரக் காரணத்தோடு தடுப்புக்காவல் அதிகாரியோ அவர் நம்பும் அளவுக்கு ஒரு நபர் ஒரு இடத்தில் விபச்சாரம் செய்கிறார் என்றால் அந்த அபத்தத் தொழிலை மறைப்பதற்கு முன்னர் காலதாமதமின்றி கண்டுபிடிக்க எந்தவித வாரண்டும் இல்லாமல் அந்த இடத்தில் நுழைந்து அவ்விடத்தைச் சோதனையிடலாம்.

2. அப்படி அவர் சோதனை செய்ய முற்படுகையில் அவர் இடத்தில் மதிக்கத்தக்க இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகள் (குறைந்தது ஒருவராகிலும் பெண்ணாக இருக்க வேண்டும்) அழைத்து அவர்கள் சாட்சியம் சொல்ல வருவதற்கு ஆதாரமாக அவர்களுக்கு எழுத்துப்பட அழைப்பு விட வேண்டும்.

3. அப்படி அந்தச் சாட்சிகள் சாட்சியம் கூற அழைக்கும் பட்சத்தில் மறுத்தால் 187 IPC-யின் மூலம் அவரும் ஒரு குற்றத்தைப் புரிந்தவராவார்.

4. அப்படி அந்த உபபிரிவு (1)-ன்படி அதிகாரி சோதனை செய்ய முற்படின் அங்குள்ள யாவரையும் அப்புறப்படுத்தலாம் (கைது செய்யலாம்).

5. அப்படி அப்புறப்படுத்தியவர்களை அந்த சரக எல்லைக்குட்பட்ட நீதிமன்ற நடுவரிடம் ஆஜர்படுத்த வேண்டும்.

(அ) அந்த வீடு, அறை, இடம் அல்லது பகுதி ஆகியவற்றை வைத்திருப்பவரை 7 நாட்களுக்குள் காலி செய்ய உத்தரவிடலாம்.

(ஆ) அப்படி நீதிமன்ற நடுவரால் இயற்றப்பட்ட ஆணையை எதிர்த்து அந்த நபரோ அல்லது நபர்களோ அந்த இடத்தில் தங்கவோ அல்லது மேல் முறையீடு செய்யவோ குறிப்பிட்ட 1 அல்லது 3 ஆண்டுகள் வரை செய்ய அனுமதிப்பதில்லை.

பிரிவு - 16

## விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டவரை விடுவித்தல்

எந்த ஒரு நீதிமன்ற நடுவர் தான் நம்பும் அளவுக்கு ஒரு பெண்ணை விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் தகவலை எந்த ஒரு போலீஸ் அதிகாரியிடமோ அல்லது எந்த ஒரு மாநில அரசின் அதிகாரம் பெற்ற நபரிடமிருந்தோ பெற்றால் அவர் எந்த ஒரு போலீஸ் அதிகாரியை (உதவி ஆய்வாளர் பதவிக்குக் குறையாமல்) அந்த நபரை மீட்டுத் தன் முன்னிலையில் ஆஜர்படுத்தும்படி உத்தரவிடலாம்.

அந்த காவல் அதிகாரி அவளை மீட்ட பின் உடன் அவளை அந்த நீதிம்னற நடுவரிடம் அவர் மேலும் ஒரு உத்தரவைப் பிறப்பிக்கும் முன் ஆஜர் செய்யப்பட வேண்டும்.

பிரிவு - 18

## விபச்சார விடுதியை மூடுதல் மற்றும் காலி செய்யச் செய்தல்

## Closure of brothel and eviction of offenders from the premises

1. ஒரு நீதிமன்ற நடுவர் ஒரு வீட்டில், அறையில், இடத்தில் அல்லது ஒரு பகுதியில் விபச்சாரம் நடைபெறுகின்றது என்றும் அல்லது விபச்சாரிகள் இருக்கின்றார்கள் என்றும் அவர் நம்பும் அளவிற்கு ஒரு தகவலை ஒரு காவல் அதிகாரியோ அல்லது மற்றவர்களோ அறிவித்தால் அந்த நீதிமன்ற நடுவர் ஒரு சம்மன் விடுக்கலாம்.

2. விபச்சாரிகள் இருக்கிறார்கள் அல்லது விபச்சார வியாபாரம் நடைபெறுகின்றது, ஒரு அறிக்கையை அந்த விபச்சார விடுதியை நடத்துபவர் உரிமையாளர், குத்தகைதாரர் அல்லது வாடகைக்கு இருப்பவர் அல்லது வாடகைக்கு விடுபவர் அல்லது குத்தகை விடுபவர் நிலச்சுவான்தாரருக்கு விடுத்து அந்த செயலுக்கான காரணத்தை அறிக்கையைப் பெற்ற 7 நாட்களுக்குள் சமர்ப்பிக்க செய்வார். அப்படி காரணம் அறிந்த பின் அந்நீதிமன்ற நடுவர் கீழ்க்கண்ட உத்தரவுகளை இட அதிகாரமுடையவராவார்.

(அ) விபச்சாரத்திற்காக பயன்படுத்தப்பட்ட வீடு, அறை, இடம் அல்லது பகுதி போன்றவற்றை 7 தினங்களுக்குள் காலி செய்ய உத்தரவிடலாம்.

(ஆ) அப்படி அந்த நபர் நீதிமன்ற உத்தரவை மீறின் அவருக்கு ரூ.500 வரை நீடிக்ககூடிய அபராதமோ அல்லது பிரிவு 3-ன் உட்பிரிவு (1)-துணைப்பிரிவு (b)-யின் படியோ அல்லது பிரிவு 7-ன் உபபிரிவு (2)-துணைப்பிரிவு (c)-யின் படியோ தண்டிக்கப்படுவார்.

பிரிவு - 20

## எந்த ஒரு இடத்திலிருந்து விபச்சாரியை துன்புறுத்தப்படுத்தல் அல்லது கைது செய்தல்

1. ஒரு விபச்சாரி ஒரு இடத்தில் (தனது எல்லைக்குட்பட்ட பகுதியில்) விபச்சாரத்தில் தொடர்ந்து ஈடுபடுகிறாள் என்றறிந்தால் அந்நீதிமன்ற நடுவர் அவளை அந்த இடத்திலிருந்து காலி செய்யவோ அல்லது அந்த இடத்தில் திரும்ப நுழையாமல் இருக்கவோ அறிக்கையின் மூலம் கணிக்கலாம், அதற்கென்று அவர் ஒரு சரித்திர பதிவேட்டைப் பராமரிப்பார்.

2. அப்படி விடும் அறிக்கையின் நகலை மறுபடியும் அந்த விபச்சாரியின் மீது சார்பு செய்வார்.

3. அப்படி அந்த அறிக்கைக்கும் கட்டுப்படவில்லை என்றால் அந்த நீதிமன்ற நடுவர் அந்த விபச்சாரியை குறிப்பிட்ட நாட்களுக்குள் அந்த இடத்தை விட்டோ அல்லது அவருடைய எல்லையை விட்டோ இடம் பெயர அல்லது அந்த இடத்தில் மீண்டும் குடியேறாமல் தடுக்கவோ உத்தரவிடலாம்.

4. அப்படி அந்த விபச்சாரி அந்த இடத்திலிருந்து காலி செய்யாமல் அல்லது அந்த இடத்தில் குடியேறினால் அல்லது விபச்சாரிகளை இறக்குமதி செய்தாலோ அல்லது மறைத்து வைத்தாலோ அந்நபருக்கு முதன் முறையில். ரூ 200 வரை நீடிக்கக் கூடிய அபராதமோ, அதுவே இரண்டாவது அல்லது அதற்கு மேற்படின் முதல் நாட்களுக்கு பின் ஒவ்வொரு நாளுக்கும் ரூ.20 அதிகமாக விதிக்கப்படுவார்கள்.

5. அப்படி ஆஜர்படுத்திய பின் தகுந்த மருத்துவ பரிசோதனைக்கு அந்த நீதிமன்ற நடுவர் பணிப்பார். அதன் மூலம் அந்த விபச்சாரியின் வயது, உடலுறவினால் ஏற்பட்ட காயங்கள் போன்றவை அல்லது பால் சம்பந்தப்பட்ட நோய் பரிமாற்றம் ஆகியவற்றை நிர்ணயிக்கலாம்.

# பாண்டிச்சேரி காவல் சட்ட திருத்த மசோதா, 1965
# THE PONDICHERRY POLICE AMENDMENT BILL, 1965

## பிரிவு - 29 (A)

1. மூடிய ஒரு இடத்தில் அல்லது கட்டடத்தில் காசு கொடுத்தோ, இல்லாமலோ (சினிமா) மக்கள் அனுமதிக்கப்படுகின்ற ஏதாவது ஒரு களியாட்டம் (சினிமா, நடனம், நாடகம் உட்பட) நடத்தப்பட்டால் அப்போது உட்பிரிவு (2)-ல் கண்டுள்ளபடி தடை செய்யப்படும் கால அளவுக்கிடையில் எவராகிலும்,-

(அ) புகை பிடிப்பதானது களியாட்டத்தின் ஏதாவது ஒரு பகுதியாக இருந்தால் ஒழிய மற்றபடி நாடக மேடையாகிலும், அல்லது

(ஆ) கொட்டகையாகிலும், பொது மக்கள் இடவசதி செய்யப்பட்டுள்ள மூடிய இடத்திலாகிலும், கட்டடத்திலாகிலும் புகை பிடிக்கக் கூடாது.

2. 1-ன் நோக்கங்களுக்காக தடை செய்யப்படும் கால அளவு என்பது களியாட்டம் ஆரம்பிக்கும் முன்னர் 30 நிமிடங்களிலிருந்து துவங்கி அது முடியும் வரையிலும் மாநில அரசாங்கம் அரசு இதழில் அறிக்கை வெளியிடுவதின் மூலம் பொதுவாக களியாட்டங்களுக்கு என்று இது சம்பந்தமாக குறிப்பிடும் காலத்திற்குள் அமையும் கால அளவைக் குறிக்கும்.

3. இப்பிரிவின் சரத்துக்களை மீறுகின்ற யாதொருவராயினும் யாதொரு காவல் அதிகாரியால் அம்மூடிய இடத்திலிருந்து அல்லது கட்டடத்திலிருந்து நிச்சயமாக வெளியேற்றப்படுவதுடன் ரூ.50 வரை நீடிக்கக்கூடிய அபராதமும் விதிக்கப்படுவார்.

4. உபபிரிவு (3ன்) கீழ் வெளியேற்றப்பட்ட யாதொருவராயினும் தாம் களியாட்டத்திற்கு அனுமதிக்கப்படுவதற்காக செலுத்திய யாதொரு கட்டணத்தை திரும்ப பெறுவதற்கு அல்லது வேறு ஏதாகிலும் நஷ்ட ஈட்டுக்கு உரிமை உடையவராகமாட்டார்.

## பிரிவு - 29 (B)

## தீ ஏற்படும் போது போலீசாரின் அதிகாரங்கள்

1. தீ ஏற்படும் போது காவலர் பதவிக்கு மேற்பட்ட யாதொரு போலீஸ் அதிகாரியாகிலும் அல்லது தீயணைப்பு வீரர் பதவிக்கு மேற்பட்ட யாதொரு தீயணைப்புபடை உறுப்பினராகிலும்.

a) தீயணைக்கும் செயலுக்கு அல்லது உயிரையாகிலும் பொருளையாகிலும் காப்பாற்றுவதற்கு தாம் அங்கு இருப்பதால் இடைஞ்சலாகிற யாதொரு வரையேனும் அகற்றி விடலாம் அல்லது அகற்றும்படி உத்திரவிடலாம்.

b) தீ எரிந்து கொண்டிருக்கும் இடத்தில் அல்லது அதற்கு அருகில் யாதொரு தெருவையாகிலும், பாதையாகிலும் மூடிவிடலாம்.

c) தாமாக அல்லது தமக்காக தமது கட்டளையின் கீழ் பணியாற்றுகிற மற்றவர்களைக் கொண்டு, கூடிய அளவு மிகக் குறைந்த சேதத்துடன் நெருப்பை அணைக்கும் நோக்கத்துக்காக யாதொரு இடத்திலாகிலும் நுழையவோ அல்லது கடந்து செல்லவோ அல்லது தகர்த்தெரியவோ அல்லது நீர்க்குழாய்களை உபயோகிக்கவோ செய்யலாம்,

d) தீ ஏற்பட்ட இடத்தில் யாதொரு பகுதியாகிலும் நீருக்கு அதிக அழுத்தம் ஏற்படும்படிப் பெரிதாகிலும் சிறிதாகிலும் நீர் குழாய்களை அமைப்பதற்கான அடைப்பினை செய்யலாம்.

e) கூடிய அளவு உதவியை பெறுவதற்காகத் தீயணைக்கும் இயந்திரத்துக்கு பொறுப்பானவர்களை அழைத்துக் கொள்ளலாம்.

f) பொதுவாக உயிராகிலும் பொருளாகிலும் காப்பாற்றப்படுவதற்கு தேவையெனத் தோன்றுகிற அளவு காரியங்களை மேற்கொள்ளலாம்.

2. தீ ஏற்பட்ட போது தீயணைப்புப்படை உறுப்பினர்களால் அல்லது தீயணைக்கும் படை யாதொன்றினால் அல்லது போலீஸ் அதிகாரிகளால் அல்லது அவர்களுக்கு உதவியவர்களால் தமது கடமைகளை நிறைவேற்றும் காலத்தில் ஏற்பட்ட யாதொரு அழிவாகிலும் நெருப்புக்குப் பாதுகாப்பாகச் செய்யப்படும் யாதொரு இன்ஸ்யூரன்ஸ் கொள்கையீன் பொருளுக்கு உட்பட்டு நெருப்பினால் ஏற்பட்ட அழிவாகவே கருதப்படும்.

***விளக்கம்:***

இப்பிரிவில் கண்டுள்ள யாதாகிலும் யாதொரு போலீஸ் அதிகாரி அல்லது தீயணைப்புப்படை உறுப்பினர் அல்லது தீயணைப்புப்படை தகுந்த காரணமில்லாமல் செய்கிற செயல்களுக்குத் தாமே பொறுப்பாவதிலிருந்து விதிவிலக்கு அளிக்காது.

## பிரிவு - **29 (C) of P.P. Act.**

## தவறுதலாக தீ என்று தகவல் கொடுப்பதற்கு தண்டனை

பொய்யாக அல்லது தவறுதலாக உள்ளது என்று அறிந்திருந்தும் தீ விபத்து என்று யாதொரு தீ அணைக்கும் படைக்கோ அல்லது தீ அணைக்கும் உறுப்பினருக்கோ அறிவிக்கின்ற முதல் குற்றத்திற்காக ரூபாய் 50 வரை நீடிக்கக்கூடிய அபராதமும் இரண்டாவது அல்லது அதற்கு மேற்பட்ட குற்றத்திற்கு ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

## பிரிவு-34 (A)

### சூரிய அஸ்தமனத்திற்கும் சூரிய உதயத்திற்கும் இடையில்

1. குற்றம் யாதாகிலும் புரியும் எண்ணத்துடன் ஆபத்தான யாதொரு கருவியை வைத்துக்கொண்டு.
2. குற்றம் ஏதாகிலும் புரியும் எண்ணத்துடன் முகத்தை மூடிக்கொண்டோ அல்லது வேறு விதமாக மாற்றம் கொண்டோ.
3. தமது செயலுக்கு திருப்தியான பதில் அளிக்க முடியாத நிலையில் கடை வீதியில் படுத்து இருந்தாலோ அல்லது சுற்றிக்கொண்டு இருந்தாலோ அல்லது ஒதுங்கி இருந்தாலோ.
4. தான் அங்கு இருப்பதற்கு திருப்தியான பதில் அளிக்கமுடியாத நிலையில் யாதொரு குடியிருக்கும் வீட்டிலோ அல்லது வேறு கட்டிடத்திலோ அல்லது யாதொரு கப்பல் தளத்திலோ அல்லது படகிலோ அல்லது.
5. சட்டப்படி மன்னிக்கக் கூடிய முறையிலன்றி வீடு உடைக்கும் ஆயுதத்தை தம்மிடம் வைத்து இருந்தாலோ போன்ற குற்றங்களுக்கு 3 மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

## பிரிவு - 34 (B) 1

### பொது இடங்களில் செய்யப்படும் குற்றங்களுக்கு தண்டனை (விளக்கில்லாமல் வாகனம் ஓட்டுதல்)

யாதொருவராகிலும் பொது இடத்தில் சூரிய அஸ்தமனத்திற்கு அரை மணி நேரத்திற்கப்புறமும், சூரிய உதயத்திற்கு அரை மணி நேரத்திற்கு முன்பும் உள்ள இடைப்பட்ட நேரத்தில் போதுமான வெளிச்சம் இல்லாமல் யாதொரு வாகனத்தையும் ஓட்டினால் அல்லது இழுத்தால் அல்லது தள்ளினால் இதன்படி குற்றம்.

## பிரிவு - 34 (B) 2

### சாலை விதிகளுக்கு முரண்பட்டு வாகனம் ஓட்டுதல்.

வேளைக்கு வேளை அரசிதழின் (Gazette)-ல் வெளியாகும் சாலை விதிகளுக்கு முரணான முறையில் யாதொரு வாகனத்தையாகிலும் ஓட்டினால் அல்லது இழுத்தால் அல்லது தள்ளினால் அல்லது ஒரு குறிப்பிட்ட ஒரு கால அளவில் போக்குவரத்து விதிமுறைக்கு பொறுப்பான ஒரு போலீஸ் அதிகாரியின் கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்தல்.

## பிரிவு- 34 (B) 3

### யாதொரு நடைபாதையின் மீதாகிலும் மிருகத்தை அல்லது வாகனத்தை ஓட்டுதல் முதலியவை

யாதொரு நடை பாதை மீதாகிலும் ஒரு மிருகத்தை நடத்தி சென்றால் அல்லது சவாரி செய்தால் அல்லது வாகனத்தை ஓட்டினால் அல்லது இழுத்தால் அல்லது யாதாகிலும் ஒரு மிருகத்தை ஒரு நடை பாதையின் குறுக்கே அல்லது அதன் மீது நிற்கும்படியான வகையில் கட்டி வைத்திருந்தால்.

## பிரிவு - 3 (B) 4

### ஆடு, மாடுகளை அல்லது வாகனத்தை குழந்தையின் பொறுப்பில்

### விட்டு வைத்திருத்தல்

எவராகிலும் ஆடு, மாடுகளை அல்லது வாகனத்தை 12 வயதிற்கும் குறைந்த வயதுடைய ஒரு குழந்தையின் பொறுப்பிலே விட்டு வைத்திருந்தால் அது குற்றமாகும்.

## பிரிவு - 34 (B) 5

### ஐந்து அடிகளுக்கு மேல் நீட்டிக்கொண்டிருக்கும் பொருளை எடுத்துச் செல்லுதல்

தான் வைத்திருக்கும் வாகனத்தில் அல்லது வாகனங்களின் முன் பக்கமோ அல்லது பின் பக்கமோ ஐந்து அடிகளுக்கு மேலாக நீட்டிக் கொண்டடிருக்கும் யாதொரு பொருளையாகிலும், தெருக்களின் வழியாக எடுத்துச் சென்றால் குற்றம்..

## பிரிவு - 34 (B) 6

### சங்கீதம் இசைத்தல், தண்டோரா போடுதல் முதலியன

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்களால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட யாதொரு அதிகாரியால் அனுமதிக்கப்படக்கூடிய நேரத்திலும் இடத்திலும் வழங்கப்பட்டுள்ள Licence-களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும் அன்றி மற்றபடி ஒரு முரசத்தையாகிலும் அல்லது தண்டோராவாகிலும் அடித்தால் அல்லது இசைக் கருவியை ஒலித்தால் அல்லது யாராகிலும் சங்கீதத்தை இசைத்தால் அல்லது ஒலிபெருக்கி உபயோகித்தால் இதன்படி குற்றம்.

## பிரிவு - 34 (B) 7

### சுவரொட்டிகளை ஒட்டுதல் அல்லது சுவர்களை அலங்கோலப்படுத்துதல்

யாதொரு பொது இடத்திலாவது அல்லது யாதொரு கட்டிடம், நினைவுச் சின்னம், சிலை, பிரதிமை (effigy) தூண், சுவர், வேலி, மரம் நிமிர்ந்து காணப்படும் பொருளமைப்பு ஆகியவற்றின் மீதாகிலும் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பவரின் சம்மதம் இல்லாமல் எவ்வகையிலாகிலும் யாதொரு சுவரொட்டி அறிவிப்பு, தஸ்தாவேஜ்,, காகிதம் அல்லது வேறு பொருளை ஒட்டினால் அல்லது ஒட்டும்படி செய்தால் அல்லது அவ்விதமான யாதொரு பொது இடத்தில் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் அல்லது பொருட்களில் யாதொரு விதமான உருவச் சிதைவு ஏற்படுத்தினால் அல்லது மேற்பகுதியிலேயோ எழுதினால் அல்லது வேறு விதமான குறிகளை ஏற்படுத்தினால் அல்லது அலங்கோலமாகும்படியான முறையில் அல்லது சிதைவு உருவச் சிதைவு ஏற்படும்படியான முறையில் எழுதினாலும் அல்லது வேறுவிதமான குறியிடப்படும் படி செய்தாலும் குற்றமாகும்.

## பிரிவு - 34 (B) 8

## பிச்சையெடுத்தல்

பிச்சையெடுத்தால் அல்லது பிச்சை கேட்டு முறையிட்டால் அல்லது யாராகிலும் புண், காயம், சரீர வாதை பிச்சையெடுக்கும் நோக்கத்துடன் வெளிக்காட்டினால் அல்லது விளம்பரப்படுத்தினால் குற்றமாகும்.

பிரிவு - 34 (B) 9

## பண்பற்ற அல்லது பயமுறுத்தலான சொல்லை உபயோகித்தல்

யாராகிலும் பண்பற்ற, பயமுறுத்துகிற திட்டுகிற அல்லது குத்தலான வார்த்தைகளை உபயோகித்தால் அல்லது பயமூட்டுகிற முறையில் அல்லது அவமதிக்கும் முறையில் நடந்து கொண்டால் அல்லது அமைதிக்கு பங்கம் விளைவிக்கிற நோக்கத்தோடு அல்லது அமைதிக்கு பங்கம் விளைவிக்கிற முறையில் சந்தர்ப்பத்தை பயன்படுத்தும் நோக்கத்தோடு பண்பற்ற பயமூட்டுகிற, திட்டுகிற உள்ள குத்தலான சொற்களை கொண்ட காகிதத்தையாகிலும் அல்லது சித்திரமாகிலும் உயரமான இடங்களில் ஒட்டி வைத்தால் அல்லது விளம்பரப்படுத்தி வைத்தால் குற்றமாகும்.

பிரிவு - 34 P.P. Act

## மகளிரை பொது இடத்திலோ அல்லது அலுவலகத்திலோ கிண்டல் செய்வதற்குத் தண்டனை

எந்த ஒரு மகளிரையும் வேண்டுமென்றே ஆசூசை படுத்துவதற்காக யாராவது ஒரு நபர் தன்னுடைய உடலையோ அல்லது தன் உடல் உறுப்புகளில் ஒரு பகுதியையோ அநாகரீகமான முறையில் வெளிப்படுத்தினாலோ, ஏதாவது சைகைகள் செய்தாலோ ஏதாவது வார்த்தைகள் கூறினாலோ அல்லது சப்தம் செய்தாலோ, இவ்வாறு உடலையோ அல்லது உடல் உறுப்புகளையோ காண்பித்தல். சப்தம் அல்லது சைகைகளை செய்தல் இவைகளை பொது இடத்தில் அல்லது அலுவலகத்தில் மேற்படி மகளிர் பார்க்க வேண்டும் அல்லது கேட்க வேண்டும் என்று நோக்கத்தில் செய்தால், மேற்படி உடல் உறுப்புக்களை காட்டுதல், சைகைகள் செய்தல் அல்லது சப்தம் அல்லது ஓசை எழுப்புதல் முதலியவை வீட்டிற்குள்ளிருந்தோ அல்லது கட்டிடத்திற்குள்ளிருந்தோ செய்தாலும் அல்லது அவைகளுக்கு வெளியிலிருந்து செய்தாலும் அப்படிச் செய்பவர்கள் மீது ஒரு மாதம் வரை நீடிக்கக் கூடிய கால அளவு சிறைத் தண்டனை அல்லது ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக் கூடிய அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

பிரிவு - 34 C

## பொது இடத்தில் தொல்லை கொடுப்பதற்குத் தண்டனை

யாதொரு பொதுவிடத்திலாகிலும் அல்லது அதன் அருகிலாகிலும் மலம் அல்லது சிறுநீர் கழிப்பதன் மூலம் தொல்லை கொடுக்கிற யாதொருவரும் அத்துடன் ஏழு ஆண்டுகள் வயதுக்குக் கீழ்ப்பட்ட ஒரு குழந்தையின் பராமரிப்புக்கும் காவலுக்கும் உரியவராக இருந்தும் அதை மலம் அல்லது சிறுநீர் கழிப்பதிலிருந்து அவ்விதம் தடுக்கத் தவறிய யாதொருவரும் ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக் கூடிய அபராதம் விதிக்கப்படுவார்.

பிரிவு - 34 D (1)

## யாதொரு பொது இடத்தில் அல்லது அதன் அருகில் தீ விழா கொண்டாடுதல், வைக்கோல், கரும்பு எரித்தல் சுடுகளை விடுதல் முதலியவற்றிற்குத் தண்டனை

வேளைக்கு வேளை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்களால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட யாதொரு அதிகாரியால் அனுமதிக்கபடக் கூடிய நேரங்களிலும் அன்றி மற்றபடி யாதொரு

பொதுயிடத்திலோ அல்லது அதன் அருகிலோ யாதாகிலும் வைக்கோல் துரும்புக்கு அல்லது வேறு பொருளுக்குத் தீ வைக்கிற அல்லது எரிக்கிற அல்லது யாதாகிலும் சுடுகளையை ஓடவிடுகிற அல்லது விளையாட்டுத் துப்பாக்கி வெடியை வெடிக்கிற அல்லது யாதாகிலும் வெடிபலூனை உயரத்தில் ஏற்றுகிற அல்லது அவ்விதமான ஒரு செயலைக் தமது கட்டுப்பாட்டிலுள்ள இடங்களில் அனுமதிக்கிற யாதொருவராகிலும் ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக்கூடிய அபராதம் விதிக்கப்படுவார்.

உப பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ளபடியான யாதொரு செயலாகிலும் யாதொரு தனியார் ஏற்கையில் ஏற்பட்டால் அவ்வித ஏற்கையின் உடனடியாக கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள மனிதர், அந்தச் செயலானது தம்முடைய அறிவுக்கு எட்டாமலேயே செய்யப்பட்டது என்று அவர் நிரூபிக்கும்வரை அச்செயலை அவமதித்தவராகக் கருதப்படுவார்.

பிரிவு-34 E (1)

## பொது இடத்தில் குடிபோதை அல்லது காலித்தனமான அல்லது பண்பற்ற நடத்தை ஆகியவற்றிற்குத் தண்டனை

யாதொருவராகிலும் ஒரு பொது இடத்தில் அல்லது பொழுது போக்கிடத்தில் அல்லது ஆளேற்றும் படகில் அல்லது கப்பல் தளத்தில் குடிபோதையில் தன்னைச் சமாளிக்க முடியாத நிலையில் கண்டு பிடிக்கப்பட்டால் அல்லது காலித்தனமான அல்லது ஒழுங்கில்லாத அல்லது பண்பற்ற நடத்தைக்கு பொறுப்பாயிருந்தால் ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய கால அளவு சிறைத் தண்டனை அல்லது ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக்கூடிய அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படுவார்.

யாதொருவராகிலும் ஒரு போலீஸ் ஆபிஸில் அல்லது ஸ்டேஷனில் உக்கிரமான அல்லது ஒழுங்கில்லாத அல்லது பண்பற்ற நடத்தைக்குப் பொறுப்பாயிருந்தால் ஒரு மாதம் வரை நீடிக்கக் கூடிய கால அளவு சிறைத் தண்டனை அல்லது ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக்கூடிய அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படுவார்.

பிரிவு-34 f (1)

## விற்பனைக்காக அல்லது அடகிலோ திருட்டுப் பொருட்கள் தம்மிடம் வந்தால் அதை அடகுத் தரகர்களும் மற்றவர்களும் அறிவித்தல்

போலீசைச் சேர்ந்த யாதொரு அதிகாரியாகிலும் யாதொரு அடகுத் தரகர் பழம்பொருள் வியாபாரி அல்லது உலோக வேலையாளரிடத்தில் திருட்டுப் போனதாக எண்ணப்படும் உடமைகளில் விவரப்பட்டியலொன்றைக் கொடுக்கலாம். அவ்விதம் தரப்பட்ட விவரப்பட்டியலில் கண்டுள்ள விவரங்களுக்கு பதிலளிக்கிற முறையில் தம்மிடம் அடகிலோ விற்பனைக்கோ அல்லது வேறு விதமாகவோ பொருட்கள் வந்தால் அவ்விதமான பொருளைத் தரத்தயாராயிருக்கிற கட்சியின் பெயரையும் விலாசத்தையும் விசாரிப்பதும் அப்பொருளைப் பறிமுதல் செய்து தம்மிடம் வைத்திருப்பதும், அவ்விதம் பொருளைப் பறிமுதல் செய்து தம்மிடம் வைத்திருப்பதையும் தரத்தயாராயிருக்கும் கட்சியினால் கொடுக்கப்பட்ட பெயரையும் விலாசத்தையும் உடனே அருகிலுள்ள போலீஸ் ஸ்டேசனுக்கு அறிவிப்பதும் மேலே சொல்லப்பட்டுள்ளபடியான அடகுத் தரகர், பழம்பொருள் வியாபாரி அல்லது உலோக வேலையாளரின் கடமையாகும்.

மன்னிக்கத் தகுந்த காரணமில்லாமல் உட்பிரிவு (1)-ன் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தவறுகிற யாதொரு அடகுத் தரகர், வியாபாரி அல்லது வேலையாளர் அவ்விதமாக இழைக்கப்படும் ஒவ்வொரு குற்றத்துக்கும் ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக்கூடிய அபராதம் விதிக்கப்படுவார்.

உபபிரிவு (1)-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடியான பொருட்களை விலைக்கு பெறுகிற நிலையிலுள்ள யாதொரு அடகுத் தரகர், வியாபாரி அல்லது வேலையாளர் அப்பொருட்களைத் தரத்தயாராயிருப்பவரைப் போலீசார் ஸ்தலத்துக்கு வரும் வரை நிறுத்தி வைக்கலாம்.

## பிரிவு - 34 g (1)

## களியாட்ட நிகழச்சிகளுக்கு உரிமையாளர் நிர்ணயித்திருக்கும் அனுமதிக் கட்டணம், விற்கும் இடம் தவிர்த்து வேறு வகையில் டிக்கெட்டுகள் விற்பனையை தடுத்தல்

களியாட்ட நிகழ்ச்சிகளுக்கு அதன் உரிமையாளர் நிர்ணயித்திருக்கும் அனுமதிக் கட்டண டிக்கெட் விற்கும் இடம் தவிர்த்து வேறு வகையில் யாதொருவராகிலும் டிக்கெட்டுகளை விற்றாலோ அல்லது விற்க முயற்சித்தாலோ மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய கால அளவு சிறைத் தண்டனை அல்லது நூறு ரூபாய்கள் வரை நீடிக்கக் கூடிய அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

உப பிரிவு (1) ல் கண்டுள்ளபடி நடவடிக்கை எடுக்கும் எந்த ஒரு போலீஸ் அதிகாரியும், மேற் கூறியபடி ஏதாவது குற்றங்கள் நடந்திருக்கின்றன என்று திருப்தியடைந்தால தான் அந்த டிக்கெட்டுகளை கைப்பற்றலாம்.

உப பிரிவு (1)-ல் கண்டுள்ள குற்றத்தை விசாரணை செய்யும் நீதி மன்றமானது, அந்த குற்றத்திற்கான உத்தரவிடும் யாதொரு தண்டனையையோ அல்லது போடவிருக்கும் தண்டனையையோ தவிர்த்து உப பிரிவு (2)-ன் படி கைப்பற்றப்பட்ட டிக்கெட்டுகளை பறிமுதல் செய்யும்படி உத்தரவிடலாம்.

***விளக்கம் :***

**இந்த பிரிவில்,**

**'களியாட்டம்'** என்றால் பொருட்காட்சி நிகழ்ச்சி, மனக்களிப்பு தரும் நிகழ்ச்சி, விளையாட்டு, விளையாட்டு போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகள் இவற்றுக்கு அனுமதிச் சீட்டுகளை காண்பித்து உள்ளே நுழைத்தல்.

**'உரிமையாளர்'** என்றால் களியாட்ட நிகழ்ச்சியை பொறுத்தவரை, அத்தகைய களியாட்ட நிகழ்ச்சியை நிர்வகிக்கும் பொறுப்புள்ளவர்.

## பிரிவு - 35

## a முதல் c வரையிலான புதிய பிரிவுகளில் திணிப்பு

6 அசல் சட்டத்தின் 35-வது பிரிவுக்குப் பின் வருகிற பிரிவுகள் திணிக்கப்படும்.

*அவையாவன:*

35-வது சட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு லைசன்ஸ்சுக்கும் அல்லது உத்தரவுக்கும் போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்கள் வேளைக்கு வேளை ராஜ்ய அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்படக்கூடிய இரண்டு ரூபாய்க்கு மேற்படாத ஒரு கட்டணத்தை விதிக்கலாம்.

பிரிவு - 35 B

**குற்றத்துக்காக வாரண்டு இல்லாமல் போலீஸ் அதிகாரி சிறைபிடித்தல்**

வாரண்டு இல்லாமல் யாதொரு காவல்துறை அதிகாரியாகிலும் யாதொருவரை அவர் தமது கருத்துப்படி பிரிவுகள், 29-A, 34-A, 34-B, 34-C, 34-D, 34-E, 34-F ஆகியவற்றின் கீழ் தண்டனை அளிக்கப்படக்கூடிய குற்றத்தைச் சிறைப்பிடிக்கலாம்.

பிரிவு - 34 C (1)

**லைசென்ஸ் நிபந்தனைகளை மீறுவதற்குத் தண்டனை**

இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் யாதொரு லைசென்ஸ் நிபந்தனைகளில் ஒன்றையாகிலும் மீறுகிற யாதொருவர் தண்டனை ஊர்ஜிதமாவதன் பேரில் நூறு ரூபாய்களுக்கு மேற்படாத அபராதம் விதிக்கப்படுவார். மீறுதலானது அவருடைய கடை அல்லது இடத்துக்குப் பொறுப்பாகிய வேலைக்காரர் அல்லது ஏஜென்டின் கவலையின்மை அல்லது தவற்றினால் ஏற்பட்டிருந்த போதிலுங்கூட அவ்விதமான அபராதம் லைசென்ஸ்தாரரிடமிருந்தே வசூலிக்கப்படும்.

இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு லைசென்ஸில் கண்டுள்ள நிபந்தனைகள் யாதொன்றையாகிலும் மீறிய குற்றம் ஊர்ஜிதமாக்கப்பட்டால் அந்த லைசென்சானது போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்களின் இஷ்டத்துக்கு இணங்க ரத்து செய்யப்படலாம்.

# புதுச்சேரி சூதாட்டச் சட்டம், 1965
# THE PONDICHERRY GAMBLING ACT, 1965

பிரிவு - 1

***இந்தச் சட்டம் புதுவைக்கு மட்டுமே செல்லும்***

1. இந்தச் சட்டம் புதுச்சேரிக்கு சூதாட்டச் சட்டம்.1965 என வழங்கப்படும்
2. இந்தச் சட்டம் புதுச்சேரிக்கு யூனியன் பிரதேசத்திற்கு மட்டும் பொருந்தும்
3. இந்தச் சட்டம் குற்றம் நடக்கும் போது, தடுக்கும் போது மட்டும் செல்லுபடியாகும்.

பிரிவு - 2

***கீழ்க்காணும் சந்தர்ப்பங்கள் மாறுபட்டு வந்தால் ஒழிய இச்சட்டம் பொருந்தும்,-***

1. பொது சூதாடும் வீடு என்பது அந்த வீடு, அறை, கூடாரம் தடுப்பு வாகனம் பாத்திரம், கப்பல் அல்லது மரக்கலம் அல்லது ஏதேனும் ஓர் இடத்தில் சீட்டுக்கட்டு (Card), தாயம், டேபிள் அல்லது விளையாடுவதற்குத் தேவையான சாதங்களை வைத்திருந்தால் அல்லது இவ்விடங்களை லாபத்திற்கு

மனிதன் சொந்தமாக வைத்திருந்தாலும், குடியிருந்தாலும் அல்லது அவ்விடங்களை பொருட்களையும் இலாபம் கருதி வாடகைக்கு விடப்பட்டிருந்தாலும் பொது சூதாடும் இடம் எனக் கருதப்படும்.

2. சூதாட்டம் என்பது லாட்டரி சீட்டைக் கட்டுப்படுத்தாது. ஆனால் பந்தயம் கட்டுவதை சூதாக கணக்கிட வேண்டும்.

***குறிப்பு:*** பந்தயம் என்பது வசூலிப்பதையும் பந்தயம் வரவேற்கப்படுவதையும் அதற்கு ரசீது கொடுப்பதும் அல்லது பரிசு பங்கிடுவது பணமாக இருந்தாலும் வேறு ஏதாகிலும் பந்தயத்தை ஊக்குவிக்கும் வகையில் திட்டமிட்டிருந்தாலும் அது பந்தயம் ஆகும்.

3. சூதாடுவதற்கு உபகரணங்கள் எந்தப் பொருளாயினும் சூதாடுவதற்குப் பயன்படுத்தப்பட்டாலோ அல்லது பயன்படுத்த எண்ணம் கொண்டிருந்தாலும், எந்தவிதமான தஸ்தாவேஜிகள் ரிக்கார்டாகவோ அல்லது ரிஜிஸ்தராகவோ பயன்படுத்த எண்ணம் கொண்டிருந்தாலும் பணத்தையோ மற்ற பொருளையோ பரிசாகப் பங்கு பிரிக்கப்படுவதற்கு அல்லது பங்கு பிரிக்கப்படுவதற்கு ஆதாரமாக விளங்குபவை சூதாடும் உபகரணங்கள் என்பதாகும்.

## பிரிவு - 3

(அ) 1. சொந்தக்காரர் யாராக இருந்தாலும், அதை வைத்திருப்பவர் யாராக இருந்தாலும் வீடு, அறை, கூடாரம் தடுப்பு வாகனம், கப்பல் அல்லது எந்த இடமாக இருந்தாலும் அல்லது சூதாடுவதற்கு வைத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும்:

2. குதிரை பந்தையத்திற்காகவும், மார்க்கட் விலை அல்லது மற்ற பொருட்களின் விலை அல்லது விலைகளை கூறுவதற்காகப் பயன்படுத்தப்படும் எண்கள்.

3. எந்தப் பொருளின் மார்க்கட் விலை வேறுபாட்டையோ அல்லது அதன் தொகையையோ குறிப்பதற்காக பயன்படுத்தப்படும் எண்கள்.

4. சேமிப்பு அல்லது பங்கு ஆகியவற்றின் மேல் நிர்ணயிக்கப்படும் மார்க்கட் விலை அல்லது அதற்கு பயன்படுத்தப்படும் எண்கள்.

5. பொது இடங்களில் பயன்படுத்தப்படும் வாகனங்களின் பதிவு எண்ணையோ அல்லது பதிவு எண்ணின் எண்ணிக்கையோ:

6. பந்தயத்தை அல்லது வெகுமதி பங்கீடாக இருந்தாலும் அல்லது திட்டமாக இருந்தாலும் அதற்காக ரசீதையோ அல்லது வெகுமதி பங்கீடாக இருந்தாலும் அது பணமாகவோ அல்லது மற்றவையாக இருந்தாலும் மேற்கூறப்பட்ட காரியங்களுக்காக மேற்கூறப்பட்ட இடங்களைத் தெரிந்து வைத்திருந்தாலும் வேண்டுமென்றே மற்றவர்கள் மேற்படி சூதாட்டத்திற்காக பயன்படுத்த அனுமதித்தாலோ மேற்படி இடங்களை மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக நிர்வாகத்தாலும் அல்லது அந்தத் தொழிலை நடத்தத் துணையாக இருந்தாலும் அல்லது அங்கு அடிக்கடி வரும் மனிதருக்கு முன்தொகை செலுத்தினாலும் அல்லது பண உதவி செய்தாலும் அல்லது முதல் முறையாக இருந்தாலும் மேற்கூறிய குற்றத்திற்கு ஓராண்டு வரை சிறைத் தண்டனையும் அல்லது 100 ரூபாய் அபராதமும் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படலாம்.

இரண்டாவது முறையும் அதற்கு அடுத்தடுத்தும் செய்யப்படும் குற்றங்களுக்கு 2 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். சிறப்பான காரணங்கள் பதிவு செய்வதற்கு இயலாத போது முதல் முறையாக குற்றம் செய்தவருக்கு இயலாத போது முதல் முறையாக குற்றம் செய்தவருக்கு 1 மாதத்திற்குக் குறையாமல் சிறைத் தண்டனையும் அல்லது 500 ரூபாய் அபராதமும்

அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கலாம். 2-வது அடுத்தடுத்து குற்றம் செய்தவருக்கு 2 மாதங்களுக்குக் குறையாத சிறைத்தண்டனையும் 1,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்படலாம்.

ஆ 1. மேற்கூறப்பட்ட உட்பிரிவுகளில் கூறப்பட்ட காரணங்களுக்காக சூதாடுவதற்காக இருந்தாலும் அல்லது அவ்விடத்தில் இருக்கும் யாராய் இருந்தாலும் இக்குற்றம் புரிந்தவராக கருதப்படுவார். முதல் குற்றவாளியாக இருந்தால் 1 மாத சிறைத் தண்டனையும் ரூபாய் 50 அபராதமும் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும். இரண்டாவது முறை குற்றவாளியாக இருந்தால் 2 மாத சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.

மேற்கூறப்பட்ட இடங்களில் சூதாடிக்கொண்டிருக்கும் போது எந்த மனிதராக இருந்தாலும் அங்கு காணப்படுவாரேயானால் அவர் சூதாடுவதற்காக வரவில்லை என்று அவர் நிரூபிக்கும் வரையில் சூதாட வந்தவராகவே கருதப்படுவார்.

2. பொது மக்கள் கூடும் இடத்திலோ, பொது வழியிலோ அல்லது மக்கள் கண்ணில் புலப்படும் வகையில் செய்யப்பட்டால் அவர்களுக்கு 3 மாத சிறைத் தண்டனை அல்லது 300 ரூபாய் அபராதமும் அல்லது இரண்டும் சேர்த்து அபராதமாக விதிக்கப்படும்.

## பிரிவு - 4

## சூதாடும் இடத்தில் நுழைய வாரண்ட் அளிக்கும் அதிகாரம்

சூதாடும் இடத்தில் நுழைய வாரண்ட் அதிகாரம் எந்த (குற்றவியல் நடுவர்) அல்லது இரண்டாவது வகுப்பு நீதிதுறை நடுவர் அதற்குக் குறையாத எந்த போலீஸ் அதிகாரியாக இருந்தாலும் வட்டார ஆய்வாளர் தகுதிக்குக் குறையாதவர் எவரும் வாரண்ட் அளிக்கும் அதிகாரம் உள்ளவர்கள் ஆவார்கள். சூதாடும் இடத்தைச் சோதனை செய்வதற்காகவும் பொருட்களைப் பறிமுதல் செய்வதற்காகவும் குறைந்த பட்சம் (உதவி ஆய்வாளர்) வாரண்ட்டுடன் செல்ல வேண்டும்

வாரண்ட் அளிக்க அதிகாரம் படைத்த போலீஸ் அதிகாரி வாரண்ட் அளிப்பதற்குப் பதிலாக பிரிவு 4-ல் கூறப்பட்ட காரியங்களைச் செய்யலாம்.

***குறிப்பு:*** கார்டு அல்லது தாயம் மற்றவைகள் காணப்படுமானால் அவைகளையே ஆதாரமாக கொண்டு சூதாடும் இடம் என முடிவு செய்யலாம்.

## பிரிவு - 5

பிரிவு 4-ல் கூறப்பட்ட சோதனையில் சூதாடும் உபகரணங்கள் காணப்படுமானால் அல்லது சூதாடும் மனிதர்கள் இருந்தாலும் அவர்கள் போலீஸ் அதிகாரி சோதனையிடும் போது சூதாடாமல் இருந்தாலும் எந்த இடம் சூதாடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்று முடிவு செய்யலாம்.

## பிரிவு - 6

பந்தயம் கட்டி சூதாடுவதற்கென ஆதாரங்களைத் தேட வேண்டியது சூதாடும் இடத்தை வைத்திருப்பவரையோ அல்லது இடத்தை நிர்வகிப்பவரையோ கைது செய்வதற்காக சூதாடுபவர்களைப் பணத்துக்காகவோ பந்தயத்திற்காகவோ விளையாடுகிறார்கள் என்பதை நிரூபிக்க முயற்சி செய்ய தேவையில்லை.

## பிரிவு - 7

சூதாடும் இடங்களை வைத்திருந்தாலும் அல்லது நடத்தினாலும் அல்லது அத்தொழிலைப் புரிவதற்கு துணை புரிந்தாலும் சூதாடுவதற்கு முன்தொகை அளித்தாலும் அல்லது பணம் செலுத்தினாலும் யாராக இருந்தாலும் அவர்களுக்கு 500 ரூபாய் வரை அபராதமும் 3 மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது இரண்டும் சேர்த்து அபராதமாக விதிக்கப்படும்.

## பிரிவு - 8

### சூதாடும் இடத்தில் சூதாடுபவர்களைப் பார்த்தால் தண்டனை

சூதாடும் இடத்தில் சூதாடிக்கொண்டு இருந்தாலும் அல்லது சூதாடும் இடத்தில் அமர்ந்து இருந்தாலும் அவர்களுக்கு 20 ரூபாய் வரை அபராதமும் 1 மாத சிறைத் தண்டனையும் அளிக்கப்படலாம்.

சூதாடி கொண்டிருக்கும் போது யாரேனும் அங்கு அமர்ந்து இருந்தாலும் அவர் அக்காரணத்திற்காக அங்கு அமரவில்லை என்று நிரூபிக்கும் வரையில் அவரும் சூதாடுவதற்காக உள்ளவர் என்று கொள்ள வேண்டும்.

## பிரிவு - 9

### சூதாடும் உபகரணங்களைக் கைப்பற்றுதல் அவற்றை அழிக்க உத்தரவிடுதல்.

சூதாடும் இடத்தை வைத்திருப்பதற்காக அதன் உரிமையாளரைக் கைது செய்தாலும் அல்லது சூதாடும் இடத்தில் சூதாடுவதற்காக அங்கு அமர்ந்திருப்பவரைக் கைது செய்தாலும் குற்றவியல் நடுவர் உத்தரவின் பேரில் அந்த உபகரணங்களை அழிக்கலாம் அல்லது அப்பொருளை குற்றவியல் நடுவர் உத்தரவின் பேரில் கைப்பற்றி பறிமுதல் செய்யலாம்.

## பிரிவு - 10

உடற்பயிற்சிக்காகவோ அல்லது திறமை வளர்ப்பதற்காகவோ ஆடப்படும் ஆட்டங்களைத் திறமை வளர்க்கும் விளையாட்டுக்கள் என்று கூறுகின்றோம். மேற் கூறப்பட்ட பிரிவு-4 லிருந்து 9-வரை உள்ளவைகளை இதனுடன் ஒப்புதல் கூடாது.

## பிரிவு - 11

அ. பிரிவு 1 அல்லது 3, 7 அல்லது 8 ஆகியவற்றின் கீழ் வசூலிக்கப்பட்ட அபராத தொகையிலும் அல்லது பிரிவு 4-ன் கீழ் கைப்பற்றப்பட்ட பொருள்களாயினும் அவற்றில் பாதிக்கு மேற்படாமல் (Magistrate) உத்தரவின் பேரில் குற்றவாளிகளைத் தெரிவிப்பவர்களும் போலீஸ் அதிகாரிகளுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் வழங்கப்படலாம்.

ஆ. (1) பிரிவு 11 (அ)-வில் கொடுக்கப்படும் பொருள் பங்கீட்டினை எந்தக் கோர்ட்டும் பார்த்துக் கொடுக்கலாம்.

(2) குற்றவியல் நடுவரினால் அளிக்கப்படும் தொகை காவல் துறை தலைமை அதிகாரிக்கு அனுப்பப்படும். அவர் செய்தி கொடுத்தவருக்கும் போலீஸ் அதிகாரிகளையும் தேர்ந்தெடுத்து அவருக்கு உகந்தபடி பிரித்துக்கொடுப்பார்.

(3) மேற்கூறப்பட்ட தொகையை 11 (1)-ல் குற்றவியல் நடுவரினால் அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாதம் முடிவதற்குள்ளாக காவல் துறை தலைமை அதிகாரிக்கு அனுப்பக் கூடாது.

பிரிவு- 12

## பொது இடங்களில் மற்றும் தெருக்களில் சூதாடுவதற்குரிய தண்டனை

பொதுத் தெருவிலோ அல்லது பொது இடங்களிலோ அல்லது பொது வழிகளிலோ பணம், கார்டு, தாயம் குறியை பயன்படுத்திச் சூதாடினாலும் சேவல் சண்டை நடத்தினாலும் அதற்கு 500- ரூபாய் வரை அபராதமும் அல்லது 1 மாதம் வரை சிறைத் தண்டனையும் கொடுக்கலாம். சூதாட்டத்திற்கு உள்ள உபகரணங்களையும், பணத்தையும் பறிமுதல் செய்யலாம்.

பிரிவு - 13

## சூதாடுவதற்கு தெருவில் கூடுதல்.

யாராக இருந்தாலும் சூதாடுவதற்காக மற்றவர்களுடன் தெருவில் கூடினாலும்.

சூதாடுவதற்காக அதுபோன்ற கூட்டங்கள் சேர்ந்தாலும் அதற்கு ரூ.50 வரை அபராதமும் விதிக்கலாம்

பிரிவு - 14

எந்த மனிதனும் சூதாட்டத்திற்கு ஊக்குவிக்கும் வகையில் செய்தியை அச்சடிப்பதோ விநியோகப்படுத்துவதோ, விற்பனை செய்வதோ அல்லது எந்த முறையிலேனும் துண்டு பிரசுரம் செய்வதும் அவை சூதாடுவதற்குரிய செயல்களைத் தரும் வகையில் செய்தல் கூடாது.

பிரிவு 14 (1)-ல் கூறப்பட்டதை மீறும் எந்த மனிதரையும் ஒரு மாத சிறைத் தண்டனையும் அல்லது ரூ.200 அபராதமும் அல்லது இரண்டையும் சேர்த்து தண்டனையாக கொடுக்கலாம்.

பிரிவு 14 (1)-ன் கீழ் சந்தேகிக்கப்படும் பொருளை உதவி ஆய்வாளர் தகுதிக்குகீழ் இல்லாத போலீஸ் அதிகாரி சந்தேகப்பட்டால் அந்த இடங்களை சோதனையிடவும், கைப்பற்றவும் செய்யலாம். வாரண்ட் இல்லாமலேயே அந்தக் குற்றத்திற்காக கைது செய்யலாம்.

பிரிவு - 15

1. புதுவை யூனியன் பிரதேசத்திலாவது அல்லது அதன் பிற பகுதியிலாவது இந்தச் சட்டத்திற்கு ஒப்பான சட்டங்கள் இருக்குமானால் அமுலுக்கு வந்தவுடன் ரத்து செய்யப்பட்டதாகும்.

2. உட்பிரிவு 1-ல் உள்ளவை கீழ்க்கண்டவைகளைப் பாதிக்காது

(அ) முன்பாக நடைமுறையில் உள்ள சட்டம் ரத்து செய்யப்பட்டவை அல்லது இந்த சட்டத்தின்கீழ் பாதிக்கப்படுபவை.

(ஆ) எந்த உரிமையும் தனிப்பட்ட செல்வாக்கும், கடமையும், கடனும் செலவும் எந்தச் சட்டத்திலாவது ரத்து செய்யப்பட்டிருந்தால் .

(இ) ஏதேனும் தண்டனை பறிமுதல் அல்லது அபராதமும் சேர்த்து இருந்தாலும் ரத்து செய்யப்பட்ட சட்டத்தினால் குற்றத்திற்குத் தண்டனையாக விதிக்கப்பட்டிருந்தாலும்.

(ஈ) எந்தக் கண்டுபிடிப்பும், சட்ட நடவடிக்கையும் அல்லது அதற்கு பரிகாரமும் நடைமுறையில் இருந்தாலும் அல்லது தண்டனை அளிக்கப்பட்டிருந்தாலும் அவை இந்தச் சட்டம் அமுலில் இல்லாதது போல் கருதப்பட வேண்டும். இச்சட்டம் ரத்து செய்யப்பட்டாலொழிய ஏதாவது ஒரு நடவடிக்கை ஒரு சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டிருந்தால் அவை மூன்றும் நடைமுறையில் இருப்பதாகக் கொள்ள வேண்டும்.

# வரதட்சணை தடை செய்யும் சட்டம். 1961
# THE DOWRY PROHIBITON ACT, 1961

இந்தச் சட்டம் 1968-ஆம் ஆண்டு முதல் அமுலில் உள்ளது. இந்தச் சட்டம் ஜம்மு மற்றும் காஷ்மீர் நீங்கலாக இந்தியாவின் அனைத்து பாகங்களிலும் அமுலில் உள்ளது.

## பிரிவு - 2
## Definition

வரதட்சனை என்றால் கல்யாண சம்பந்தமாக ஒரு மணமகள் வீட்டிற்கும், மணமகன் வீட்டிற்கும் இடையே மற்றொரு பார்ட்டிக்கு பொருளோ அல்லது மதிப்புள்ள சொத்தோ, மறைமுகமாகவோ, நேரிடையாகவோ கொடுப்பதோ அல்லது கொடுப்பதாக ஒத்துக் கொள்வதோ ஆகும்.

ஒரு மணமகன், மணமகள் பெற்றோர்கள் கல்யாண விசயமாக ஒருவர் மற்றொருவருக்கு பொருளோ, சொத்தோ கொடுப்பதாக ஒத்துக் கொள்வதோ இதில் அடங்கும்.

'மகர்' என்ற சீதனம் முஸ்லீம் மதப்படி வரதட்சணை ஆகாது.

கல்யாணத்திற்காக சில பெற்றோர்கள் அவர்களின் பண்டைய வழக்கப்படி மனமுவந்து மணமக்களுக்கு கொடுக்கின்ற பொருட்கள் வரதட்சணை என்ற பொருளில் வராது.

## பிரிவு - 3
## Penalty for giving and taking dowry

இந்தச் சட்டம் அமுலானதற்குப் பிறகு எந்த நபரேனும் வரதட்சணை வாங்கினாலோ, கொடுத்தாலோ, கொடுக்க தூண்டினாலோ அவர்களுக்கு 6 மாத தண்டனை அல்லது 5,000 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

## பிரிவு - 4
## Penalty for demanding dowry

இந்த 4-ஆவது பிரிவின்படி எந்த நபரேனும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ, மணமக்களின் பெற்றோரிடமிருந்து வரதட்சணை வேண்டுமென்று கேட்பவர்களுக்கு இந்தச் சட்டப்படி 6 மாதம் வரை சிறைத் தண்டனையும் ரூபாய் 5,000 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

## பிரிவு - 7

*இந்தக் குற்றங்கள் பிடிக்கக்கூடிய குற்றங்கள்*

(அ) இந்த வழக்குகளைப் பெருநகர் (நடுவர்) அதாவது முதல் வகுப்பு நீதிபதியைத் தவிர மற்ற (நீதிபதிகள்) விசாரிக்கக் கூடாது.

(ஆ) இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும்போது குற்றம் நடந்த ஒரு வருடத்திற்குள் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கவனிக்கப்பட வேண்டும். இந்த வழக்குகளை உதவி கண்காணிப்பாளர் தகுதிக்குக் குறைவானவர்கள் விசாரிக்கக் கூடாது.

# காவல் துறை (அதிருப்தி தூண்டும்) சட்டம், 1922
# THE POLICE (INCITEMENT TO DISAFFECTION) ACT, 1922

பிரிவு - 1

## Short title, extent and commencement

1. இச்சட்டம் 1922-ஆம் ஆண்டு காவல் துறை அதிருப்தியை தூண்டும் சட்டம் என அழைக்கப்படும்.

2. இச்சட்டம் இந்தியா முழுவதும் 1956-ஆம் ஆண்டு நவம்பர் 1-ஆம் தேதி முதல் அமுலில் உள்ளது.

3. இச்சட்டம் அந்தந்த மாநில அரசின் அரசிதழில் (Official Gazette) பிரசுரிமை செய்ததிலிருந்து அமுலில் உள்ளது,

பிரிவு - 2

## வரையரை
## Definition

காவல் துறை உறுப்பினர் என்பது அவருக்கு அளிக்க வேண்டிய அனைத்து பயிற்சிக,ளும் அளிக்கப்பட்டு நிறைவு பெற்றவராக தோன்றும் போதுதான் அவர் காவல் துறை அங்கத்தினராக கருதப்படுவார்.

பிரிவு - 3

## அதிருப்தி தூண்டுவோருக்கு தண்டனை
## Penalty for causing disaffection

எவரேனும் ஒருவர் வேண்டுமென்ற எண்ணத்துடன் காவல் துறையின் ஒழுக்கத்திற்கு பங்கம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல் பட்டாலோ அல்லது அதற்கு காரணமாக இருந்தாலோ அல்லது எத்தனித்தாலோ அவர்கள் 6 மாதத்திற்குக் குறையாத சிறைத் தண்டனையோ அல்லது ரூபாய் 200-க்குக் குறையாத அபராதமோ அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு - 4

## Savings of Acts done by police associations and persons for certain purpose

இப்பிரிவின்படி நல்ல எண்ணத்துடன் செய்யும் எந்தச் செயலையும் குற்றமென கருதக் கூடாது.

1. சட்ட பூர்வமாக ஒரு காவல் துறையினருக்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வு, நல்வாழ்வு, ஊதிய உயர்வு.

2. அரசு அங்கீகாரத்துடனோ அல்லது அதிகாரமுள்ளவர்களிடமிருந்தோ ஒப்புதல் பெற்று காவல் துறை, சங்கம் வைத்துக்கொள்ளலாம்.

பிரிவு - 5

## Sanction to trial offences by subordinate courts

இச்சட்டப்படி எந்த நீதிமன்றமும் சம்பந்தப்பட்ட மாவட்ட நடுவரிடமோ அல்லது காவல் துறை ஆணையரிடமோ அனுமதி பெறாமல் இச்சட்டத்தின் வழக்குகளை விசாரிக்கக் கூடாது.

பிரிவு - 6

## Trial of cases

இவ்வழக்கை மேல்நிலை நடுவர் அல்லது முதுநிலை நடுவருக்குக் கீழ்ப்பட்டவர் விசாரிக்கக் கூடாது.

# காவல்துறைச் (உரிமை தடுப்பு) சட்டம், 1966

# THE POLICE FORCES (RESTRICTION OF RIGHTS) ACT, 1966

பிரிவு - 1

1. இச்சட்டம் 1966-ஆம் ஆண்டு காவல்துறை உரிமை தடுப்புச் சட்டம் என்று அழைக்கப்படுகிறது.
2. இச்சட்டம் இந்தியா முழுவதும் அமுலில் இருக்கும்.,
3. இச்சட்டம் மாநிலத்தில் அரசுரிமை பிரசுரம் செய்ததிலிருந்து அமுலில் உள்ளது.

பிரிவு - 2

**வரையரை**

## Definition

1. காவல் துறை அங்கத்தினர் என்பது காவல் துறை அதிகாரியால் சட்டபூர்வமான உத்தரவின் பெயரால் நியமிக்கப்பட்ட அனைவரும் ஆவர்.

2. காவல் துறை என்பது பொது கட்டளையை நிறைவேற்ற பொறுப்பேற்ற துறையாகும்.

பிரிவு - 3

## Restriction for respecting right to form association freedom of speech

எந்த ஒரு காவல் அங்கத்தினரும் மத்திய அரசிடமோ அல்லது தங்களுக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரம் உள்ளவரிடமோ சிறப்பு அனுமதி பெறாமல்,-

1. எந்த ஒரு காவல் துறை அங்கத்தினரும், அரசியல் சங்கங்களிலோ, தொழிலாளர் சங்கங்களிலோ. சமூக சங்கங்களிலோ உறுப்பினராவதோ.

2. எந்தக் காவல் துறை நபரும் எந்தக் கூட்டமைப்பிலும் நிறுவனங்களிலும் அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களிலும், மனமகிழ் மன்றங்களிலும் ஜாதி அமைப்புகளிலும்.

3. விளம்பரப்படுத்துவதிலும், அச்சிடுவதிலும், கலைத்துறையிலும் அறிவியல் துறையிலும் உறுப்பினராகவோ அல்லது ஈடுபாடு உடையவராகவோ உதவி புரிபவராகவோ இருக்கக்கூடாது.

பிரிவு - 4

**தண்டனை**

## Penalty

இச்சட்டப் பிரிவு 3-ல் சம்பந்தப்பட்டவருக்கு இதர நடவடிக்கையில்லாமல் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனையும், ரூ.2,000-க்கு மேற்படாத அபராதமும் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

# தொல்பொருள் ஆராய்ச்சி மற்றும் கலைப்பொக்கிஷச் சட்டம், 1972

# THE ANTIQUITIES AND ART TREASURES ACTS AND RULES, 1972 (52 of 1972)

இச்சட்டமானது பாராளுமன்றத்தில் 9-ஆம் நாள் செப்டம்பர் 1972-ல் இயற்றப்பட்டது.

பிரிவு - 1

இச்சட்டம் பண்டைய பொருட்கள் மற்றும் கலைப்பொக்கிஷச் சட்டம் 1972 என்று அழைக்கப்படுகிறது. இது இந்தியாவில் உள்ள எல்லா இடங்களுக்கும் செல்லுபடியாகும்.

பிரிவு - 2

**விளக்கம்**

## Definitions

(அ) பழங்காலப் பொருட்கள் என்பது, -

1. காசுகள், சிற்பங்கள், வரைபடங்கள் மற்றும் கல்வெட்டுகள் இதர கலைப்பொருட்களோ
2. எந்த வகைப்பட்ட பொருட்கள் ஒரு கட்டடம் மற்றும் குகைகளிலிருந்து நீக்கப்பட்டவைகளோ
3. எந்த ஒரு பழங்காலப் பொருள் அறிவியல், கலை, கைவேலை, இலக்கியம், மதம், பழக்க வழக்கங்கள் நீதிகள் ஆகியவற்றை பிரதிபலிக்கக் கூடியவைகளோ
4. வரலாற்றுச் சம்பந்தப்பட்ட பொருளோ
5. எந்த ஒரு பொருளோ மத்திய அரசால் அரசாங்க அறிக்கை வெளியீட்டில் பழங்காலப் பொருட்கள் என்று அறிவிக்கப்பட்டவைகள் ஆகும்.

(ஆ) கலைப் பொக்கிஷம் என்பது மத்திய அரசால் கலைப் பொக்கிஷங்கள் என்ற அரசாங்க அறிக்கை வெளியீட்டில் இன்னவை என்று வெளியிட்ட மனிதனால் செய்யப்பட்ட பழங்கால பொருட்கள் அல்லாத கலைநயம் நாகரீக நயம் பொருந்திய கலைச் சின்னங்களே கலைப் பொக்கிஷம் ஆகும்.

பிரிவு - 3

## பழங்கால மற்றும் கலைப் பொக்கிஷப் பொருட்களின் ஏற்றுமதி செய்வதற்கான நெறிமுறைகள்

இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தபின் மத்திய அரசாங்கம் மட்டுமே பழங்கால மற்றும் கலைப் பொக்கிஷங்களை ஏற்றுமதி செய்யும் உரிமை பெற்றுள்ளது. மேலும் அரசாங்கத்திற்காக செயல்படும் ஸ்தாபனங்களோ, நிறுவனங்களோ இச்செயலில் ஈடுபடலாம்.

மேற்கூறப்பட்ட நிறுவனமோ, ஸ்தாபனமோ ஏற்றுமதி செய்பவை அரசாங்கத்தால் குறிப்பிட்ட சட்ட திட்டங்களுக்கு கட்டுபட்டவைகளாகும்.

பிரிவு - 5

## பழங்கால பொருட்கள் உரிமம் பெற்றவர்களே விற்கலாம்

இச்சட்டத்தின் மூலம் எந்த ஒரு நபரோ அல்லது எந்த ஒரு நபருக்காக வேறொருவரோ பழங்காலப் பொருட்கள் வியாபாரத்தில் ஈடுபடுவதோ அல்லது பரிசளிப்பதோ பிரிவு 8-ன் படி அரசின் அங்கீகாரம் பெறாமல், சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படாமல் செய்வது குற்றமாகும்.

பிரிவு -13

## மத்திய அரசின் அதிகாரங்கள்

இச்சட்டத்தின் மூலம் மத்திய அரசானது பழங்காலப் பொருட்கள் மற்றும் கலைச் சின்னங்களை விற்பதற்கோ, வாங்குவதற்கோ உரிமை வழங்கும். நீக்கும் அதிகாரம் மற்றும் குற்றம் புரிபவர்களைத் தண்டிக்கும் உரிமைகளைப் பெற்றுள்ளது. மேலும் இச்சட்டம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை முறைப்படுத்துகிறது.

பிரிவு - 19

## பழங்கால பொருட்கள் மற்றும் கலைப் பொக்கிஷங்களைப் பெறுவதற்கான மத்திய அரசின் அதிகாரங்கள்

1. மத்திய அரசுக்கு முக்கியம் என்று எந்தப் பழங்கால மற்றும் கலைப்பொக்கிஷங்களையும் மத்திய அரசின் ஆணையின் பேரில் அதைக்கட்டாயமாகப் பொது இடத்திலிருந்து கைப்பற்றலாம்.

துணை விதி (1)-ன் படி மத்திய அரசு கைப்பற்ற வேண்டிய எந்த பழங்கால மற்றும் கலைப் பொக்கிஷங்களுக்கும் அதற்கென்று சட்ட பூர்வமாக நியமிக்கப்பட்டவர்கள் அரசாங்கத்தின் எண்ணத்தை அந்தப் பொருட்களின் உடைமையாளருக்குத் தெரியப்படுத்த வேண்டும். பின்னரே எந்தவித தடையும் இல்லையெனில் அதனைக் கைப்பற்றலாம்.

2. இந்த விதியின்படி பழங்கால மற்றும் கலைப் பொக்கிஷங்களைக் கைப்பற்றுவது ஒரு சில மிக முக்கிய மத சம்பந்தப்பட்டவைகளுக்கு மத்திய அரசு விலக்கு அளிக்கிறது.

***விளக்கம் :***

பொது இடம் என்பது, எந்த ஒரு இடம் மக்களுக்காகப் பொது இடம் என்று பணம் வசூலித்தோ அல்லது வசூலிக்காமலோ அனுமதிக்கும் இடமோ அல்லது ஒரு இடம் பொது மக்களால் உபயோகப்படுத்துவதோ அல்லது உபயோகப்படுத்தாமல் இருப்பதோ ஆகும்.

பிரிவு - 24

### பழங்காலப் பொருட்கள் என்று நிர்ணயிப்பதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள்

எந்த ஒரு பொருள், கையெழுத்துப்பிரதி, ஆவணங்கள், குறிப்புகள் பழங்கால மற்றும் கலைப் பொக்கிஷப் பொருள் என்ற கேள்வி எழுகின்றதோ அப்பொருளை நிர்ணயிக்கும் பொறுப்பு (Director General Archaological Survey of India) புதைப்பொருள் ஆராய்ச்சி தலைமை இயக்குநரிடமோ அல்லது எந்த புதைப்பொருள் ஆராய்ச்சி இயக்குநரின் பதவிக்கு குறையாமல் அதிகாரம் உள்ளவரோ அல்லது புதைப்பொருள் ஆராய்ச்சி தலைமை இயக்குநரால் அதிகாரத்தினால் நியமிக்கப்படுபவரோ ஏற்பார்.

பிரிவு - 25

**தண்டனைகள்**

எந்த ஒரு நபரோ அல்லது நபருக்காக செய்யும் மற்றொருவரோ பழங்கால மற்றும் கலைப் பொக்கிஷங்களை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்ய எத்தனித்தாலோ அல்லது பிரிவு 3-ஐ மீறினாலோ எந்தவித முன்னெச்சரிக்கையுமின்றி அப்பொருட்களைப் பறிமுதல் செய்யவோ அல்லது சுங்கவரிச் சட்டம் 1962-ன் படி (52 of 1962) மூலம் தண்டனை அளிக்கவோ இச்சட்டம் வழிவகை செய்கிறது. தண்டனையானது 6 மாதத்திற்குக் குறையாமலும் 3 வருடத்திற்கு அதிகமாகாமலும் அபராதத்துடனும் விதிக்கலாம்.

பிரிவு - 3

எந்த ஒரு நபர் பிரிவு 5 அல்லது பிரிவு 12 அல்லது 13-ல் உட்பிரிவு (2) அல்லது (3) அல்லது பிரிவு 14 அல்லது பிரிவு 17-ஐ மீறினால் அவர் 6 மாதம் வரை நீடிக்கக்கூடிய சிறைக்காவல் அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ மற்றும் அந்தப் பழங்கால மற்றும் கலை பொக்கிஷப் பொருட்கள் சட்டத்தின்படி பறிமுதல் செய்யப்பட வேண்டியதாகும்.

எந்த ஒரு நபர் இதற்கென்று அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரி அவர் பதிவுகள், புகைப்படங்கள், பதிவேடுகள் ஆகியவைகளை பிரிவு 10-ன் படி பாதுகாக்கப்பட வேண்டியவைகளைச் சோதனை செய்ய பிரிவு 23-ல் உப்பிரிவு (1)-ன் படி எத்தனிக்கையில் அல்லது தேடுவதற்கு முயலும்போது தடுப்பாராயின் இச்சட்டத்தின்படி 6 மாதம் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

# குழந்தைத் திருமணம் தடுப்புச் சட்டம்
# THE CHILD MARRIAGE RESTRICTION ACT

பிரிவு - 2

***விளக்கம்:***

(அ) குழந்தை வயது என்பது அல்லது ஒரு குழந்தைப் பருவம் என்பது 21 வயது முடிவு பெறாத ஆண்களையும், 18 வயது முடிவு பெறாத பெண்களையும் குறிப்பது.

(ஆ) குழந்தை திருமணம் என்பது குழந்தைப் பருவத்திலேயே இரு குடும்பத்தினருக்கும் அல்லது ஆண் வீட்டில் உள்ளவர்களுக்கும் பெண் வீட்டில் உள்ளவருக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தமேயாகும்.

(இ) ஒப்பந்த அமைப்புகள் என்பது ஒரு திருமணத்தை அதாவது அவர்களின் திருமணத்தை முறைப்படி சடங்குகளுடன் செய்து வைக்க முடிவு எடுக்கும் ஒரு குழுவாகும்.

(ஈ) மைனர் பருவம் அடையாமை என்பது யார் ஒருவராக இருந்தாலும் அவர் எந்த பால் இனத்தைச் சேர்ந்தவராயினும் அவர் ஆணோ அல்லது பெண்ணோ யாராக இருப்பின் 18 வயதிற்கு கீழ் உள்ளவரை நாம் பருவம் அடையாமை என்று கூறுகின்றோம்.

பிரிவு - 3

**21 வயது ஆகாமல் குழந்தைப் பருவத்திலேயே திருமணம் செய்யும் ஆடவரைத் தண்டித்தல்**

## Punishment for male adult below twenty-one years of marriaging a child

எந்த ஒரு நபராக இருந்தாலும், 18 வயதிற்கு மேலும் 21 வயதிற்கு உட்பட்டிருந்தும், திருமணமாகியிருப்பின் அவர் சட்டப்படி கண்டிப்பாக தண்டிக்கப்படுவார். அவ்வாறு அவரைத் தண்டிப்பது 15 நாட்களுக்கு சிறைத்தண்டனையும் அல்லது ரூ.1,000 அபராதமோ அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

பிரிவு - 4

21 வயதிற்கு மேற்பட்ட ஒரு ஆண் ஒரு பருவம் அடையாத அல்லது ஒரு குழந்தை பருவம் உடைய பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் தண்டித்தல்.

யாராக இருந்தாலும் அதாவது 21 வயது முடிந்த ஒரு ஆண் ஒரு குழந்தைப் பருவமுடைய பெண்ணைத் திருமணம் கொண்டால் அது சட்டப்படி குற்றமாக கருதப்படும். அவ்வாறு ஒருவர் செய்வாரேயானால் அவருக்கு மூன்று மாத சிறைத் தண்டனையும் மற்றும் அபராதமும் கண்டிப்பாக விதிக்கப்படும்.

பிரிவு - 5

**சமய சடங்குகள் முறைப்படி குழந்தைப் பருவத்தில் திருமணம் செய்வதைத் தண்டித்தல்**

யார் ஒருவராக இருந்தாலும் மறைமுகமில்லாமல் நேரடியாக குழந்தைப் பருவ திருமணத்தை நிறைவேற்றுகின்றவர்கள் கண்டிப்பாக தண்டிக்கப்படுவார்கள். அவ்வாறு நிறைவேற்றுபவர்களுக்கு மூன்று மாத சிறைத் தண்டனையும் மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

யார் ஒருவராக இருந்தாலும் தாங்கள் செய்த திருமணம், குழந்தைத் திருமணம் இல்லை என்று நிரூபித்தால் அதற்கு சரியான விளக்கங்களையும், காரணங்களையும் கூறினால் அது சட்டப்படி குற்றமாகாது, தண்டிக்கப்பட மாட்டார்.

பிரிவு - 6

குழந்தைப் பருவத்தில் திருமணம் செய்ய முடிவெடுக்கும் பெற்றோரையோ அல்லது பாதுகாப்பாளரையோ தண்டித்தல்:-

(அ) குழந்தைப் பருவத்தில் திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளும் எந்தப் பெற்றோராக இருந்தாலும் அல்லது பாதுகாவலராக அல்லது பாதுகாப்பாளராக இருந்தாலும் நாங்கள் சமய சடங்கு முறைப்படி செய்து கொண்டோம் அல்லது எங்களின் அறியாமையின் காரணமாக செய்து கொண்டோம் என்று சொன்னாலும் அது சட்டப்படி குற்றமாக ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறு செய்த ஒருவருக்கு 3 மாத சிறைத்தண்டனையும் மற்றும் அபராதமும் விதிக்கப்படும். ஆனால்

அந்தப் பாதுகாப்பாளர் ஒரு பெண்ணாக இருப்பின் அவர் தரும் நிபந்தனையின் முடிவில் அவருக்கு அந்த தண்டனையிலிருந்தும், அபராதத்திலிருந்தும் விலக்கு அளிக்கப்படும்.

(ஆ) ஆனால் சில காரணங்களுக்கு இதில் விலக்கு அளிக்கப்படும். அவை இளம் வயதில் திருமண ஏற்பாடு செய்ததின் விளைவாக, அதாவது விசாரணையின் போது பருவம் அடையாத நபர் தம் இளம் வயதில் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் விளைவாக, இந்த முடிவு எடுக்கப்பட்டது, என்று அவர் விளக்கங்களைச் சரிவர கொடுத்து சட்டப்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டது என்று கூற வேண்டும். இது அறியாமையின் காரணமாக ஏற்பட்டது என்று ஏற்றுக்கொள்ளப்படும்.

# திரைப்படச் சட்டம், 1952
# THE CINEMATOGRAPH ACT, 1952

பிரிவு - 2

## விளக்கம்
## Definition

1. முதியோர் என்பது யார் யார் 18 வயது நிறைவு பெற்றவர்களோ அவர்களை மட்டுமே குறிக்கும்.

2. குழு (Board) என்பது மத்திய அரசின் மூன்றாவது பிரிவின் கீழ் உண்டாக்கப்பட்ட அமைப்பாகும். திரைப்படத்தில் தேவை இல்லாதவற்றை நீடிக்கக்கூடிய அதிகாரம் இதற்கு உண்டு.

3. ‘திரைப்படம்’ (Film) என்பது திரைப்படத்திற்கு தேவையான உபகரணங்களும், ஊமைப்படம் மற்றும் தற்போதைய திரைப்படங்களும் உள்ளடங்கும்.

4. மாவட்ட நீதித் துறை நடுவர் என்பது நகர ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்ட ஒரு காவல் துறை ஆணையரைக் குறிக்கும்.

(அ) ஏற்றுமதி என்பது இந்தியாவிற்கு வெளியே இந்தியப் பொருட்களை எடுத்துச் செல்வது.

(ஆ) “புகைப்படம்” என்பது திரைப்படத்திற்கான புகைப்படத்தை குறிக்கும்.

5. இடம் என்பது வீடு, கட்டடிடம், கூடாரம் குறிப்பிடப்பட்டுள்ள போக்குவரத்து, காற்று, கடல், நிலம் இவற்றைக் குறிக்கும்.

6. ‘நியமித்தல்’ என்பது இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகளையும் குறிக்கும்.

7. ‘திருத்த மசோதா’ என்பது சிறப்புக்கட்டளை மூன்றாவது பிரிவின் கீழ் உண்டாக்கப்பட்ட குழுவையும், ஒரு பொதுவான ஒரு அமைப்பையும் குறிக்கும். இது திரைப்படத்தின் தொடர்புடையது.

பிரிவு - 3

## திரைப்பட தணிக்கைக்குழு
## Board of film Censors

மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட திரைப்பட தணிக்கைக் குழு தலைவரின் உத்தரவின் கீழ் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்ட குழுவால் தணிக்கை செய்த பிறகு பொது கண்காட்சிக்காக ஒரு திரைப்படத்தை தணிக்கை செய்து வெளியிடக்கூடியது. இதை மூன்று திரைப்படத் தொழில் நுட்ப

உறுப்பினரால் அங்கீகரிக்கப்பட்ட பின்பே கொடுக்கப்பட வேண்டும். மற்ற கால அளவுகள் மற்றும் நிபந்தனைகள் உறுப்பினர்களால் நியமனம் செய்யப்படும்.

பிரிவு - 4

## திரைப்படச் சோதனை

## Examination of films

(அ) யார் ஒருவர் திரைப்படம் காட்ட ஆசைப்பட்டாலும் அவர்கள் திரைப்பட குழுவுக்கு விண்ணப்பிக்க வேண்டும். அதன் பிறகே குழுவின் முறையான நிர்வாகத்தின் பெயரில் தேர்வு செய்யப்பட்ட பின்பு அந்தச் சட்டத்தின் விதிமுறைகளின்படி மதிப்புள்ள சான்றிதழ் வழங்கப்படும்.

(1) நிபந்தனையற்ற பொது கண்காட்சிக்கு திரைப்படம் அனுமதிக்கப்படல்.

(2) முதியோர்களுக்கென கட்டுப்படுத்தப்பட்ட திரைப்படங்கள் பொது கண்காட்சிக்கு அனுமதிப்பதற்கு முன் நேரடி விண்ணப்பத்தின் பெயரில் சிறிது மாற்றம் செய்யலாம்.

(3) முதியோர்களுக்கென கட்டுப்படுத்தப்பட்ட திரைப்படங்கள் பொது கண்காட்சிக்கு அனுமதிக்கப்படல்.

(4) முதியோர்களுக்கென காட்டப்படும் திரைப்படங்களுக்கென அனுமதி மறுக்கப்படல்.

(ஆ) யாராகிலும் இந்தியாவிற்கு வெளியில் திரையிடவோ அல்லது திரைப்படத்தை ஏற்றுமதி செய்யவோ திரைப்பட ஸ்தாபனத்திற்கு விண்ணப்பம் செய்து அதனை சோதனைக்கு அனுப்பப்பட்டு சட்ட விதிப்படி மதிப்புள்ள சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

(1) இந்தியாவிற்கு வெளியே பொருத்தமான திரைப்படம் காண்பிப்பதற்கு அனுமதி பெறுவதற்கு முன் தேவையுள்ளபோது.

(2) இந்தியாவிற்கு வெளியே திரைப்படம் காண்பிப்பதற்கு அனுமதி பெறுவதற்கு முன் தேவையுள்ள போது நேரடி விண்ணப்பத்தின் பெயரில் மாற்றி அனுமதிக்கலாம்.

(3) இந்தியாவிற்கு வெளியே தகுதியுடைய திரைப்படங்களைக் காண்பிக்க அ,னுமதிக்கப்படல்.

பிரிவு - 7

## இச்சட்டத்தை மீறுவதற்கான தண்டனைகள்

## Penalties for contravention of this part

எந்த இடங்களிலும் காண்பிக்க அனுமதி பெற வேண்டும்.

(i) முதியோர்களுக்கென கட்டுப்படுத்தப்பட்ட அல்லது பொது கண்காட்சிக்காக கட்டுப்படுத்தப்பட்ட பொருத்தமான நிபந்தனையற்ற திரைப்படங்கள் இந்த ஸ்பானத்தின் மூலம் சான்றிதழ் வழங்கப்படாமல் இருந்தால் அல்லது நிபந்தனையற்ற விளம்பரம் செய்தால் அல்லது திருத்தி பொய் கருத்தினைக் கொடுத்தாலும் குறியிட்டு முத்திரை இடப்பட்டாலும்.

(ii) திரைப்பட ஸ்தாபனத்தால் பொது கண்காட்சிக்கு பொருத்தமான முதியோர்களுக்கென கட்டுப்படுத்தப்பட்ட சான்றிதழ் கொடுக்கப்பட்ட திரைப்படங்களை முதியோர் அல்லாது பார்த்தால்.

(அ) ஸ்தாபனத்தால் சான்றிதழ் கொடுக்கப்படாத திரைப்படங்களை ஏற்றுமதி செய்தாலும் இந்தியாவிற்கு வெளியே திரையிட்டாலும்.

(ஆ) சட்டப்படி அதிகாரமில்லாத அல்லது வேறு வழியில் சான்றிதழ் வழங்கப்பட்ட பிறகு மாற்றவோ அல்லது வேறு விதமாகவோ செய்தல்.

(iii) மத்திய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட கட்டளை பிரிவு 6-A-ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி அல்லது ஸ்தாபனத்தில் உபயோகிக்கப்பட்ட அதிகாரங்கள் அல்லது கடமைகள் அல்லது ஆலோசனைக் சட்டம் அல்லது நிபந்தனைகளின் கீழ்.

(அ) நிர்வாக பிரிவின்கீழ் குற்றத்தில் சம்பந்தப்பட்ட குற்றவாளி அந்த திரைப்பட பொறுப்பாளர் மூலம் தண்டிக்கப்பட்ட கோர்ட் மூலம் நேரடி வழக்கு தொடரப்பட்டால் அந்த படம் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படும்.

(ஆ) ‘ஏ’ சான்றிதழ் கொடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட திரைப்படங்களை மூன்று வயதிற்கு கீழ்ப்பட்ட பிள்ளைகளை தாய் தந்தையார் தன்னுடன் அழைத்து வருவது குற்றமில்லை என்று கருதுவது இந்தப் பிரிவில் குற்றமாகும்.

## பிரிவு - 7-A

## பறிமுதல் செய்ய அதிகாரம்

## Right to Seize

இந்தப் பிரிவின்படி சான்றிதழ் அனுமதிக்கப்படாத திரைப்படங்கள் அல்லது முதியோருக்கென பொது கண்காட்சிக்கு கட்டுப்படுத்தப்பட்ட திரைப்படம் அல்லது முதியோர் அல்லாதவர் என்று தள்ளி வைக்கப்பட்டவர் அல்லது மத்திய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட நிபந்தனைகள் அல்லது ஸ்தாபனத்தால் குறிப்பிடப்பட்ட அதிகாரங்கள் மற்றும் காவல்துறை அதிகாரியின் மூலம் மாவட்ட நீதிபதியால் அல்லது முதல் வகுப்பு நீதிபதிக்கு அதிகாரம் குறையாத மாவட்ட நீதிபதிகளின் மூலம் எந்த இடத்திலும் நம்பக் கூடியதாக இருந்தால் தேடலாம் மற்றும் பறிமுதல் செய்யலாம்.

எந்தத் திரைப்படமும் அந்த ஸ்தாபன பொருத்தமான கண்காட்சி காண்பித்த சான்றிதழ் கொடுக்கப்படாமல் இந்தியாவிற்கு வெளியில் மற்றும் ஏற்றுமதி செய்தாலும் போலீஸ் அதிகாரி மற்றும் மாவட்ட நீதிபதி அல்லது முதல் வகுப்புக்கு அதிகாரம் குறையாத மாவட்ட நீதிபதியின் அதிகாரத்தினால் நம்பக்கூடியதாக இருந்தால் பறிமுதல் செய்யவும் மற்றும் தேடவும் செய்யலாம்.

இந்திய குற்ற விசாரணை முறைச்சட்டம் 1898-ன் நிபந்தனைக்குட்பட்டு இந்த பிரிவில் தேடலாம்.

## பிரிவு - 11

## அனுமதி பத்திரம் வழங்குபவர்

## Licencing Authority

மாவட்ட நீதித்துறை நடுவரால் உரிமை வழங்கப்பட அதிகாரம் பெற வேண்டும்.

## பிரிவு - 12

## அனுமதி பத்திரம் வழங்குபவர்களின் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம்
## Restrictions of powers of Licencing Authority

1. இந்தப் பிரிவின்கீழ் திருப்திப்படவில்லை என்றால் அனுமதி பத்திரம் வழங்கப்பட மாட்டாது.

(அ) இந்தப் பகுதியில் முறையான உண்மையான சம்மதம் பெற வேண்டும்.

ஆ) போதிய முன்யோசனை எடுத்த பிறகு இடம், உரிமை பத்திரத்திற்கு உரிய நபர் பாதுகாப்புடன் கூடிய இடத்தில் கண்காட்சி காண்பிக்கப்படாவிட்டால்.

2. மாநில அரசாங்கத்தின் நிபந்தனைக்குட்பட்டு இந்தப் பிரிவில் அனுமதி பத்திரம் பெறப்பட்டாலும் நிபந்தனைகள் ஒரு சிலரால் தடுக்கப்பட்டால் அந்த விஷயத்தில் தீர்மானம் கட்டுப்படுத்தப்படும்.

3. ஒரு சில சமயங்களில் மாநில அரசாங்கத்தால் அனுமதி பத்திரத்திற்கான அனுமதி ஒத்துக்கொள்ளப்படாவிட்டாலும், மறுக்கப்பட்டாலும் ஒருசில அரசாங்க அலுவலரால் பொருத்தமானதாக இல்லை என்று நினைத்தாலும்.

4. மத்திய அரசாங்கத்தால் ஒரு நேரத்திற்கு நேரம், கொடுக்கப்பட்ட அனுமதி பத்திரம் பொதுவாக மற்ற அனுமதி பத்திரத்தின் விவரம், உபயோகம், எந்த வகையாக திரைப்பட கண்காட்சி, அறிவியல், கலை, கல்வி செய்திகளும் அவ்வப்போது நடக்கும் நிகழ்ச்சிகள், உள்நாட்டு நிகழ்ச்சி இவை போன்ற திரைப்படங்களை போதிய நிபந்தனைக்கு கட்டுப்பட்டு இருப்பதை தவிர உள்ளவை.

### பிரிவு - 15

## அனுமதி பத்திரம் ரத்து செய்யக்கூடிய அதிகாரம்
## Power to remove licence

இந்தச் சட்டப் பிரிவு 7 அல்லது பிரிவு 14-ல் குறிப்பிட்டுள்ளபடி அனுமதி பத்திரம் உரிமை பெற்றவர் தண்டனையடைந்த குற்றவாளியாக இருந்தால் அனுமதி பத்திரம் கொடுக்க கூடிய அதிகாரம் பெற்றவர்களால் அந்த அதிகாரம் ரத்து செய்யப்படும்.

# பாண்டிச்சேரி சீட்டு நிதி தொகை சட்டம்
# THE PONDICHERRY CHIT FUND ACT

இச்சட்டம் 1966-ஆம் ஆண்டு இந்தியாவில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இது நமது பாண்டிச்சேரி மாநில சட்டசபையில் 1967 பிப்ரவரி 14-ஆம் தேதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அன்று முதல் இவை நடைமுறைக்கு வந்துள்ளது. பாண்டிச்சேரி எல்லைக்குள் பின்பற்றி வருகின்றன.

### *1. அமுல் படுத்த ஆரம்ப ஏற்பாடுகள் செய்த முறைகள்.*

(அ) இந்த சட்டத்தைப் பாண்டிச்சேரியில் சாதாரண நிதி சட்டம் என்று கூறுவார்கள். இது 1966-ல் உருவாக்கப்பட்டது.

(ஆ) இது பாண்டிச்சேரி முழு எல்லைக்குள் பரப்பப்பட்டுள்ளது.

(இ) இந்தச் சட்டம் நடைமுறைக்கு மிக வேகமாக கொண்டுவரப்பட்டது. இவற்றை தனது எல்லைக்குள் பரப்ப விளம்பரங்கள், பல இடங்களில் இவை பற்றிய பொதுக்கூட்டங்கள் மற்றும் அலுவலர்களை நியமித்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன.

## 2. *வரையறை அல்லது இலக்கணம் (Definitions):*

மேலே கூறப்பட்டுள்ள விளக்கங்கள் இல்லாமல் மேலும் சில வரையறைகள். உள்ளன.

(a) அங்கீகாரம் பெற்ற வங்கிகள் என்பது அரசின் முழு அதிகாரம் பெற்ற வங்கியைக் கூறுவதாகும்.

(b) சாதாரண அல்லது சந்தா என்பது மாற்றும் முறை அமைப்பை சாதாரண நிதி என்கிறோம்.

இதை சாதாரணம் என்றும் நிதி என்றும் அழைக்கிறோம். இதில் அல்லது இந்த அங்கத்தில் தலைவராக பொறுப்பேற்றும் எவரும் தாம் சேர்க்கும் சந்தாதாரரிடம் சில ஒப்பந்தங்களின் மூலம் இதில் அவரை சேர்க்கிறார். அவ்வாறு சேர்ப்பது குறிப்பிட்ட தொகைக்கோ அல்லது குறிப்பிட்ட மதிப்புள்ள பொருளுக்கோ அந்தச் சந்தாதாரர் சில தவணையின் பேரில் இதை சேர்வதற்கான முடிவை எடுக்கின்றார். ஆகையால் இவை சில ஏலக்குறிப்பீட்டின் மூலம் அல்லது சில நோக்கங்களின் மூலம் இந்த ஒப்பந்தத்தை என்றும் இதில் குறிப்பிட்ட அளவு பணத்தைக் கட்டுகின்றனர் அல்லது தொகையைக் கட்டுகின்றனர்.

## *3. விளக்கங்கள் (Explanations):*

ஒரு மாற்றுமுறை என்பது ஒரு காரணம் என்பது இல்லை ஒரு மோதலின் மூலம் ஏற்படும் சில மாற்று அமைப்பு முறையாகும்.

(அ) ஒரு சிலர் மற்ற அனைவரும் இல்லாமல் அந்தக் குறிப்பிட்ட சந்தாதாரர் சிறிது தொகையை எந்தவிதமான கொடுக்க வேண்டிய கடன் பொறுப்பில் இருந்து எதிர் காலத்திற்கு கொடுக்கப்படும்.

(ஆ) கொடுக்க வேண்டிய கடன்களிலிருந்து எல்லா சந்தாதாரர்களுக்கும் ஒரு ஒத்த சாதாரண நிதியைப் பெறுவார்கள்.

## *4. சந்தா ஒப்பந்தம் சாதாரண ஒப்பந்தம் (Chit agreements) :*

சந்தா ஒப்பந்தம் என்பது பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள சில விதிமுறைகளின் படி அந்த சந்தா தலைவருக்கும் சந்தாதாரர்களுக்கும் ஏற்படும் ஒரு ஒப்பந்தமாகும்.

## *5. சந்தா பணம் அல்லது தொகை ( A chit amount) :*

சந்தா தொகை என்பது ஒவ்வொரு சந்தாதாரர்களும் கொடுக்கும் சந்தா தொகை மற்றும் தவணைகள் ஆகியவற்றைக் குறிக்கும்.

## 6. *அபராதம் அல்லது தண்டனைகள் (Penalties) :*

மேற்குறிப்பிட்டுள்ள ஷரத்துக்கள் குறிப்பிடுகின்ற யாரொருவராக இருந்தாலும் அல்லது அலட்சியப்படுத்துபவராக இருந்தாலும் பிரிவு-3,4 மற்றும் 7-ல் உள்ள நிபந்தனைகள் பேரில் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். அவ்வாறு அவர்களுக்கு ஒரு ஆண்டு சிறை தண்டனையோ அல்லது ரூ.500 அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கலாம். மற்றும் அந்த சந்தா தொகையின் தலைவராக இருந்தாலும் கொடுத்துள்ள ஒப்பந்த பத்திரத்தை சரியாக பூர்த்தி செய்யாமல் இருந்தால் கீழே குறிப்பிட்டுள்ள பிரிவு அடிப்படையில் அவர்களை தண்டிக்கலாம். அவர்கள் பிரிவு 21, 29 மற்றும் 32 மேலும் அவர்களுக்கு கொடுத்துள்ள கால வரம்புக்குள் கொடுக்காவிடில் அவரை பிரிவு-55 மூலம் கண்டிக்கலாம்.

# அரசாங்க இரகசிய சட்டம், 1921
# THE OFFICIAL SECRETS ACT, 1921 (19 OF 1921)

பிரிவு - 1

அரசாங்க இரகசிய சட்டம் 1923 (19 of 1923) இச்சட்டம் அரசாங்க இரகசியச் சட்டம் 1923 என்று அழைக்கப்படுகின்றது.

இச்சட்டம் இந்தியா முழுமையும் மற்றும் அரசாங்க அதிகாரிகள் வெளி நாட்டில் உள்ள இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் செல்லுபடியாகும்.

பிரிவு - 2

## விதிகள்
## Rules

1. பெறுதல் அல்லது கொடுத்தல் என்ற சொல்லானது இச்சட்டத்தில் முழுமையாகவோ அல்லது பகுதியாக பெறுதல் அல்லது கொடுத்தல் அதாவது வரைபடத் திட்டம் மாதிரி, ஷரத்துக்கள், குறிப்பு, பத்திரங்கள் அல்லது தகவல் அல்லது பொருள், செயல் அல்லது விளக்கம் ஆகியவை கொடுக்கப்படுவதோ அல்லது பெறப்படுவதோ அல்லது நகல் எடுக்கச் செய்வதோ பரிமாற்றம் செய்வதேயாகும்.

2. "பத்திரம்" என்பது ஒரு பத்திரத்தை உள்ளடக்கியதாகும்.

3. "மாதிரி" என்பது திட்டம் வரைந்து குறித்தலையும், உதாரணம் மாதிரி வடிவம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

4. "யுத்த ஆயுதத் தளவாடம்" என்பது முழுமையாகவோ அல்லது பகுதியோ கப்பல், நீர்மூழ்கிக் கப்பல், ஆகாய விமானம் போன்ற இயந்திரம் பீரங்கி அல்லது அதுபோன்ற எஞ்சின்கள் ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகள் அல்லது கண்ணி வைக்கக் கூடிய ஆயுதங்கள் அல்லது எந்த ஒரு பொருளோ அல்லது சாதனமோ உண்மையாகவோ அல்லது உத்தேசமாகவோ யுத்தத்திற்கு உபயோகப்படுபவையாகும்.

5. "புகைப்படம்" என்பது போட்டோ படங்களின் பிலிமிலிருந்து அல்லது பதிவிலிருந்து படத்தை தெரியச் செய்வதேயாகும்.

6. "தடை செய்யப்பட்ட பகுதி" என்பது நாட்டு அல்லது மாநிலத் தற்காப்பு தரைப்படை, விமானப்படை ஸ்தாபனங்கள் அல்லது நிலையங்கள் கண்ணிகள், சுரங்கங்கள், சுரங்க வெளிகள் இராணுவ தற்காலிக முகாம்கள், கப்பல் அல்லது கப்பல் தளவாடங்கள் ஆகியவை அரசாலோ அல்லது அரசின் மூலமாகவோ எந்த ஒரு இராணுவ தந்தியோ, கம்பி இல்லா தந்தி சைகை நிலையங்களோ எந்த ஒரு இடம் ஆயுதங்கள் வைத்திருக்கும், பழுது பார்க்கும் உற்பத்தி செய்யும் அல்லது வரைபடம், திட்டம் மாதிரி அல்லது பத்திரம் இது சம்பந்தமான பொருட்கள் வைத்திருக்கும் கட்டிடம் அல்லது இடம், ஆயுதங்களுக்கென்று , உலோகங்கள், உப்புகள், தாதுக்கள் கிடைக்கும் இடங்களேயாகும்.

(அ) எந்த ஒரு பகுதி அரசாங்கத்தால் நாட்டின் நலனுக்காக தடை செய்யப்பட்ட பகுதியென்றும் அரசாங்க பொருட்களை நாட்டின் நலனுக்காக வைத்திருக்கும் இடமோ.

(ஆ) எந்த ஒரு பகுதி அரசாங்கத்தால் நாட்டின் நலனுக்காகத் தடை செய்யப்பட்ட பகுதியென்று அரசாங்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டு மேலே கூறப்பட்டுள்ள செயலுக்காக பயன்படுத்தப்படுகிறதோ,

(இ) மற்றவை ரயில்வே, ரோடுகள், கால்வாய்கள் போன்றவை நில மார்க்கமாகவோ, நீர் மார்க்கமாகவோ செய்திகளை நாட்டின் பாதுகாப்பு மற்றும் மற்ற தேவைகளை அல்லது எந்தப் பகுதி வாயு, நீர், மின்சாரம் ஆகியவைகள் பொது மக்களுக்கு நன்மை செய்கின்றனவோ அல்லது எந்த ஒரு இடம் ஆயுதங்கள் போன்றவை யுத்தத்திற்கு உபயோகப்படுபவை சேமிக்கும், பழுது பார்க்கும் உற்பத்தி செய்யும் இடமோ அல்லது மத்திய அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட இடம் என்று அரசாங்க அறிக்கையில் விளம்பரப்படுத்தப்பட்ட இடமோ அல்லது இது போன்ற இடங்கள் எதிரிக்கு உதவும் என்று கருதக்கூடிய இடமென்று ஆங்கிலம் அல்லது பிராந்திய மொழியில் குறிப்பிட்டு அரசாங்க அறிக்கையில் வெளிப்பட்ட இடங்களே ஆகும்.

7. “வரை படம்” என்பது எந்த ஒரு புகைப்படம் அல்லது எந்த ஒரு பொருள் அல்லது இடத்தைக் குறிக்கும் குறிப்பு ஆகும்.

## பிரிவு - 5

## ஒற்றறிவதற்கான தண்டனைகள்

1. எந்த ஒரு மனிதன் நாட்டின் நலனுக்கோ மற்றும் ஏதாவது வகையிலோ ஊறுவிளைவிப்பவராயின்,-

(அ) தடை செய்யப்பட்ட பகுதியை நெருங்கியோ சோதனை செய்தோ அதனைக் கடந்தோ அல்லது அதன் முகத்தினில் பட்டோ அல்லது நுழைந்தோ;

(ஆ) எந்த விதமான வரைபடம் எடுத்தோ, திட்டம் தீட்டியோ மாதிரி அல்லது குறிப்பெடுத்தோ அது மறைமுகமாகவோ நேர்முகமாகவோ எதிரிக்கு உதவும் வகையில் செய்தல்.

(இ) பெறுதலோ, சேகரித்தலோ, குறிப்புகள் அல்லது வெளியீடுகள் அல்லது அரசாங்க இரகசிய ஏவல்களையோ அல்லது குறிப்பு வார்த்தைகளையோ, அல்லது எந்த வரை படங்களையோ, அல்லது திட்டங்களையோ, மாதிரிகளையோ, பொருட்களையோ அல்லது பத்திரங்களையோ அல்லது எந்த தகவல்களையோ எதிரிக்கு உதவும் வகையில் நேர்முகாகவோ, மறைமுகமாகவோ, மாநிலத்திற்கோ, நாட்டிற்கோ அதன் இறையாண்மை, ஒற்றுமை, பாதுகாப்பு ஆகியவற்றைக் குலைக்க உதவுவது குற்றமாகும்.

2. இக்குற்றம் புரிபவர்களுக்கு கீழ்க் குறிப்பிட்ட சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் மற்றவருக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் இச்சட்டத்தின் மூலம் வழங்கலாம்.

3. நாட்டின் தற்காப்பு, ஆயுத உற்பத்தி, கப்பல் படை, தரைப் படை, விமானப் படை, நிர்வாகம் அல்லது கட்டுப்பாட்டு அலுவலகம், சுரங்கம், சுரங்கவெளி, தொழிற்சாலை, கட்டுமானத்தளம், முகாம், கப்பல் அல்லது விமானம் அல்லது விமானப் படை, கப்பல் படை, தரைப்படை போன்ற அரசாங்க சம்பந்தமானவை மற்றும் அரசின் இரகசிய எண் சம்பந்தமானவை.

## பிரிவு - 6

## அனுமதியில்லாமல் அரசாங்கம் தனக்கென்று வழங்கிய சீருடையை உபயோகித்தல் புகாரை குற்றமாக்குதல், பொய் தஸ்தாவேஜீ அல்லது போலிக் கையெழுத்திடுதல், போலியாக நடித்தல் மற்றும் போலிக் பத்திரங்கள்

1. எந்த ஒரு நபர் தடை செய்யப்பட்ட பகுதியில் அல்லது நாட்டிற்கோ அல்லது மாநிலத்திற்கோ பங்கம் விளைவிப்பதாக நுழைவதற்கு முயற்சிக்கையில் அல்லது மற்றையோருக்கு உதவும் காலத்து ஏறக்குறைய,–

(அ) எந்த ஒரு சீருடையாகவோ அல்லது அதற்கு சம்பந்தமான உடையை அணிந்தாலோ அதாவது அரசாங்கத்திற்குக் கடமைப்பட்டவர்களைத் தவிர எந்தவிதமான கப்பல் படை, தரைப் படை, விமானப் படை, காவலர் மற்றும் அலுவலக சீருடைகளை அணிந்து முற்படுகையில்.

(ஆ) வாய் மூலமாக அல்லது எழுத்து மூலமாக கொடுக்கப்பட்ட விண்ணப்பம் அல்லது உறுதிமொழி அல்லது அவரால் கையெழுத்திடப்பட்ட ஏமாற்றுப் பத்திரத்தின் உதவியாலோ தவறான வாக்கு மூலத்தாலோ அல்லது நீக்கத்தாலோ

(இ) போலியோ, மாற்றமோ அல்லது ஒரு சில வாக்கியத்தை அடையாள அட்டையில் அழித்தாலோ அல்லது கடற்படை, தரைப்படை, விமானப் படை, காவல் துறை அல்லது அரசாங்க அனுமதி, சான்றிதழ் உரிமம் அல்லது பத்திரம் இது போன்றவற்றின் போலியை தெரிந்து உபயோகித்தாலோ அல்லது வைத்திருந்தாலோ.

(ஈ) அரசாங்க அனுமதியில்லாமல் அரசாங்க முத்திரை போன்றவைகளை உபயோகம் செய்வதோ, வைத்திருப்பதோ குற்றமாகும்.

**2. எந்த ஒரு நபர் நாட்டிற்கு எதிராக ஒரு காரியம் செய்தல்.–**

அ) ஒரு காரியம் அல்லது பத்திரத்தை வைத்திருக்க அல்லது முடித்துக்கொடுக்க அரசாங்கத்தால் பணிக்கையில் அதை செய்யாமல் விடுத்தாலோ அல்லது கட்டளையை மறுத்தாலோ அல்லது திருப்பிக் கொடுக்க மறுத்தாலோ;

ஆ) எந்த ஒரு நபரை அவரிடம் உள்ள அலுவலக இரகசியத்தை அவருக்காகவோ அல்லது தமக்காகவோ வைத்திருக்கச் செய்தாலோ அல்லது பரிமாறிக்கொண்டாலோ அல்லது சங்கேத வார்த்தைகளையும் அல்லது இரகசிய எண்களை ஒருவருக்கென்று பணிக்கப்பட்ட பின்பு மற்றையோருக்கு பரிமாறுவதோ அல்லது மற்றையோர் அரசாங்க இரகசியங்களைப் பெறுவதோ அல்லது பத்திரங்களை சங்கேத மொழிகளைப்பெற விழைவதோ அல்லது கொடுக்கப்பட்ட அரசாங்க இரகசியங்களைக் காக்கத் தவறுவதோ குற்றமாகும்.

இ) அரசின் அனுமதியில்லாமல் முத்திரை அல்லது முத்திரைத் தலை (Stamp) அல்லது அச்சு ஆகியவற்றை செய்வதோ அல்லது விற்பதோ இச்சட்டத்தின் பெருங்குற்றமாகும்.

3. இது போன்ற மேற்குறிப்பிட்ட குற்றங்களைப் புரிவோர்களுக்கு இரண்டு வருடம் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனையும் அல்லது அபராதமும் அல்லது இரண்டுமோ இச்சட்டத்தின் மூலம் விதிக்கலாம்.

### பிரிவு - 7

## போலிஸ் மற்றும் மத்திய அரசின் ஆயுதப் படையினரின் தடை செய்யும் அதிகாரங்கள்

ஒரு நபர் அரசின் அதிகாரம் இல்லாமல் தெரிந்தோ அல்லது தெரியாமலோ அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட பகுதியில் அதிகாரம் பெற்றவரைத் தடை செய்தாலோ அவருடைய கடமையை நிறைவேற்றவிடாமல் தடுத்தாலோ அதாவது அவர்கள் பாதுகாவல் ரோந்துப்பணி புரியுமிடத்து தடை செய்வது குற்றமாகும்..

எந்த ஒரு நபர் இந்தச் சட்டங்களை மீறுகின்றவர்களோ அவர் இச்சட்டத்தின் மூலம் நான்கு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டுமோ பெறுவர்.

பிரிவு - 10

**உளவாளிக்கு இடம் கொடுத்தமைக்கான தண்டனை**

எந்த ஒரு நபர் தெரிந்து ஒரு உளவாளியைத் தமது இடத்தில் அல்லது தனது பொறுப்பில் வைத்திருக்க அனுமதிப்பாரேயாகின் அதாவது அவன் மற்றொருவனுக்கு உளவு சொல்ல உதவுவானாகில், அந்த நபர், பிரிவு 3 அல்லது 9-ன்படி குற்றமாகும்.

அவ்வாறு குற்றம் புரிவோரைக் கேட்க விழையும் காவல் அதிகாரி (Superrintendent of Police) அல்லது மற்றைய காவல் அதிகாரி ஆய்வாளர் பதவிக்கு குறையாமல் தலைமை அதிகாரியால் பணிக்கப்பட்டவர் வந்து அணுகும் போது தக்க காரணம் கூற மறுப்பது குற்றமாகும்.

இச்சட்டங்களை மீறுபவர்கள், இச்சட்டத்தின் மூலம் மூன்று வருடங்களுக்கு அதிகமாகாத சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கலாம்.

பிரிவு - 11

**ஆராய்வதற்கான உத்திரவாத பத்திரம்**

இந்த உத்திரவாதப் பத்திரத்தை எந்த ஒரு நீதிபதி (தலைமை நீதிபதி துணைப்பிரிவு நீதிபதி, முதல் வகுப்பு நீதிபதி) ஆகியோர் அல்லது நெருக்கடியான நேரத்தில் காவல் கண்காணிப்பாளருக்கு குறைவில்லாமல் தகுதி பெற்றவரோ, பிறப்பிக்கலாம். அப்படிக் காவல் கண்காணிப்பாளர் பிறப்பித்தால் உடனே அதனை சம்பந்தப்பட்ட நீதிபதிக்குத் தெரிவித்து ஒப்புதல் பெற வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள உத்திரவாதப் பத்திரத்தைச் செயல்படுத்த எந்த விதமான உளவு சம்பந்தமான வரைபடம் திட்டம் (மாதிரி) குறிப்புப் பத்திரங்களைக் கைப்பற்ற ஒரு காவல் நிலைய பொறுப்பு அதிகாரிக்குக் குறையாமல் அதிகாரம் உள்ளவரே செய்யலாம் என்று இச்சட்டம் வழிவகை செய்கின்றது.

# சட்ட விரோதமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், 1967
# THE UNLAWFUL ACTIVITIES PREVENTION ACT, 1967 (37 of 1967)

பிரிவு - 1

இந்தச் சட்டம் இந்தியா முழுமைக்கும் செல்லுபடியாகும்.

பிரிவு - 2

**விதிகள்**

## Rules

அ) ''சங்கம்'' என்பது எந்த ஒரு சங்கமும் அல்லது எந்த ஒரு தனிப்பட்ட நபரின் மூலம் கூடப்பட்ட கூட்டமேயாகும்.

ஆ) சட்ட விரோதமான நடவடிக்கை என்பது தனிப்பட்ட நபர்களின் கூட்டமோ அல்லது சங்கமோ ஆகும்.

(1) அந்தக் கூட்டம் எந்த ஒரு காரணத்திற்காகவோ எந்த ஒரு காரணத்தை முன்னிட்டோ, உள்நாட்டிலோ கூட்டப்பட்ட கூட்டமாகும்.

(2) அக்கூட்டமானது கேள்வி கேட்பதோ, பிரிவினை ஏற்படுத்துவதோ அல்லது இந்தியாவின் இறையாண்மைத் தன்மை, எல்லை ஒற்றுமை ஆகியவற்றைக் குலைப்பதே ஆகும்.

இ) ''சட்டவிரோதமான கூட்டம்'(Unlawful Associations) என்பது எந்த வகையான கூட்டம்,–

(i) சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனவோ அல்லது தூண்டிவிடுகின்றனவோ அல்லது அக்கூட்டத்திற்கு உதவி செய்கின்றனவோ அல்லது அக்கூட்டத்தில் அங்கம் வகிக்கின்றனவோ அதுவே குற்றமாகும்.

(ii) அக்குற்றம் 153 (A) IPC (அ) 153 (B) IPC 1860 (45 of 1860) அல்லது அந்த சங்கமானது ஊக்குவிப்பதோ அல்லது அந்தக் கூட்டத்தில் பங்கு எடுத்துக் கொள்வதோ அல்லது அக்கூட்டத்தில் அங்கீகரிப்பதோ மேற்குறிப்பிட்டுள்ள (IPC) சட்டத்தின்படி குற்றமாகும்.

பிரிவு – 3

### சட்ட விரோதமான சங்கங்கள்

## Unlawful Associations

சட்ட விரோதமான சங்கம் என்று பிரகடனப் படுத்துவதற்கான முறைகள்,–

ஒரு சங்கம். பொதுமக்களுக்கு ஊறுவிளைவிப்பது என்பது மக்களின் நலனைப் பாதிக்கும் வகையில் அச்சங்கம் தவறான செய்திகளை வெளியிடுதல். அச்செய்திகளை தம்பட்டம் கொட்டி அல்லது ஒலிபெருக்கியின் மூலம் விளம்பரம் செய்தல் அல்லது அதனுடைய அங்கத்தினர்களுக்கோ அல்லது பொது மக்களுக்கோ அவர்களுடைய கோரிக்கை, நிபந்தனை முதலியவற்றின் நகல்களை எல்லோருக்கும் கொடுத்து கெடுப்பது இதுபோன்ற செயல்களில் மத்திய அரசாங்க அறிக்கையில் விளம்பரம் செய்து சட்டவிரோதமான கூட்டம் அல்லது சங்கம் என்று அறிவித்தவையேயாகும்.

பிரிவு – 8

### சட்ட விரோதமான கூட்டம் என்று குறிப்பிடப்பட்ட இடத்திற்கான விதிகள்

1. இந்த இடம் என்பது சட்டவிரோதமான கூட்டம் நடைபெறும் வீடோ கட்டிடமோ அல்லது அது சம்பந்தமான இடமோ, பகுதியோ அல்லது கூரையோ அல்லது கூடாரமோ அல்லது கப்பல் போன்றவைகளோ ஆகும்.

2. இம்மாதிரி சட்டவிரோதமான சங்கம் கூடுமிடம் என்று குறிப்பிடுவதற்கு இந்த வட்டார நீதிபதியோ அல்லது நீதிமன்ற நடுவரின் நகர்த்தும் பொருளோ, உடைகளோ, சமைக்கும் பொருட்கள், படுக்கும் பொருட்கள், காரணிகள் உணவுப்பொருட்கள் மற்ற இயற்கைப் பொருட்கள் தவிர குறிப்பிடப்பட்டவை ஆகும். அது ஒரு மதிக்கத்தக்க சாட்சிகளின் முன்னிலையில் குறிப்பிடப்பட வேண்டும். அது எழுத்து மூலமாக இருக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சட்ட விரோதமான சங்கத்தின் பொருட்களை அந்த அதிகாரம் உள்ள நபர் (மாவட்ட நீதிபதி) அந்தப் பொருட்களை உபயோகப்படுத்தாமல் இருக்க எழுத்து மூலமாக கட்டளை பிறப்பிக்கலாம்.

4. சட்ட விரோதமான சங்கம் கூடுமிடம் என்று அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட இடத்தில் எந்த ஒரு நபரோ அல்லது சங்கமோ நுழைவதற்கு அந்த வட்டார நீதிமன்ற நடுவரிடம் அனுமதி பெற வேண்டும்.

5. அப்படி அனுமதி பெற்றபின் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் நுழையும்போது அந்த வட்டார நீதிமன்ற நடுவரால் விதிக்கப்பட்ட சட்டத் திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

6. எந்த ஒரு காவல் அதிகாரியோ (உதவி ஆய்வாளர் பதவிக்குக் குறையாமலோ அல்லது மத்திய அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரியோ) மேற்குறிப்பிட்ட இடத்தில் நுழைவோரை சோதனையிடலாம். (பெண்களாயின் பெண்களோ அல்லது பெண் அதிகாரியோ சோதனையிட வேண்டும்).

## பிரிவு - 10

## சட்ட விரோதமான கூட்டத்தில் ஒரு அங்கத்தினராக இருப்பதற்கான தண்டனை

ஒரு நபர் அரசாங்கத்தால் சட்டவிரோதமான சங்கம் அல்லது கூட்டம் என்று குறிப்பிடப்பட்டதில் அங்கம் வகித்து அல்லது அந்தக் கூட்டத்தில் பங்கு பெற்று அல்லது அந்தக் கூட்டத்திற்காக பொருள் உதவி செய்து அல்லது அந்தக் கூட்டத்திற்காக நிதி திரட்டுவாரேயானால் அல்லது எந்த வகையிலாவது அக்கூட்டத்தின் செயல் நடைபெறுவதற்கு உதவுவராயின் அவர் இச்சட்டத்தின் இரண்டு வருடம் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனை அல்லது அபராதமோ விதிப்பதற்கு உள்ளாவார்கள்.

## பிரிவு - 11

## சட்ட விரோதமான கூட்டம் அல்லது சங்கத்தின் நீதி சம்பந்தப்பட்ட தண்டனைகள்

எந்த நபர் பிரிவு 7-ல் உட்பிரிவு (1)-ஐ மீறி பணம், கடன் பத்திரம் அல்லது கடன் ஆகியவற்றை கொடுப்பதோ அல்லது அது சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ குற்றமாகும். அப்படி மீறுபவர்கள் மூன்று ஆண்டு வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ மற்றும் Cr.P.C. சட்டத்தின்படி மேலும் அதிக தண்டனை விதிக்கவோ அல்லது அந்த பணம் அல்லது கடன் தொகையோ அல்லது அந்த கடன் பத்திரம் ஆகியவற்றை பறிமுதல் செய்யவோ மேலும் அவர்கள் சொத்து மற்றும் ஆள் ஜாமீன் கொடுக்கவோ செய்யலாம்.

## பிரிவு - 12

## சட்ட விரோதமான கும்பல் கூடும் இடம் என்று குறிக்கப்பட்ட இடம் சம்பந்தப்பட்ட குற்றம்

யார் ஒருவர் மேற்குறிப்பிட்டுள்ள இடத்தை உபயோகப்படுத்தினாலோ அல்லது உபயோகப்படுத்த நினைத்தாலோ பிரிவு-8 உட்பிரிவு 3-ன் படி மீறினால் இச்சட்டத்தின் மூலம் ஒரு வருடம் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ விதிக்கப்படுவர்.

யாரொருவராகிலும் பிரிவு-8 உட்பிரிவு 4-ஐ மீறி தெரிந்தோ மானசீகமாகவோ அல்லது நுழைய நினைத்தாலோ குற்றமாகும். அப்படி மீறினால் அவருக்கு ஒரு வருடம் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ விதிக்கலாம்.

பிரிவு - 13

### சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தண்டனைகள்

யாரொருவர் சட்டவிரோதமான நடவடிக்கைகளில் பங்கெடுத்தாலோ அல்லது செய்தாலோ அல்லது அறிவுரை வழங்கினாலோ, துணை செய்தாலோ அல்லது ஊக்குவித்தாலோ அவர்கள் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனை மற்றும் அபராதத்திற்கும் உள்ளாவார்கள்.

அந்த ஒரு நபர் சட்ட விரோதமான சங்கம் என்று பிரிவு 3-ன் படி குறிப்பிடபட்ட சங்கத்திற்கு உதவி செய்தால் அவர் இச்சட்டத்தின்படி ஐந்தாண்டு வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமே பெறுவார்.

# குற்றவாளிகளை அடையாளம் காட்டும் சட்டம், 1920
# THE IDENTIFICATION OF PRISONER'S ACT 1920

பிரிவு - 4

### தண்டனை அடையாத குற்றவாளிகளை அளவிடுதல்
### Taking of measurements etc., of non-convicted persons

யாராகிலும் ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கக்கூடிய வழக்கில் சம்பந்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தால் அவர்கள் தங்களுடைய அளவீடுகளை காவல் துறை அதிகாரிகளுக்கு தேவைப்பட்டால் இச்சட்டப் பிரிவின்படி அனுமதிக்க வேண்டும்.

பிரிவு - 5

### புகைப்படமோ அல்லது அளவீடோ எடுக்க கட்டளையிட நீதித் துறை நடுவருக்குள்ள அதிகாரம்
### Power of Magistrate to order a person to be measured or photographed

ஒரு வழக்கு விசாரணையிலோ அல்லது நீதி விசாரணையிலோ இருக்கும் போது, ஒரு குற்றவாளியின் புகைப்படமோ அல்லது அளவீடோ போலீசாருக்கு தேவைப்பட்டால் அது நீதித்துறை நடுவருக்கு நியாயமாகப்பட்டால் அவர் எவரை வேண்டுமானாலும் அனுப்பி போட்டோவோ அல்லது அளவீடோ எடுக்க கட்டளை இடலாம்.

(1) அப்படி கட்டளை இடும் நீதித்துறை நடுவர் முதல் வகுப்பு நடுவருக்கு குறையாத அதிகாரமுள்ளவராக இருக்க வேண்டும்.

(2) ஒரு முறை போட்டோவோ அல்லது அளவீடோ எடுக்கப்பட்ட குற்றவாளி பலமுறை கைதியாகி விசாரணையிலோ அல்லது நீதி நடவடிக்கையிலோ வந்தாலும் ஒரு தடவைக்கு மேல் உத்தரவிடக்கூடாது.

***குறிப்பு:*** குற்றவாளியின் கைரேகை பதிவு செய்யவும், மாதிரி கையொப்பம் பெறவும் நீதிபதியின் அல்லது மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவை பெறத் தேவையில்லை.

பிரிவு - 6

## அளவீடு எடுக்க மறுத்தல்

## Resistance to the Taking of Measurements

இச்சட்டப்பிரிவின்படி எவரேனும் தன்னுடைய அளவிடுதலையோ அல்லது புகைப்படமோ எடுக்க மறுப்பு தெரிவித்தால் அவர்கள்மீது சட்டப்படி எந்த நடவடிக்கை வேண்டுமானாலும் எடுக்கலாம்.

எவரேனும் புகைப்படமோ அல்லது அளவிடுதலையோ மறுப்பு தெரிவித்தாலோ அல்லது மறுத்தாலோ அவர்கள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 186-ன் படி குற்றவாளி ஆவார்.

பிரிவு - 7

## அளவேடுகளின் பதிவுகளையும் மற்றும் புகைப்படங்களையும் அழித்தல்

## Destruction of Photographs and Records of Measurements, etc.

எவரேனும் ஒருவர் முன்கூட்டியே ஒரு வருட கடுங்காவல் தண்டனை விதிக்கக்கூடிய வழக்கில் சம்பந்தப்பட்டு அவர் நீதி விசாரணையின்றியோ அல்லது தள்ளுபடி செய்தோ அல்லது பைசல் (Released without trial or accuted or discharged) செய்து ஒரு நீதிமன்றத்தால் அனுப்பபட்டால் அப்படிப்பட்ட நபருக்கு எடுத்த புகைப்படத்தையோ அல்லது அளவிடுதலையோ மாவட்ட நீதிபதியோ அல்லது உதவி மாவட்ட நீதிபதியோ மேற்படி புகைப்படமோ அல்லது அளவிடுதலோ தேவை என்று குறிப்பிடாவிட்டால் அவற்றை அழித்துவிட வேண்டும் அல்லது சம்பந்தப்பட்டவரிடம் கொடுத்து விட வேண்டும்.

பிரிவு - 9

## நீதிமன்ற வழக்கு

## Bar of Suits

இச்சட்டத்தினை நல்லெண்ணத்துடன் நிறைவேற்றுபவர் மீதோ அல்லது நிறைவேற்ற நியமிக்கப்பட்டவர் மீதோ எந்தவித நீதிமன்ற வழக்கும் மேற்கொள்ள முடியாது.

# இந்திய மன நோய்ச் சட்டம்

# THE INDIAN LUNACY ACT

இந்தச் சட்டம் 1912-ஆம் ஆண்டு இயற்றப்பட்டு இந்தியாவின் அனைத்து பாகங்களிலும் அமுலாக்கப்பட்டுள்ளது.

பிரிவு - 13

அபாயகரமான அல்லது கொடூரமான பைத்தியக்காரர்கள், போதுமான காபந்து, கட்டுப்பாடு இல்லாத பைத்தியக்காரர்கள் மீது போலீசார் எடுக்க வேண்டிய அதிகாரமும் கடமையும் **:-**

ஒரு காவல் நிலைய அதிகாரி தனது காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட இடத்தில் போதுமான பாதுகாப்பு கட்டுப்பாடு இல்லாத தனது உறவினர்களால் கைவிடப்பட்டு, மற்றவர்களால் கொடுமைப்பட்டு திரிந்து கொண்டிருக்கும் பயங்கர பைத்தியக்காரர்களை கைது செய்து சம்பந்தப்பட்ட மாஜிஸ்டிரேட்முன் ஆஜர்படுத்த வேண்டும்.

மாஜிஸ்டிரேட் அந்தப் பைத்தியக்காரரை மனநோய் பிரிவு டாக்டரிடம் அனுப்பி ஒப்புதல் கேட்பார். அவர் சித்தப் பிரமை உள்ளவர்தான் என்று சான்றிதழ் கொடுத்தால் மீண்டும் மாஜிஸ்டிரேட் முன் அவரின் உத்தரவு பெற்று புத்தி சுவாதீனம் இல்லாதவர்களுக்கான மருத்துவமனையில் ஆஜர்படுத்த வேண்டும்.

# புதுச்சேரி ஒலி பெருக்கி மற்றும் ஒலிபெருக்கி உரிமங்கள் சட்டம் 1967

# THE PONDICHERRY SOUND AMPLIFIER AND LOUD-SPEAKER LICENCING RULES, 1967

### பிரிவு - 3

எந்த நபரும் இந்த விதிப்படி லைசன்ஸ் பெறாமல் எந்தவிதமான ஒலிபெருக்கிக் கருவிகளையும் உபயோகிக்கக் கூடாது.

### பிரிவு - 4

லைசன்ஸில் குறிப்பிட்டது போல் அல்லாமல் ஒலிபெருக்கியை மருத்துவமனையை நோக்கியோ, பிரார்த்தனைக் கூடத்தை நோக்கியோ, பள்ளிகளை நோக்கியோ, அரசு அலுவலகத்தை நோக்கியோ அமைத்திருப்பது குற்றமாகும்.

### பிரிவு - 5

லைசன்ஸ் வாங்கிய போதிலும், அதில் குறிப்பிட்டுள்ளதுபோல் 30 மீட்டருக்குள் சப்தம் கேட்குமாறு செய்யத்தவறி, அந்த பகுதியிலுள்ள மருத்துவமனைக்கோ, பிரார்த்தனைக் கூடத்திற்கோ, பள்ளிக்கோ அல்லது ஏதாவது அரசு அலுவலகத்திற்கோ கேட்குமாறு ஒலிபெருக்கியை அமைத்திருப்பது குற்றமாகும்.

### பிரிவு - 6

அலுவலில் உள்ள உதவி ஆய்வாளர் பதவிக்கு கீழ்ப்படாத நிலையில் உள்ள போலீஸ் அதிகாரி, லைசன்ஸில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை மீறி ஒலிபெருக்கி உபயோகித்தாலோ அல்லது உபயோகிப்பது தெரிந்தாலோ அதனை உடனடியாக கைப்பற்றலாம்.

### பிரிவு - 7

அலுவலில் உள்ள உதவி ஆய்வாளர் பதவிக்கு கீழ்ப்படாத ஒரு போலீஸ் அதிகாரி, இடைஞ்சலாகவோ, தடங்கலாகவோ இருக்கும் ஒலிபெருக்கிகளை நிறுத்த உத்தரவிடலாம் அல்லது அப்புறப்படுத்தலாம்.

### பிரிவு - 8

மேற்கண்ட சட்ட விதிப்படி ஒலிபெருக்கி அமைக்க லைசன்ஸ் அத்தாரிட்டிக்கு விண்ணப்பிக்க வேண்டும். 3 மணி நேரத்திற்கு மேற்படாமல் உள்ள கால அளவிற்கு ரூ.2 கட்டண வீதம் Chalan எழுதி State Bank-ல் அல்லது துணை கருவூலம் கட்ட வேண்டும். (under the Head xix Police fees, fines and forfeitures-amplifier and Loud-Speaker Licence Fees).

பிரிவு - 9

லைசன்ஸ் என்பது இந்த விதிப்படி நியமிக்கப்பட்ட அதிகாரியோ அல்லது அத்தகைய அதிகாரம் பெற்ற போலீஸ் அதிகாரியால் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு லைசன்சும், லைசன்ஸ் அத்தாரிட்டியால் வழங்கப்படும் லைசன்ஸில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

பிரிவு - 10

எந்த ஒரு ஒலிபெருக்கியும் காலை 5.00 மணிக்கு முன்பும் இரவு 10.00 மணிக்கு பின்பும் உபயோகிக்கக் கூடாது.

பிரிவு - 11

எந்த ஒரு ஒலி பெருக்கியும் ஒரே இடத்தில் தொடர்ச்சியாக 3.00 மணி நேரத்திற்கு மேல் உபயோகிக்கக் கூடாது.

பிரிவு - 12

வீடுகள், கிளப்புகள், ஓட்டல்கள், ரெஸ்டாரெண்ட், புகையிலைக் கடைகள் விளம்பர வண்டிகள் ஆகியவற்றில் இணைக்கப்பட்ட ஒலி பெருக்கியிலிருந்து 30 மீட்டர் தூரத்திற்கு அதிகமாக செல்லும் வண்ணம் ஒலி பெருக்கியினால் பொதுமக்களின் அமைதிக்கு தொல்லை கொடுப்பது குற்றமாக கருதப்படும்.

பிரிவு - 13

லைசன்ஸ் வழங்கும் அதிகாரி அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட ஏதாவது ஒரு போலீஸ் அதிகாரி ஏதாவது ஒருவருக்கோ அல்லது கூட்டத்தினருக்கோ மேலே கூறப்பட்ட சட்டங்களில் இருந்து ஏதாவது ஒன்றிற்கோ அல்லது எல்லாவற்றிற்கோ விதிவிலக்கு அளிக்க அதிகாரம் உண்டு.

மேலே கூறப்பட்ட சட்ட விதிகளை மீறினாலும், லைசன்ஸ் பெறாமல் ஒலிபெருக்கி உபயோகித்தாலும் அந்த நபருக்கு 50 ரூபாய் வரை அபராதமும் அல்லது 1 மாதம் வரை சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.

# குற்றவாளிகளின் நன்னடத்தைச் சட்டம், 1958
# THE PROBATION OF OFFENDERS ACT, 1958 (20 of 1958)

இச்சட்டம் பாராளுமன்றத்தில் ஒன்பதாவது குடியரசு ஆண்டில் இயற்றப்பட்டது. (குற்றவாளியைச் சோதனையின் பின்னர் விடுவிக்கும் சட்டம் 1958).

இச்சட்டம் ஜம்மு, காஷ்மீர் நீங்கலாக உள்ள இந்தியா முழுமையும் உள்ள மாநிலங்களுக்கு செல்லுபடியாகும்.

பிரிவு - 2

**அ. விதிகள்**

சட்டத் தொகுப்பு என்பது (Criminal Procedure Code) குற்ற விசாரணை முறைச்சட்டம், 1898 ஆகும்..

**மன்னிப்பு அளிக்கும் அலுவலர்**

அதாவது பிரிவு 13-ன் படி நியமிக்கப்பட்ட மன்னிப்பு அளிக்கும் அதிகாரி ஆவார்.

பிரிவு - 3

**குற்றம் செய்தவரை மன்னித்து விடுவதற்கான நீதிமன்றத்தின் அதிகாரங்கள்**

எந்த ஒரு நபர் ஒரு முறைக்கு மேல் கீழ்காணும் தண்டிக்கக்கூடிய குற்றங்களைச் செய்வானாகில் அதாவது பிரிவுகள் 379 அல்லது 380 அல்லது 404 அல்லது 420 இந்தியத் தண்டனைச் சட்டம் (45 of 1860) அல்லது எந்த ஒரு குற்றம் இரண்டு ஆண்டுக்கு குறைவான சிறைத் தண்டனையோ அல்லது அதற்குச் சமமான அபராதமோ அல்லது இரண்டுமோ அல்லது எந்தப் பிரிவு இந்திய தண்டனைச் சட்டத்தின்படியோ அல்லது வேறு ஏதாவது சட்டத்தினாலோ மேலும் அந்த நபர் இதற்கு முன்னால் வேறு எந்த குற்றத்திலும் ஈடுபடவில்லை என்றால் அந்நபருடைய நன்னடத்தை மற்றும் குற்றத்தின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து இச்சட்டத்தின் பிரிவு 4-ன் படி மன்னிப்பு வழங்கப்படும்.

பிரிவு - 4

**ஒரு சில குற்றவாளிகளை அவர்களின் நன்னடத்தையைச் சோதித்து மன்னித்து விடுவதற்காக நீதிமன்றத்தின் அதிகாரம்**

எந்த ஒரு நபர் ஒரு குற்றத்தைச் செய்து அதற்காக தண்டனை அடையும் காலத்து அல்லது தண்டனை மரண தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ அல்லாமல் நீதிமன்றத்தாரின் விருப்பத்திற்கிணங்க, சந்தர்ப்பம், அந்த குற்றத்தின் தன்மை, அக்குற்றத்தைத் தவிர வேறெந்த குற்றமும் செய்யாதிருப்பின் அக்குற்றவாளியின் நன்னடத்தையும் தகுந்த காரணத்தையும் சோதித்தறிந்து அல்லது பொது நலனுக்காகவோ நீதிமன்றத்தாருக்கு நிறைவளிப்பின் எந்தவிதமான சொந்த அல்லது சொத்து அல்லது பிறரின் ஜாமீனிலோ நிபந்தனை அன்றியோ அல்லது நிபந்தனையோடோ அவரை மன்னித்து வெளிவிடலாம்.

பிரிவு - 5

**விடுவிக்கப்பட்ட குற்றவாளியிடமிருந்து ஈட்டுத்தொகை பெறுவதற்கான நீதிமன்றத்தின் அதிகாரங்கள்**

1. ஒரு குற்றவாளியை சோதித்தறிந்து மன்னித்து பிரிவு 3 அல்லது பிரிவு 4-ன் படி வெளியிடும் தருணத்து அதே நீதிமன்றமானது வேறொரு உத்தரவினால் அக்குற்றவாளியிடம் கீழ்க்காணும் வகையில் ஈட்டுத்தொகை விதித்துப் பெறலாம்.

(அ) நீதிமன்றம் நம்பத் தகுந்தது என்று நிறைவளிக்கும் அளவுக்கு ஏற்படும் நஷ்டம் அல்லது ஈட்டுத் தொகை அக்குற்றத்தைப் புரிகையில் ஏற்பட்ட காயம்.

(ஆ) அந்த ஈட்டுத் தொகையானது நீதிமன்றத்தினால் ஒத்துக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட துணைப்பிரிவின்படி (1) விதிக்கப்பட்ட ஈட்டுத்தொகையானது பிரிவு 386 மற்றும் 387 குற்றவியல் விசாரணைச் சட்டத்தின் முறைப்படி பெறலாம்.

3. எந்த ஒரு சிவில் வழக்காயினும் அது குற்ற வழக்காக மாறின் அதனால் ஏற்பட்ட சேதத்திற்கு அந்த வழக்கிற்காக 1-ல் கண்டபடி ஈட்டுத்தொகை அந்தச் சேதத்திற்கும் பொறுமானமுள்ளதாக இருக்க வேண்டும்.

## பிரிவு - 9

ஜாமீனில் விடப்பட்ட குற்றவாளி அந்த நிபந்தனைகளை மீறின் அவர்களை நடத்த வேண்டிய முறை,-

1. எந்த ஒரு நீதிமன்றமும் ஒரு குற்றவாளியை சட்டப்பிரிவு 4-ன் படி உத்தரவு பிறப்பிப்பதோ அல்லது எந்த ஒரு நீதிமன்றம் ஒருவரை அவர் செய்த குற்றத்திற்காக அது நம்பத் தகுந்தது என்று சோதனை அதிகாரியின் புகாரினால் மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளதோ அல்லது ஜாமீனில் விடுவித்த பின்னர் அந்த நிபந்தனையை மீறுவோரை அந்த நீதிமன்றம் அவரைக் கைதுசெய்ய அல்லது அழைப்பு விடுவிக்க அல்லது ஜாமீன்தாரருக்கு அழைப்பு விடுவிக்க அல்லது இந்த நேரத்தில் இன்ன இடத்தில் ஆஜராகும்படி கட்டளையிடலாம்.

2. அப்படி நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்ட அல்லது ஆஜரான குற்றவாளியை அந்த நீதி மன்றமானது அந்த வழக்கு முடியும்வரை காவலில் வைக்கலாம் அல்லது சொந்த ஜாமீனிலோ அல்லது ஆள் ஜாமீனிலோ குறிப்பிட்ட நிபந்தனையின் பேரிலோ, நிபந்தனையின்றியோ வெளியிடலாம்.

3. இந்தக் குற்றத்தை விசாரித்த பின்னர் நீதி மன்றமானது தனக்கு நிறைவு ஏற்பட்டபின் அந்த நிபந்தனையை மீறிய குற்றவாளியை,-

(அ) நடந்த உண்மையான குற்றத்திற்காக தண்டிக்கலாம்.

(ஆ) இந்தக் குற்றம் முதல் தடவையாயின் அந்த ஜாமீன் நிபந்தனையோடு மேலும் அந்த ஜாமீன் நிபந்தனைகளை மீறியவர் மீது 50 ரூபாய் வரை நீடிக்கக்கூடிய அபராதம் விதிக்கலாம்.

4. அப்படி நீதி மன்றத்தால் உபபிரிவு 3-ல் (பி)-ன்படி விதிக்கப்பட்டுள்ள அபராதத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தி விட்டால் அந்தக் குற்றவாளி முன்னர் செய்த உண்மையான குற்றத்திற்காக தண்டிக்கப்படுவார்.

## பிரிவு - 10

## **ஜாமீன் தருவதற்கான ஷரத்துக்கள்**

122, 126, 126A, 406அ, 514, 514A, 514B, மற்றும் 515 ஆகிய குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவின் கீழ் சொத்து அல்லது ஆள் அல்லது மற்றெந்த விதமான ஜாமீனோ இச்சட்டத்திற்காகப் பெறலாம்.

# மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படைச் சட்டம், 1968
# THE CENTRAL INDUSTRIAL SECURITY FORCE ACT 1968
# (50 of 1968)

இச்சட்டம் இந்தியாவில் 19-வது குடியரசு ஆண்டில் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டது. இச்சட்டம் மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படையை நிர்ணயம் செய்வதற்கும் ஒழுங்குமுறைப் படுத்துவதற்கும் குறிப்பிட்ட தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கும் வழி வகை செய்கிறது.

பிரிவு - 2

## விதிகள்
## Rules

(அ) ‘படை’ என்பது மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படை சட்டம் பிரிவு 3-ன்படி உருவாக்கப்பட்டதாகும்.

(ஆ) “ஒரு நிறுவனத்தின் கீழ் இயங்கும் தொழிற்சாலை’ என்பது எந்த வகையான அட்டவணைப்படுத்தப்பட்ட தொழிற்சாலையில் எடுத்துக்கொள்ளப்பட்டதோ அல்லது எந்த ஒரு தொழிலில் இயங்குகிறதோ அல்லது எந்தவிதமான வியாபாரம் அல்லது வாணிபத்தில் ஈடுபடுவதாகவோ பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்டதாகும்.

(இ) (i) பொதுத்துறைக்காக இயங்கும் தொழிற்சாலை என்பது அத்தொழிற்சாலையை வைத்திருப்பதையோ அல்லது கட்டுப்படுத்துவதையோ அல்லது நிர்வாகம் செய்வதையோ.

(ii) கழகம் என்பது மத்திய மாகாண அல்லது மாநில சட்டத்தின்மூலம் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டதோ அல்லது நிர்வாகம் செய்யப்பட்டதோ ஆகும்.

(ஈ) ‘தலைமை ஆய்வாளர்’ என்பது படைத்தலைமை ஆய்வாளர் என்று 4-ன் படி நியமிக்கப்பட்டவராவார்.

(உ) ‘படையின் அங்கத்தினர்’ என்பது இச்சட்டத்தின் மூலம் நியமிக்கப்பட்ட அதாவது மேற்பார்வை அலுவலருக்கு குறைவான தகுதியுடையவராவார்.

(ஊ) ‘அட்டவணை படுத்தப்பட்ட தொழிற்சாலை’ என்பது எந்த ஒரு தொழிற்சாலையும் தொழிற்சாலை சட்டம் (வளர்ச்சி மற்றும் நெறிமுறை 1951 (65 of 1951)-ல் குறிக்கப்பட்ட முதல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவையாகும்.

(எ) ‘மேற்பார்வை அலுவலர்’ என்பது இந்த சட்டத்தின் பிரிவு 4-ன் படி நியமிக்கப்பட்டவராவார்.

பிரிவு - 3

### படையின் நிர்வாகம்

மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படை அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதற்காக நிர்வகிக்கப்பட்டது.

பிரிவு - 8

**படையின் அங்கத்தினர்களை வேலை நீக்கம் செய்தல்**

இந்திய அரசியல் சாசனச் சட்டம் ஷரத்து 311-ன் படி எந்த ஒரு மேற்பார்வை அதிகாரி எந்த ஒரு அங்கத்தினரை,-

(i) பதவி நீக்கம், தற்காலிக பதவி நீக்கம் அல்லது பதவி குறைப்பு ஆகியவைகளை அவர் பதவி காலத்தில் அஜாக்கிரதையாக இருந்தால் செய்யலாம்.

(ii) கீழ்க்கண்ட தண்டனைகளையும் வழங்கலாம்.

(அ) 7 நாட்களுக்கு மிகாமல் சம்பள குறைப்பு

(ஆ) அதிகமான உடலை வருத்தும் உடற்பயிற்சி

(இ) அந்த அலுவலில் இருந்தும் நீக்கம் அல்லது சிறப்புப் படிகளை குறைத்தல்.

பிரிவு - 11

**பிடியாணை இல்லாமல் கைது செய்வதற்கான அதிகாரங்கள்**

எந்த ஒரு மேற்பார்வை அதிகாரியோ அல்லது மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படை அங்கத்தினரோ எந்த வித பிடியாணையோ அல்லது நீதிபதியின் கட்டளை இல்லாமலோ எந்த ஒரு நபரையும் கீழ்க்கண்ட காரணங்களுக்கான குற்றங்களுக்காகக் கைது செய்யலாம்.

(அ) தொழிற்சாலையில் சொத்துக்களை மறைத்தாலோ அல்லது உபயோகம் செய்தாலோ

ஆ) மற்றெந்த பொருட்களை உபயோகித்தாலோ அல்லது மறைத்தாலோ.

பிரிவு - 12

**அதிகார ஆணை இல்லாமல் சோதனை செய்வதற்கான அதிகாரங்கள்**

எந்த ஒரு அதிகாரம் பெற்ற நபர் அவர் நம்பும் அளவிற்கு ஒரு நபர் பிரிவு 11-ன் படி ஒரு குற்றத்தைச் செய்வாராகில் அவரையோ அவர் மறைக்கும் சாட்சிகளையோ அந்தக் குற்றத்திலிருந்து தப்பிக்க முயற்சி செய்பவரையோ அதிகாரமான ஆணையின்றிச் சோதனையிடலாம்.

மேலும் இச்சட்டம் குற்றவியல் தண்டனை முறைச்சட்டம் 1898 (5 of 1898)-ன் படி பரிசோதனையிட வழிவகை செய்கிறது.

பிரிவு - 13

### ஒருவரைக் கைது செய்வதற்குப் பின்பற்ற வேண்டிய முறைகள்

எந்த ஒரு அதிகாரம் பெற்ற அதிகாரி ஒரு நபரை இச்சட்டத்தின் கீழ் கைது செய்தால் எந்தவித தாமதமும் இன்றி எந்தவிதக் காரணமும் இன்றி அவரை காவல் நிலையத்தில், எந்த காரணத்திற்காக கைது செய்யப்பட்டார் என்ற புகாரோடு மேற்படி நடவடிக்கைக்காக ஒப்படைக்க வேண்டும்.

பிரிவு - 18

### பணியில் நெகிழ்வாக இருந்தமைக்காக தண்டனைகள்

எவர் ஒருவர் மத்திய தொழிற்சாலை காவல் படையில் பணிபுரிவோராகில் அவர் தமக்குப் பணிக்கப்பட்ட கடமையில் தவறுவாராயின் அது நம்பத் தகுந்ததாயின் தவிர மற்றவை எல்லாச் செயலும் குற்றமாகும். அப்படி குற்றம் புரியும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 6 மாதத்திற்கு குறையாமல் சிறைத் தண்டனை வழங்கலாம்.

# தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005
# RIGHTS TO INFORMATION ACT 2005

**1.** 1. இந்த சட்டம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

2. இந்த சட்டம் இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் ஜம்மு- காஷ்மீரைத் தவிர

3. இந்தச் சட்டத்தில் பிரிவு 4-ல் உபபிரிவு-1, பிரிவு 5-ல், உட்பிரிவு-1 மற்றும்-2, பிரிவுகள் 12, 13, 15, 16, 24, 27 மற்றும் 28 உடனடியாக அமுலுக்கு வருவதுடன் இதர பிரிவுகள் 120 நாட்கள் அடுத்து அமுலாகிறது.

**2.** ***விளக்கம்***

(அ) அரசாங்கம், எந்தவொரு அமைப்பும் பொதுமக்களுக்காக நிறுவப்பட்ட அமைக்கப்பட்ட சொந்தமாக நிறுவகிக்கப்பட்ட அல்லது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிதிவுதவியால் அமைக்கப்பட்டதுமான.

(1) மத்திய அரசால் அல்லது மத்திய அரசின் நேரடி அங்கீகரிப்பில்

(2) மாநில அரசாங்கத்தால்

**(ஆ) மத்திய தகவல் ஆணையம்:** பிரிவு 12 உட்பிரிவு (1)-ல் கூறியபடி

**(இ) மத்திய பொது தகவல் அதிகாரி : பிரிவு 5-ல் உட்பிரிவு**

1 மற்றும் 2-ல் நியமிக்கப்பட்ட மத்திய பொது தகவல் அதிகாரி மற்றும் மத்திய உதவி பொதுத் தகவல் அதிகாரியாளர்.

(ஈ) **தலைமை தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர்:** பிரிவு 12 உபபிரிவு 3-ல் நியமிக்கப்பட்டது.

**(உ) அதிகார அமைப்பு:** மக்களவை சபாநாயகரோ அல்லது சட்டசபை சபா நாயகரோ அல்லது யூனியன் பிரதேச சபாநாயகரோ மற்றும் மாநிலங்களவை தலைவர் அல்லது மேலவை தலைவர்.

1. உச்ச நீதிமன்றம் தலைமை நீதிபதி
2. உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி
3. குடியரசு தலைவர் அல்லது மாநில ஆளுநர் அல்லது அரசியல் அமைப்பின்படி அதிகாரம் படைத்தவர்கள்.
4. அரசியலமைப்பு கூறு 239 -ல் கூறப்பட்ட நிர்வாகி

**(ஊ) தகவல் :** எந்த பொருளும் எந்த விதத்திலும் அவை அரசு பதிவேடுகள், ஆவணம், தாக்கீது, மின்-தந்தி, தீர்மானம், அறிவுரைகள், பத்திரிக்கை செய்திகள், சுற்றறிக்கைகள், உத்தரவுகள், பயண விவரப் புத்தகங்கள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், தாள்கள், மாதிரிகள், உருவங்கள், மின்-புள்ளி விவரங்கள், பொதுத்துறையினர் விவரங்கள் இவைகளை கையாளவும் அமைக்கவும் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களும் அவ்வப்போது ஏற்படும் சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப நடக்கவேண்டும்.

எ. **சொல்லப்பட்ட:** அரசாங்கம் அல்லது அதிகார அமைப்புகள் இந்த சட்டத்தில் சொல்லப்பட்ட பிரிவின் விதிகள் அதனால்.

ஏ. **அதிகார அமைப்பு:** அதிகார அமைப்பு என்பது ஒரு நிறுவனம் அல்லது சுய ஆட்சி நிறுவனம் கீழ்காணும் அமைப்பில் உருவானது.

1. இந்திய அரசியல் அமைப்பு
2. பாராளுமன்றத்தால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள்,
3. சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட ஏதாவது ஒரு சட்டம்
4. அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்ட அரசாணை அல்லது உத்தரவு
   a. சுய ஆட்சி அல்லது நிதி உதவியால்
   b. அரசால் உதவி அளிக்கப்பட்ட அரசு சாரா நிறுவனங்கள்

(ஐ) **பதிவேடுகள்:**

A. ஆவணங்கள், கோப்புக்கள் ஏதாவது

B. குறும்படம், குறுந்தகடு, நகல்கள். நகல்கள் அடங்கிய ஆவணங்கள்.

C. உருவகங்கள் மேற்படுத்தப்பட்ட விரிவாக்கப்பட்ட உருவகங்கள்.

D. கணிணியிலிருந்து உருவாக்கப்படும் செயல்கள் மற்றும் வடிவங்கள்

(ஒ) **தகவல் அறியும் உரிமைகள் :**

இந்த சட்டத்தின்படி எந்த ஒரு அரசாங்க அமைப்பில் கையாலும் கீழ்கண்டவற்றில் தகவல் அறியும் உரிமை உண்டு.

1. வேலைகளை மேற்பார்வை, ஆவணம், பதிவேடுகள்
2. குறிப்பெடுத்தல், பிரதி எடுத்தல், சான்று பெற்ற ஆவணங்கள்
3. சான்று பெற்ற மாதிரி பொருட்கள்
4. கணிணியிலிருந்து பெறப்பட்ட குறுந்தகடுகள், படங்கள், ஒலி நாடாக்கள் அதன் வடிவங்கள் மற்ற ஏதாகிலும்.

(ஓ) **மாநில தகவல் ஆணையம் :** இந்த சட்டத்தில் உபபிரிவு-1, பிரிவு 15-ல் சொல்லப்பட்டவை.

(ஔ) **மாநில தலைமை தகவல் ஆணையர் :** பிரிவு-15, உபபிரிவு 3-ன்படி நியமிக்கப்பட்டவர் ஆவார்.

(ஃ) **மாநில பொது தகவல் அலுவலர் மற்றும் பொது தலைவர்:** உபபிரிவு-1, 2 பிரிவு 5-ன்படி நியமிக்கப்பட்டவர் ஆவார்.

இந்த சட்டத்தின்படி தகவல் கேட்பவரையும் தகவல் தருபவரையும், தகவல் தரும் அமைப்பையும் தவிர வேறு ஒருவர் ஆவார்.

## 3. தகவல் பெறும் உரிமை.

இந்த சட்டத்தின்படி இந்திய பிரஜைகள் அனைவரும் தகவல் பெறும் உரிமை உடையவர்கள் ஆவார்.

பிரிவு - 20

பிரிவு 7-யில் உபபிரிவு 1-ல் கொடுக்கப்படவேண்டிய தகவல்கள் தவறும் பட்சத்தில், தவறிய ஒவ்வொரு நாட்களுக்கும் ரூ. 250-ம் ரூ. 25,000-ஆயிரம் மிகாமலும் அபராதம் விதிக்கப்படும். அத்துடன் இலாக்கா பூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

## 4. பொருளாதார அவமதிப்பு

வரதட்சணை , பொருளாதாரம், வீட்டு உபயோகம் பொருட்கள் அல்லது தேவையான பொருட்கள் கொண்டு வரவில்லை என்று கணவனோ அல்லது உறவினர்களோ, வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்துவது.

வரதட்சணை, தாய் வீட்டு சீதனம், விலைமதிப்புள்ள பொருட்கள், அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் ஏன் கொடுக்கவீல்லை என்று அவமானப்படுத்துதல்.

குடும்ப சூழ்நிலையின் காரணத்தைக் காட்டி தாய் வீட்டிலிருந்து சொத்தை பிரித்து தருமாறு கூறுதல்.

பிரிவு - 20

## பொருளாதார நிவாரணம்

1. எந்த ஒரு குற்றவியல் நடுவரும் பிரிவு 12-ன் உபபிரிவு 1-ல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மனுவுக்கு முடிவை தெரிவிக்கும் வகையில் இந்த சட்டத்தின்படி பாதிக்கப்பட்ட நபருக்கு கீழ்காணும் நிவாரணங்களை அளிக்கலாம்.

இயக்கப்பட்ட ஊதியங்கள்;

மருத்துவ செலவுகள்;

இடிக்கப்பட்ட ஊறுவிளைவிக்கப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட சொத்தின் மதிப்பு;

பாதிக்கப்பட்ட நபருக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் குற்றவியல் சட்டம் 1973-யில் பிரிவு-125-ல் சொல்லியப்படி.

2. இந்த பிரிவின்படி பொருளாதார நிவாரணம் அளிக்கும்போது பாதிக்கப்பட்டோருக்கு தரம் குறையாத வாழ்க்கை.

3. அந்த குற்றவியல் நடுவர் பாதிக்கப்பட்ட நபருக்கு நிர்வாக செலவுக்காக மொத்தமாக அல்லது மாத தவணையாக அளிக்க உத்தரவு இடலாம்.

4. இது சம்மந்தமாக அளிக்கப்பட்ட உத்தரவின் நகல்களை அந்த சரக நிலையத்திற்கு அனுப்பி பிரதிவாதி தன் கடமையை செய்கிறாரா என உத்தரவு இடலாம்.

# பெண்கள் பாதுகாப்பு குடும்ப வன்முறைச் சட்டம்

# PROTECTION OF WOMEN FROM DOMESTIC VIOLANCE ACT-2005

பிரிவு - 1

(அ) இந்த சட்டம் பெண்கள் பாதுகாப்பு குடும்ப வன்முறைச் சட்டம்-2005 என்பதாகும்.

(ஆ) இந்த சட்டம் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும். ஜம்மு காஷ்மீரைத் தவிர.

(இ) இந்த சட்டம் அரசிதழில் வெளியான தேதியிலிருந்து அமுலுக்கு வருகிறது.

பிரிவு - 3

## குடும்ப வன்முறை விளக்கம்

## Defination of Domestic Violance

இந்த சட்டத்தின்படி ஒரு செயல் செய்யாவிட்டாலும் செய்தாலும் பிரதிவாதியின் நடத்தையால் வாதிக்கு குடும்ப வன்முறையால் ஏற்படுத்துவதாகும். அவைகள்.

1. தீங்கு, காயம், ஆபத்து என்பது உடல் நலத்திற்கும் பாதுகாப்பிற்கும், உயிருக்கும், அங்க அவையத்திற்கும் ஊறுவிளைவிப்பதாகும். இவை மனத்திற்கும், உடல் நலத்திற்கும் வாதிக்கு பாதிப்பு ஏற்படுவது. மேலும் உடற்கொடுமை, பாலியல் கொடுமை, வார்த்தை மற்றும் ஆக்ரோஷத்தில் பொருளாதார தன்மைப்பற்றி அல்லது,
2. கொடுமை, தீங்கு, காயங்களால் உயிருக்கு ஆபத்து போன்ற செயல்கள் வாதியை வரதட்சணை அல்லது மதிப்பு மிக்க சொத்துகேட்டு வற்புறுத்துவது.
3. பாதிக்கப்பட்ட நபரை மிரட்டி கிளைக்கூறில் A(அ), B-யில் கேட்பது.
4. உடலாலும், உள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட நபருக்கு தீங்கு விளைவித்தல்.

**விளக்கம்:**

உடல் பாதிப்பு, எந்த ஒரு செயலும் பாதிக்கப்பட்ட நபருக்கு உடல்வலி, உடல்தீங்கு அல்லது உயிருக்கு ஆபத்து ஆகியவைகளை பிரதிவாதி மிரட்டுவது பலத்தை உபயோகப்படுத்துவது.

**பாலியல்கொடுமை:**

வாதியை மானபங்கம் படுத்துவது, பாலியல் ரீதியாக வன்முறைசெய்வது ஆகும். மேலும் ஆக்ரோஷ வார்த்தைகள், கேலி செய்வது, பெயரைச்சொல்லி கேலி செய்வது, குடும்பத்தை கேலி செய்வது, குழந்தை (அல்லது) ஆண் குழந்தை இல்லை என்று திட்டுவது. உடலையும், மனதையும் மீண்டும் மீண்டும் காயப்படுத்துவது.

**பொருளாதார அவமதிப்பு:**

வரதட்சணை, பொருளாதாரம், வீட்டு உபயோகப்பொருட்கள் அல்லது தேவையான பொருட்கள் கொண்டுவரவில்லை என்று கணவனோ அல்லது கணவரின் உறவினர்களோ, வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்துவது.

வரதட்சணை, தாய் வீட்டு சீதனம், விலைமதிப்புள்ள பொருட்கள், அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் ஏன் கொண்டுவரவில்லை என்று அவமானப்படுத்துதல்.

குடும்ப வன்முறையின் காரணத்தைக்காட்டி தாய் வீட்டிலிருந்து சொத்தை பிரித்துதருமாறு கூறுதல்.

## பிரிவு - 5

## பாதுகாப்பு அதிகாரிகளின் பணிகள், பணி விழையோர் குற்றவியல் நடுவர்
## Duties of Police Officer, Service Provided and Magistrate

எந்த ஒரு காவல் அலுவலரும் காவல் அதிகாரிகளின் பணிகள், பணி விழையோர் குற்றவியல் நடுவர். இந்த சட்டத்தின்படி பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து புகார் வரும்போது அவர் பாதிக்கப்பட்ட நபரிடம் கீழ்க்கண்டவற்றை பெருமாறு ஆலோசனை கூறலாம்.

(அ) நிவாரணம் மற்றும் பாதுகாப்பு வேண்டி விண்ணப்பிக்குமாறு கோரலாம்.

(ஆ) உறைவிடம் மற்றும் தேவையான உதவிப்பணிகள்.

(இ) பாதுகாப்பு அதிகாரியிடம் இருந்து தேவையான பாதுகாப்பு பணிகள்

(ஈ) இலவச சட்ட உதவி

(உ) இந்திய தண்டனைச் சட்டப்படி பிரிவு 498 A-படி புகார் செய்ய

பிரிவு - 8

## பாதுகாப்பு அதிகாரியை நியமித்தல்

எந்த ஒரு மாநில அரசாங்கமும் இந்த சட்டத்தின்படி பாதிக்கப்பட்டவரிடம் இருந்து புகாரை பெறுவதற்கும் நிவாரண பணிகள் செய்வதற்கும் ஒரு பாதுகாப்பு அதிகாரியை நியமிக்கவேண்டும்.

பிரிவு - 9

## பாதுகாப்பு அதிகாரியின் பணிகள் மற்றும் கடமைகள்

இந்த சட்டத்தின்படி குற்றவியல் நடுவருக்கு உதவுதல்.

1. குடும்ப வன்முறை பற்றிய நிகழ்வுகளை புகார்தாரரிடம் இருந்து பெற்ற விண்ணப்பத்தை பரிசீலனை செய்து தனது அதிகார வரம்பிற்கு உட்பட்ட நடுவர் அவர்களுக்கும் காவல்துறை அதிகாரிக்கும் அனுப்பிவைத்தல்.
2. பிரதிவாதியால் வாதிக்கு (பெண்ணுக்கு) குடும்பத்தில் செய்யும் எந்த ஒரு வன்முறையும்.
3. பாதிக்கப்பட்டவருக்கு தேவையான பணிகள் செய்வித்தல்.
4. இந்த சட்டத்தில் கூறியபடி பாதிக்கப்பட்டவருக்கு இலவச சட்ட உதவிக்கு உதவுதல்.
5. பாதிக்கப்பட்டவருக்கு ஆலோசனை தங்கும் இடம், மருத்துவ வசதி ஆகியவை செய்தல்.
6. உட்பிரிவு பிரிவு-5-ல் கூறியபடி பாதிக்கப்பட்ட நபருக்கு தேவையான உறைவிடத்தை செய்துக்கொடுத்தல் அதைப்பற்றிய விபரத்தை காவல் அதிகாரிக்கும் நடுவருக்கும் தெரிவிக்க வேண்டும்.
7. உட்பிரிவு 5-ல் கூறியப்படி பாதிக்கப்பட்ட நபருக்கு தேவையான மருத்துவ உதவி செய்துகொடுத்து அதைப்பற்றி விவரத்தை காவலருக்கும் நடுவருக்கும் தெரிவிக்கவேண்டும்.

பிரிவு - 20

## பொருளாதார நிவாரணம்

எந்த ஒரு குற்றவியல் நடுவரும் பிரிவு 12-ன் உபபிரிவு 1-ல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மனுவுக்கு முடிவை தெரிவிக்கும் வகையில் இந்த சட்டத்தின்படி பாதிக்கப்பட்ட நபருக்கு கீழ்காணும் நிவாரணங்களை அளிக்கலாம்.

1. இழக்கப்பட்ட வருமானங்கள், ஊதியங்கள்
2. மருத்துவ செலவுகள்
3. இடிக்கப்பட்ட ஊறுவிளைவிக்கப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட சொத்தின் மதிப்பு

4. (அ) பாதிக்கப்பட்ட நபருக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் குற்றவியல் சட்டம் 1973-யில் பிரிவு-125 தில் சொல்லியபடி

(ஆ) இந்த பிரிவின்படி பொருளாதார நிவாரணம் அளிக்கும்போது பாதிக்கப்பட்டோருக்கு தரம்குறையாத வாழ்க்கை.

(இ) அந்த குற்றவியல் நடுவர் பாதிக்கப்பட்ட நபருக்கு நிர்வாக செலவுக்காக மொத்தமாக அல்லது மாத தவணையாக அளிக்க உத்தரவு இடலாம்.

(ஈ) இது சம்மந்தமாக அளிக்கப்பட்ட உத்தரவின் நகல்களை அந்த சரக காவல் நிலையத்திற்கு அனுப்பி பிரதிவாதி தன் கடமையை செய்கிறாரா என உத்தரவு இடலாம்.

(உ) உபபிரிவு 1-ல் கூறிய அனைத்து நிவாரணங்களையும் குறித்த காலத்தில் பிரிதிவாதி செய்தல் வேண்டும்.

(ஊ) உபபிரிவு 1-ல் கண்டபடி ஒரு பிரதிவாதியை பாதிக்கபப்பட்ட நபருக்கு அவருடைய மாதாந்திர சம்பளம் அல்லது ஊதியம் மொத்தமாக நிவாரணமாக கொடுக்க உத்தரவு இடலாம்.

## பிரிவு- 31

## பிரதிவாதி பாதுகாப்பு உத்தரவு மீறும்போது தண்டனை

ஒரு குற்றவியல் நடுவரால் பிறப்பிக்கப்பட்ட பாதுகாப்பு உத்தரவை (அல்லது) இடைக்கால உத்தரவை இந்த சட்டத்தின் படி பிரதிவாதி மீறுவாரேயானால் குறைந்த பட்சம் ஒரு வருடம் சிறை தண்டனையும் அல்லது ரூ. 20,000க்கு குறையாத அபராதமும் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்,

உபபிரிவு 1-ல் குற்றவியல் நடுவரால் வழங்கப்பட்ட உத்தரவை குற்றவாளி மீறும் பட்சத்தில்.

உபபிரிவு 1-ல் குற்றம் பதிவுசெய்யும் நடுவர் இந்திய தண்டனைச் சட்டம் 498-A அல்லது வரதட்சனைக் கொடுமை சட்டம் 1961-ஆம் ஆண்டு எந்த பிரிவிலும் அவர் செய்யும் குற்றத்தை பொருத்து அந்தந்த சட்டத்தின்படி குற்றத்தை பதிவு செய்யலாம். .

* * *